# முஸ்லிம் குரல்

கவடு - 06 | தருகை - 10 ரூபா

Muslim Kural | මුස්ලිම් කුරල්

28 மார்ச் 2003 - வெள்ளிக்கிழமை | 24 - முஹர்ரம் - 1424 | Registered as a Newspaper in Srilanka



ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் உங்கள் கரங்களில்... வார இதழாக மக்கள் கருத்துக்களுடன்!


## "கொல்வதே இலட்சியம்" பைத்தியக்காரன் புஷ்



ஈராக் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போர் தொடங்கி 10 தினங்களாகிவிட்டன. அநியாயமானதும் கொடூரமானதுமான இப்போர் ஈராக் மக்கள் அனைவரையும் அழித்தாலும் ஓய்ந்து விடப்போவதில்லை. அமெரிக்காவின் இன்றைய அடங்காத ஆக்கிரமிப்புப்பசிக்கு அடுத்து ஈரான், சிரியா, வட கொரியா, என இவ்வழிப்பு யுத்தம் தொடரத்தான் போகிறது. முழு மனித குலமுமே வெட்கித்தலை குனியும் இவ்வாக்கிரமிப்புக்குப் பின்னால் இருப்பது அமெரிக்காவின் ஆதிக்க அடக்குமுறை பசிதான்.

இராணுவம், தொழில்நுட்பம், பொருளாதாரம், பண்பாடு, அரசியல் என அது உலகையே விழுங்கி ஏப்பமிடத்துடிக்கின்றது.

அமெரிக்காவின் உருவாக்கத்தின் பின்னால், சரித்திரத்தில் படிந்திருக்கும் அதன் அடங்காத இரத்தவெறியும் ஆதிக்க அதிகாரத்தின் தீராத பசியும் மனித குலத்திற்கு எப்போதுமே பலத்த சவால்தான்.

உலகில் மிகப்பெருந்தொகையான அழிவு ஆயுதங்களை உற்பத்தி செய்யும் நாடு அமெரிக்காதான். அப்பாவிப்பொதுமக்கள் மீது அணுகுண்டையும் நாசகார ஆயுதங்களையும் வீசி சுதந்திர மக்களை அழித்து வருவது அமெரிக்காதான். அப்படியாயின் உலக சமாதானத்திற்கு யார் அச்சுறுத்தல்?

ஈராக் - ஐக்கிய நாடுகள் சபையை மதிப்பதில்லை என புஷ் பிதற்றுகிறான். அமெரிக்காவும் இஸ்ரேலும் தொடர்ந்தும் ஐக்கிய நாடுகள் சபையை அலட்சியம் செய்யவில்லையா? இன்றைய இந்த யுத்தம் ஐக்கிய நாடுகள் சபையின் ஆசீர்வாதத்தோடு உலக மக்களின் ஆதரவுடனா தொடங்கப்பட்டுள்ளது? 64 தடவைகளுக்கு மேலாக ஐக்கிய நாடுகள் சபையின் உத்தரவினை மீறி - தொடர்ந்தும் பலஸ்தீன மக்களைக் கொன்றொழிக்கும் இஸ்ரேல்மீது குண்டு வீசுவானா இந்த பைத்தியக்காரன் புஷ்.

# நடைபெறும் அரசியல் பேச்சுவார்த்தையை மூன்று தரப்புகளாக்க முடியவே முடியாது!

## பி.பி.ஸியில் அன்டன் பாலசிங்கம்

(அரசியல் செய்தியாளர்)

அடுத்ததாக நடைபெறவுள்ள 7 ஆம் கட்ட பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்வதற்கான வாக்குறுதியை அரசாங்கத்திடமிருந்து "வடக்கு கிழக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் ஒன்றியம்" பெற்று விட்டதாக நமது மக்களுக்கு சொல்லப்பட்ட ஒருவார காலத்திற்குள், விடுதலைப் புலிகளின் தரப்பிலிருந்து அன்டன் பாலசிங்கம் "நடைபெறும் அரசியல் பேச்சுவார்த்தை மேசையில் முஸ்லிம்கள் தனித்துவத் தரப்பாக கலந்து கொள்ளவே முடியாது" என உறுதியுடன் தெரிவித்து விட்டார். விடுதலைப் புலிகளின் இவ் உத்தியோக பூர்வமான நிலைப்பாட்டை அன்டன் பாலசிங்கத்தின் குரலின் ஊடாக பி.பி.ஸி கடந்த வாரம் ஒலிபரப்பியது.

இலங்கை முஸ்லிம்களின் சுயாதீனமான அரசியல் உரிமையை, மிக வெளிப்படையாக அரசியல் ஆணவத்தோடு விடுதலைப் புலிகள் கால்களின் கீழ்போட்டு மிதித்த தருணங்களில் இதுவுமொன்று. இவ் ஆணவத்தின் குரலை - நமது தலைமைகளையும் அருகில் வைத்துக் கொண்டே டோக்கியோ பேச்சுவார்த்தை முடிவடைந்த கையுடன் பிபிஸி செய்திச் சேவைக்கு அளித்த பேட்டியில் அன்டன் பால்சிங்கம் வெளிப்படுத்தியுள்ளார்.

முஸ்லிம்களுக்கான தனித்த அதிகார அலகையும் இனப்பிரச்சினைத் தீர்வில் முஸ்லிம்களுக்கான தனித்துவமான தரப்பையும் ஏற்றுக் கொள்ள முடியாது என, விடுதலைப் புலிகள் தங்களது உத்தியோக பூர்வமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி இருப்பதானது முஸ்லிம்களின் தேசிய இன அந்தஸ்தை மறுப்பதிலும், முஸ்லிம்களின் சுயநிர்ணய உரிமையை நிராகரிப்பதிலும், முஸ்லிம்களின் தாயக உரிமத்தை தட்டிக்கழிப்பதிலும் மிக உறுதியாக இருப்பதனை நிரூபணமாக்குகிறது.

முஸ்லிம்களை தேசிய இனப்பிரச்சினையில் நேரடியாக சம்பந்தப்படாத தரப்பாகவும் - ஒரு கலாசார குழுவாகவுமே விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருகின்றனர். அடக்கியொடுக்கி தங்களது ஆதிக்க அதிகாரத்தினுள் முஸ்லிம்களை சரணடைய வைத்து விடலாம் என்பதே விடுதலைப் புலிகளின் தலைமை தொடக்கம் தமிழ் கூட்டமைப்பு வரையான குரலாகும்.

புரிந்துணர்வு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு, அரசியல் பேச்சுவார்த்தை தொடங்கி பல மாதங்கள் கடந்து விட்ட நிலையில் சாக்குப் போக்கு சொல்லி, எதிரும் புதிருமாக நின்று அரசியல் சதுரங்கம் ஆடி, காலத்தைக் கடத்தி விட்டு, ஒருவாறாக இப்போது "வடக்கு கிழக்கு முஸ்லிம் பாராளுமன்ற ஒன்றியத்தை உருவாக்கி, பிரதமர் ரணிலிடம் 7 ஆம் கட்ட பேச்சுவார்த்தையில் தனித்தரப்பாக முஸ்லிம்கள் போகலாம். என்ற அரசியல் வாக்குறுதி பெறப்பட்டுள்ளது என முஸ்லிம் பாராளுமன்ற ஒன்றியப் பிரதிநிதிகள் நமது மக்களுக்கு தெரிவித்துள்ளனர்.



ஆனாலும் இதுவரை பிரதம மந்திரி அலுவலகமோ அல்லது அரசாங்கத்தரப்போ விக்கிரமசிங்கவின் இவ் உடன்பாட்டை இன்னும் உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தவில்லை. முஸ்லிம்களின் பாராளு மன்ற பிரதிநிதிகளான ரவூஃப் ஹக்கீம், நூர்தீன் மசூர், பேரியல் அஷ்ரஃப் ஆகியோர் தலைமையிலான அரசியல் அணிகளுக்கே இவ்வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது என அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமகால முஸ்லிம்களின் அரசியல் சூழலில் இவ் ஒன்றியத்தினூடாக பேச்சுவார்த்தை மேசையில் முஸ்லிம்களின் சமத்துவத் தரப்பு அரசியல் நிலைப்பாடு ஐக்கியப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. முஸ்லிம்களின் இவ் அடிப்படையான அரசியல் கோரிக்கையை ரணில்விக்கிரமசிங்கவின் அரசாங்கம் ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்த தீர்மானம் எடுப்பதே புதிய அரசாங்கத்தை ஸ்தாபிப்பதில் பங்காற்றிய முஸ்லிம்களுக்கு அரசாங்கம் செய்யும் கைமாறாகும்.

# அப்பாவி மக்களை ஆதிக்கத் திமிரினால் கொல்லாதே!



உலக வரலாற்றில் மோசமான கண்ணீரும் இரத்தமும் நிறைந்த ஒரு அத்தியாயத்தை அமெரிக்காவும் பிரிட்டனும் மீண்டும் ஆரம்பித்து வைத்துள்ளன. கடந்த வியாழக்கிழமை 20 ஆம் திகதி அதிகாலை ஈராக் மீது மிகக் கொடூரமான தாக்குதலை தொடுத்ததன் மூலம் இந்த கறுப்பு அத்தியாயத்தை அமெரிக்காவும், பிரிட்டனும் எழுத ஆரம்பித்துள்ளன. இதன் முடிவு எப்படி அமையும் என்பதை இப்போதைக்கு எவராலும் ஊகிக்க முடியாது.

யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து இன்று வரை, யுத்தம் பற்றிய பல்வேறு தகவல்களையும் அலசி ஆராய்கின்ற போது "நாங்கள் நினைத்தது போல் இந்த யுத்தம் இலகுவானதுமல்ல எதிர்பார்த்தது போல் இலகுவில் முடிக்கக் கூடியதுமல்ல" என்ற ஜோர்ஜ் புஷ்ஷின் கூற்று மெய்ப்பிக்கப்படக் கூடியது என்று கருதத் தோன்றுகின்றது.

உலகின் மிக நவீனமான போர்க் கருவிகளுடனும் யுத்த மூலோபாயத் திட்டங்களுடனும் மிகச் சிறந்த பயிற்சியளிக்கப்பட்ட வீரர்களுடனும் நகர்வை ஆரம்பித்த அமெரிக்க பிரிட்டிஷ் கூட்டுப்படைகள் இப்போது இடைநடுவில் சிக்கி முன்னேறவும் முடியாமல், பின்னேறவும் முடியாமல் தடுமாறிக் கொண்டிருப்பதாக நடுநிலையான செய்தி நிறுவனங்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவைப் பொறுத்த மட்டில் உலகில் எந்தப் பகுதியிலாவது தனக்கு பிடிக்காதவர்கள் ஆட்சியிலிருந்தால் அவர்களைத் தீர்த்துக் கட்ட முடிவு செய்வதும், அதற்காகத் தனது கூலிப்படையைப் பயன்படுத்துவதும் ஒன்றும் புதிய விடயமல்ல.

1947 ஆம் ஆண்டிலிருந்து கடல் கடந்த நாடுகளில் கலவரங்களை உண்டு பண்ணுவதிலும், தலைவர்களைத் தீர்த்துக் கட்டுவதிலும் அமெரிக்கா ஈடுபட்டு வருகின்றது. உலக நாடுகளில் சீ.ஐ.ஏ. இதுவரை இவ்வாறான சுமார் 2000 அரசியல் கலவரங்களையும், அமைதியின்மையையும் தோற்றுவித்துள்ளதாக சீ.ஐ.ஏ.யின் கேவலமான கடந்தகால வரலாறு கூறுகின்றது.

ஈராக் மீதான அமெரிக்காவின் மூர்க்கத்தனமான, அநாகரிகமான தாக்குதலுக்கு உலகம் முழுவதும்



நாளாந்தம் எதிர்ப்புகள் வலுவடைந்து வருகின்றன.

அமெரிக்கா யுத்தத்தைத் தொடங்குவதற்கு முன்பதாகவே உலகில் ஜீவராசிகள் அற்ற வடக்குத் தெற்கு முனைகளைத் தவிர, மற்றைய எல்லாப் பகுதிகளிலும் மக்கள் யுத்தத்திற்கு எதிராக கிளர்ந்தெழுந்தனர். இந்த தாக்குதல் கூட்டணியில் முக்கிய பங்கு வகிக்கும் அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் யுத்தத்திற்கு எதிராக வரலாறு காணாத அளவுக்கு மக்கள் திரண்டெழுந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவை அனைத்துமே சதாம் ஹுசைன் என்ற தனி மனிதனுக்கு ஆதரவாகவோ அல்லது அவரது ஆளும் பாத் கட்சிக்கு ஆதரவாகவோ அல்லது புரட்சிகர ஆட்சிக்கு ஆதரவாகவோ நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் அல்ல. இந்த ஆர்ப்பாட்டங்களின் போது எழுப்பப்பட்ட கோஷங்கள் கூட, சதாம் என்ற நபருக்கோ அல்லது அவரின் அரசுக்கோ ஆதரவானதுமல்ல. இவை எல்லாமே ஒட்டுமொத்தமாக ஈராக்கின் அப்பாவி மக்களுக்கு ஆதரவாக இடம்பெற்றவை தான். ஈராக்கிலுள்ள அப்பாவி மக்கள் மீதான மனிதாபிமான அனுதாபத்தின் வெளிப்பாடாகத்தான் இவை கருதப்பட்டன. அமெரிக்கா பிரிட்டன் ஆகிய நாடுகள் கூட, இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு அரசியல் சாயம் பூச முனையவில்லை. அரசியல் கண்ணாடிகளுக்கூடாக இந்த ஆர்ப்பாட்டங்களை எந்தவொரு நாடும் நோக்கவில்லை.

ஆனால், ஈராக்கிய மக்களுக்கு ஆதரவாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தையும் எழுப்பப்பட்ட கோஷங்களையும் அரசியல் மயப்படுத்தி அந்த ஆர்ப்பாட்டங்களில் பொதிந்திருந்த மனிதாபிமானத்தைக் கொச்சைப்படுத்திய ஒரே அரசாங்கம் இலங்கை அரசாங்கம்தான்.

முஸ்லிம்களை பிரதிநிதித்துவம் செய்வதாக கூறிக் கொள்ளும் அரசியல் தலைவர்கள் எவரும் (ஒரு சிலரைத் தவிர) ஈராக் மக்களுக்கு ஆதரவாக தமது ஒருமைப்பாட்டைத் தெரிவிக்க முன்வரவில்லை. வெளிவிவகார அமைச்சரும், உட்துறை அமைச்சரும் ஒரேவிதமான கருத்துக்களை வெளியிட்டு முஸ்லிம்களை அவமானப்படுத்தி விட்டனர். சர்வதேச ரீதியாக இஸ்லாத்துக்கும், முஸ்லிம்களுக்கும் எதிரான போராட்டத்தை அமெரிக்கா முன்னின்று அரங்கேற்றி வருகின்றது.

இதற்கு அமெரிக்காவின் அடிவருடி நாடுகள் பல துணைபோகின்றன. ஆனால் மனிதாபிமான ரீதியில் நடுநிலையாக சிந்திக்கும் நாடுகள் பல இதனை வன்மையாக எதிர்க்கின்றன. இந்தப்பட்டியலில் இலங்கை எந்த அணியில் இடம்பெறுகின்றது என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டிய காலகட்டத்தில் முஸ்லிம்கள் உள்ளனர். முஸ்லிம்களை ஆட்சிப் பங்காளர்களாகக் கொண்டுள்ள நமது நாட்டு ஐக்கிய தேசிய முன்னணி அரசின் நிலைப்பாடு என்ன? ஐக்கிய நாடுகளின் முடிவுகளுக்கு ஈராக் இணங்கிப் போகவேண்டும் என வெளியுறவு அமைச்சர் திரும்பத் திரும்பக் கூறுகிறார். ஐக்கிய நாடுகள் சபையின் எந்த முடிவோடு ஈராக் ஒத்துப்போகவில்லை என இவரால் தெளிவாகக் கூறமுடியுமா? ஈராக் நிலையைப் பற்றி அரசு வெளியிட்டுள்ள அறிக்கையை வாசித்தால் தலை சுற்றுகிறது. ஒன்று மட்டும் நன்றாக நிச்சயமாகத் தெரிகின்றது. அதாவது இந்த விடயத்தில் தமது எஜமானான அமெரிக்காவுக்கு எதிராக ஒரு வார்த்தையைக் கூட பிரயோகிக்க அரசாங்கம் தயாராகயில்லை.

இலங்கையின் தேயிலையை பெருமளவில் கொள்வனவு செய்யும் ஒரு நாடு ஈராக். ஈராக்கில் யுத்தம் காரணமாக மத்திய கிழக்கில் தொழில்புரியும் ஆயிரக்கணக்கான இலங்கை தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். இலங்கையின் ஏற்றுமதி கணிசமான அளவு பாதிக்கப்படும்.

முதல் நான்கு நாள் யுத்தத்தின் காரணமாகவே இலங்கையின் தேயிலை ஏற்றுமதி 40 வீதம் வீழ்ச்சி கண்டுள்ளதாக வர்த்தகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு எத்தனையோ நேரடியான பாதிப்புகளுக்கு இலங்கை முகம் கொடுக்க வேண்டியிருக்கும். இந்த நலன்களை மனதில் கொண்டாவது "ஈராக் தாக்கப்படக் கூடாது" என்ற ஒரு வசனத்தை பெயரளவிலாவது இலங்கை அரசு வெளியிட்டிருக்கலாம். இலங்கை முஸ்லிம்களுக்கு அது பெரும் ஆறுதலாகவிருந்திருக்கும். முற்போக்கு சக்திகளுக்கும் மன நிறைவைத் தந்திருக்கும் ஆனால் ஆகக்கூடிய முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களையும், முஸ்லிம் அமைச்சர்களையும் ஆட்சியில் பங்காளியாக முஸ்லிம்களையும் கொண்டுள்ள இன்றைய அரசாங்கம் அதை செய்யத் தவறி விட்டது. அரசாங்கத்தினதும் நமது அரசியல் தலைமைகளினதும் இப்போக்கை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

*இப்னு சுல்தான்*

## அமெரிக்க செய்தி ஊடகங்களின் கட்டுக்கதையை தகர்த்தெறிந்த சதாமின் தொலைக்காட்சி உரை!

அன்புள்ளம் கொண்ட ஈராக் மக்களே! உணர்வு மிக்க போராளிகளே! வீரச்சிங்கங்களே! படைவீரர்களே!

இறைவனுடைய உதவியும், அவனுடைய அருளும் எம்முடன் இருந்து கொண்டிருக்கிறது. இறைவனைத்தவிர வேறு யாருக்கும் நாம் அஞ்ச வேண்டியதில்லை. விரோதிகள் எம்மை சக்தியற்றவர்கள் என்றெண்ணி, எம்மைத் தாக்குவதற்கு வழி தேடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் இறைவனின் உதவி எம்முடன் இருந்து கொண்டிருக்கிறது.



சுதந்திரமிக்க எமது வீரப் போராளிகளே! பலமிக்க ஆயுதங்களைக் கொண்டும்; ஏவுகணைகளைக் கொண்டும் இலகுவில் எம்மைத் தாக்கி அழித்து விடலாமென்று புஷ்ஷும், அவனுடைய அடிவருடிகளும் பகற்கனவு கண்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை மெய்ப்படுத்துவதற்கு நமது சுதந்திர மிக்க புனித நாட்டுக்குள்ளே ஆக்கிரமிப்பாளர்கள் அத்துமீறிப் பிரவேசித்திருக்கிறார்கள். அவர்கள் இப்போது எமது மண்ணிலிருக்கிறார்கள். அவர்கள் முன்பிருந்ததை விட இப்போது வசமாக மாட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

வீரத்துடன் அவர்களைத் தாக்கி அழியுங்கள். அந்த நேரத்தில் உங்களுக்கு ஏதாவது நேர்ந்தால் நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் உயிர் நீத்த உத்தமர்களாவீர்கள். உங்களையும் உங்களது வீரத்தையும் உங்களுக்குப் பின்னான சமுதாயம் வீரத் தியாகிகளாக நினைவுகூரும்.

பெருமைமிகு புனிதப் போராளிகளே! இன்று அமெரிக்காவும் அதன் அடிவருடிகளும் முஸ்லிம் நாடுகளுக்குள் புகுந்து, அவர்களுக்கிடையில் பிரச்சினைகளை, பிளவுகளை ஏற்படுத்தி அவர்களுக்குள்ளேயே குரோதத் தன்மைகளை வளர்த்து விட்டு, அந்த சகோதர நாடுகளுக்குள்ளே போரைத் தொடுக்க வைத்து, குளிர்காய்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்நாடுகளின் சொத்து சுகங்களை தங்கள் வசம் வைத்துக் கொண்டு ஒவ்வொரு முஸ்லிம் நாடுகளையும் அடிமைப்படுத்தி வருகிறார்கள். இந்த அமெரிக்காவின் ஏகாதிபத்திய சர்வதிகாரத்திற்கு சில முஸ்லிம் நாடுகள் அடிமையாகிவிட்டன.

என் அன்பு மக்களே! பலஸ்தீனத்தில் நமது சகோதரர்களுக்கு இஸ்ரேலிய வெறியர்களால் நடைபெறுகின்ற அட்டூழியங்களையும், அநீதிகளையும் பார்க்கவில்லையா? இதற்கெல்லாம் காரணம் அமெரிக்காவும் அதனுடைய நேச நாடுகளும்தான். இதோ அந்த கயவர்கள் எமது நாட்டுக்குள் எம்மை அழிப்பதற்கு புகுந்திருக்கிறார்கள். வீரத்துடன் அவர்களுக்கு எதிராக நின்று போர் புரியுங்கள். இறைவனுடைய உதவி எப்போதும் எம்மோடு இருக்கின்றது.

நாங்கள் அமெரிக்காவுக்கோ அல்லது, அதன் அடிவருடிகளுக்கோ, பயப்படவும் மாட்டோம் அடிபணியவும் மாட்டோம். இறுதி மூச்சி வரை போராடுவோம். இறைவனுக்கு மாத்திரம்தான் அஞ்சுகிறோம். அவனுக்கு மாத்திரம்தான் அடிபணிவோம்.

அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர்!! அல்லாஹு அக்பர்!!!


இலங்கை முஸ்லிம்களின் சொந்தக்குரல்! சுதந்திரக்குரல்!! ஆதரவு தாருங்கள், வாங்கிப் படியுங்கள், எழுதுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்களிடமிருந்து மனுக்கள்... நடவடிக்கைக்காக...

## மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரியிலிருந்து முஸ்லிம் யுவதிகளை விரட்ட திட்டமிட்ட சதி

தாதியர் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டுப் பயிற்சிக்குச் சென்ற முஸ்லிம் பெண் தாதி மாணவிகள் திட்டமிட்ட முறையில் பல்வேறு இம்சைகளுக்குள்ளாக்கப்பட்டு மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரியிலிருந்து விரட்டியடிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

சுகாதார சேவைத் திணைக்களம் சமீபத்தில் நடத்திய நேர்முகப் பரீட்சையிலிருந்து கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 46 முஸ்லிம் யுவதிகள் தாதியர் பயிற்சிக்குத் தெரிவாகினர். இதன்படி சுகாதார சேவைத் திணைக்களத்தின் செயலாளர் நாயகம் டொக்டர் றெஜி பெரேராவினால் அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம் கடந்த 04-11-2002 அன்று இந்த முஸ்லிம் மாணவிகள் மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்றுள்ளனர்.

முதல் நாளாகையால் அங்கு தமது வழமையான முஸ்லிம் உடையுடன் (ஹிஜாப்) சென்ற மாணவிகள் தாம் முஸ்லிம் உடை அணிந்திருந்ததற்காக மிக மோசமான முறையில் அங்குள்ள அதிபர் மற்றும் பயிற்சித் தாதிகளினாலும் இம்சைக்குள்ளாக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டுள்ளார்கள்.

தலைமை பயிற்சித்தாதி திருமதி. அலோசியஸ் என்பவர் வருகைப் பதிவுக்காக வந்திருந்த முஸ்லிம் பெண் தாதியர்களைத் தமது முஸ்லிம் உடைகளை உடனடியாகக் களைந்தெறியுமாறு கோரியதுடன் அதற்குப் பதிலாக குட்டையான உடைகளை அணியுமாறு கேட்டுள்ளார்.

முஸ்லிம் தாதி மாணவிகள் தமது இஸ்லாமிய கலாச்சாரப்படி தாதியர் பயிற்சிக் கல்லூரி வரையிலாவது இஸ்லாமிய உடைகளை அணிந்து வர முடியுமா? என திருமதி அலோசியஸிடம் கேட்டபோது "நீங்கள் இஸ்லாமிய உடையுடன் இங்கோ அல்லது தாதியர் பயற்சிக் கல்லூரிச் சூழலிலோ நடமாட முடியாது" என்று எச்சரித்துள்ளார்.

இந்த நெருக்கடி நிலைமையினால் முதல் நாளன்றே பயிற்சிக்குத் தெரிவாகிய 46 முஸ்லிம் யுவதிகளில் மூன்று பேர் வீடு திரும்பிவிட்டனர். 05-11-2002 அன்றும், 06-11-2002 அன்றும் ஏனைய முஸ்லிம் மாணவிகள் தமது வீடுகளிலிருந்தும், தாம் தங்கியிருக்கும் விடுதிகளிலிருந்தும், தாதியர் பயிற்சிக் கல்லூரி வரை இஸ்லாமிய உடையுடன் சென்று அங்கு தெருவோரத்தில் வைத்து தாதியர் சீருடை மாற்றிக் கொண்டு வகுப்புகளுக்குச் சென்றுள்ளனர்.

06ம் திகதியிலிருந்து 12ம் திகதி வரை முஸ்லிம் தாதி மாணவிகள் பயிற்சிக்குச் செல்லும் போது மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரிக்குச் சமீபமாகவுள்ள தெருவோரங்களிலும், பஸ்நிலையங்களிலும், மரங்களின் கீழும், கட்டிடங்களுக்கு மறைவிலும் நின்று உடை மாற்றிக் கொண்டு பயிற்சிக்குச் சென்றுள்ளனர். எனினும் தொடர்ந்து இவ்வாறான அவமானப்படுத்தல்களுக்கு மத்தியில் தங்களால் தாதியர் பயிற்சிகுச் செல்ல முடியாததால் தெரிவாகிய முஸ்லிம் பெண்பிள்ளைகள் அனைவரும் ஒவ்வொருத்தராக பயிற்சிக்குச் செல்லாது விடத் தொடங்கியுள்ளனர்.

மேற்படி தாதியர் பயிற்சிக்கு வேண்டிய உடைகள் சப்பாத்து உபகரணங்கள் மற்றும் பல நானாவிதப் பொருட்களைக் கொண்டு வருமாறு சுகாதாரத் திணைக்களத்தினால் கேட்கப் பட்டதற்கிணங்க ஆயிரக்கணக்கான ரூபாய்களை இந்த வறிய முஸ்லிம் மாணவிகள் கடன்பட்டுச் செலவிட்டுள்ளனர்.

தமது முஸ்லிம் கலாசார அடையாளத்தை பேணுவதற்கு முடியாது. தடுக்கப்பட்டிருப்பதை நினைத்து பல வறிய முஸ்லிம் பெண்பிள்ளைகள் வீடுகளுக்குத் திரும்பி அழுத வண்ணமுள்ளார்கள்.

இம்முறை தெரிவாகியுள்ள முஸ்லிம் பெண்பிள்ளைகளுக்குப் பல்வேறு நெருக்கடிகளையும் கொடுப்பதன் மூலம் அவர்களை பயிற்சிக்கு வராமல் செய்து விட்டு அந்த வெற்றிடங்களுக்குப் பதிலாக தங்களுக்கு வேண்டியவர்களை எடுப்பதே தற்போதைய தாதிகள் பயிற்சிக்கல்லூரி நிருவாத்தின் நோக்கம் என்று தெரிய வருகிறது.

ஏற்கனவே கிழக்கு மாகாண வைத்தியசாலைகளில் 5 சதவீதம் கூட முஸ்லிம் தாதியர்கள் நியமிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதைவிட இம்முறை தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் தாதியர்களுக்கான அழைப்புக்கடிதங்கள் உரிய வேளையில் அவர்களுக்குக் கிடைக்காத வண்ணம் நன்கு திட்டமிட்ட முறையில் காலதாமதமாகி அனுப்பப்பட்டிருந்தது கவனிக்கத்தக்கது.

முஸ்லிம் சமூகத்தின் மீது அக்கறை உள்ளவர்கள் மேற்படி நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டு தாதியர் பயிற்சிக்குச் செல்ல முடியாது தடுக்கப்பட்டுள்ள தமக்கு, வேலை வாய்ப்பைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு மேற்படி முஸ்லிம் தாதி மாணவிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

-பாதிக்கப்பட்டவர்கள்.

## மனித உரிமையை மீறும் இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பரீட்சை அட்டவணைகளும் மேலதிக விரிவுரைகளுக்கான நேர ஒதுக்கீடுகளும் தமது மத உரிமையை மீறும் வகையில் அமைந்திருப்பதாக மாணவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அண்மையில் நடந்து முடிந்த சமூக விஞ்ஞான பீடத்தின் சட்ட கற்கை நெறிக்கான தொடர் மதிப்பீட்டுப் பரீட்சையில் ஒப்பந்தச் சட்டத்திற்கான பரீட்சை கடந்த மார்ச் மாதம் 14ம் திகதி வெள்ளிக்கிழமை 1.30 மணிக்கு நடத்தப்பட்டது. இது குறித்து செய்யப்பட்ட முறைப்பாடுகள் எதுவும் கவனத்தில் கொள்ளப்படவில்லை எனவும் இது தமது அடிப்படை உரிமையை மீறும் செயல் எனவும் முஸ்லிம் மாணவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

மேலும் அவர்கள் கூறுகையில் ஹஜ்ஜுப் பெருநாள் தினத்திலும், சிவராத்திரி தினத்திலும் விஷேட வகுப்புகள் ஒழுங்கு செய்யப்பட்டமையையும் பலத்த பிரயத்தனத்தின் பின்னரே அவை இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டமையையும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

-ஏ.எல்.எம்.சமீம். பேருவளை.

## தர்கா நகர் தேசிய கல்வியியல் கல்லூரி மனுத் தொடர்பாக....

"முஸ்லிம் குரல்" முதலாவது இதழில் வெளிவந்த, தர்கா நகர் தேசிய கல்வியியல் கல்லூரி பற்றிய மனுவை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பலத்த வேண்டுதல்கள், போராட்டங்கள் மற்றும் அரசியல் செல்வாக்குகளுடனேயே மக்களுக்கான இக்கலூரி நிறுவப்பட்டது என்பதைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள். இலங்கையிலுள்ள பதினேழு தேசிய கல்வியியல் கல்லூரிகளில் முஸ்லிம்களுக்கென்று அமைக்கப்பட்டுள்ள இரண்டே இரண்டு கல்லூரிகளில் இதுவும் ஒன்று என்பதையும் கூறி வைக்கிறேன். மற்றொன்று அட்டாளைச்சேனையில் நிறுவப்பட்டுள்ளது. அக்கல்லூரி 10 வருடம் பழமை வாய்ந்தது. தர்கா நகரிலிருந்து 60 வருடப் பழமை மிக்க ஆசிரியர் கலாசாலை வளாகத்திலேயே தேசிய கல்வியியல் கல்லூரி நிறுவப்பட்டிருப்பதனால் ஆசிரியர் கலாசாலையில் நிலவிய வசதிகளும் வளங்களுமே இக்கலாசாலையிலும் காணப்படுகிறது.

250 மாணவியருக்கு 12 மலசலகூடம் மட்டுமே உள்ளதாக குறைபாடுகளை சுட்டிக்காட்டி எழுதியவர் கூறுகிறார். ஆனால் உண்மையில் 25 மலசல கழிப்பறைகள் இங்கு உள்ளன. அத்தோடு இருபத்தி நான்கு மணித்தியாலமும் நீர் வசதி கொண்டதாக அவை திகழ்கின்றன. இதுவரை எந்த ஒரு மாணவியராவது எந்தவொரு குற்றச் சாட்டையும் சமர்ப்பிக்கவில்லை.

இடநெருக்கடி பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. வருடாவருடம் 75 ஆசிரியர் பயிலுனர்களை உள்வாங்கிக் கொண்ட இக்கலாசாலையில் இவ்வாண்டு 180 பயிலுனர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இது முஸ்லிம் மாணவிகளுக்குக் கிடைத்த ஒரு அரிய சந்தர்ப்பமாகும். அதனால், இடநெருக்கடி ஓரளவு இருக்கத்தான் செய்கிறது. ஆனால் தற்போது 250 இலட்சம் ரூபா செலவில் ஒரு இரட்டை மாடி விடுதியும் மூன்று விரிவுரையாளர்கள் விடுதியும் விளையாட்டு மைதானம், கணணி, நிர்வாக அலுவலகம், நீர்தாங்கி போன்றவையும் அமைக்கப்பட்டு வருகின்றன. ஆறு மாத காலத்தில் இவை பூர்த்தியடையவுள்ளன.

பீடாதிபதி, கல்லூரி வளாகத்தில் தங்குவதில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கட்டிட, புனரமைப்பு வேலைகளுக்காக பீடாதிபதியின் விடுதி, கட்டிட ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆயினும் பீடாதிபதி மாணவிகளுக்கான விடுதியிலேயே தங்கி வருகிறார்.

விடுதி மேற்பார்வையாளர்கள் இரவில் விடுதியில் தங்குவதில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் ஒரு தவறான செய்தியாகும். பெரும்பான்மை இன இரண்டு விடுதி மேற்பார்வையாளர்கள் இங்கு பணியாற்றுகின்றனர். இருவரும் மாறி மாறித் தங்கி வருகின்றனர்.

உபபீடாதிபதி பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அவர் தகுதியற்றவரல்லர். அவர் இலங்கைக் கல்வி நிர்வாக சேவை அதிகாரியாவார். 38 வருடங்களுக்காக ஆசிரியத் தொழில் புரிந்தும் உப அதிபர், பதில் அதிபராகவும் கடமையாற்றிய அனுபவமுள்ளவர். குறிப்பிடப்பட்டதைப் போல் இளைப்பாறியவரல்லர்.

வடக்கு கிழக்குக்கு புறம்பாக பயிலுனர் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று எந்த ஒரு சட்ட விதியும் இல்லை. எதிர்காலத்தில் இவ்வாறு ஒரு சட்டவிதியையும் கொண்டுவர, செய்தி எழுதியவர் முயற்சித்தால் அது முஸ்லிம் சமுதாயத்துக்குச் செய்யும் பேருதவியாக அமையலாம். 25 வீத முஸ்லிம் அல்லாத மாணவிகளை அனுமதிக்கலாம் என்று கூறப்படினும் அதுவும் சட்டரீதியானதல்ல. தமிழ்மொழி மூல மகளிருக்கான கல்லூரி என்பதே வர்த்தமானி அறிவித்தலாகும்.

-ஸித்தி சிபா, மசூர் மாவத்தை, தர்கா நகர்.

## சமாதான முன்னெடுப்புகளும் - முஸ்லிம்களின் நிலைப்பாடும்

*சகீனத், காத்தான்குடி.*

இன்று இலங்கை வாழ் முஸ்லிம்கள் சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு ஊறு விளைவிப்பதற்காகவும், தங்கள் கோரிக்கைகளை வென்றெடுக்க பெரும் தடையாக உள்ளதாகவும் தமிழ்த் தரப்பார், குற்றஞ்சாட்டியுள்ளனர். முஸ்லிம்கள் தமிழ்பேசும் இனமென்றும், தங்களுக்குக் கிடைக்கும் அதிகார அலகில் எச்சில் முறக்களைத்தான் முஸ்லிம்கள் சுகிக்கத் தகுந்தவர்கள் என்றும், அவர்கள் தனி அலகு கேட்பது தங்கள் அதிகார அலகுகளை கூறுபோடத்தான் என்றும் பலவாறான கருத்துக்கள் தமிழ் மக்கள் மத்தியில் கட்டவிழ்க்கப்பட்டுள்ளன. இப்படியான விஷமக்கருத்துக்களை பகிரங்கமாக முன்வைத்து வரும் தமிழ் ஊடகங்களின் முன் சில கேள்விகளை முன்வைக்க விளைகின்றேன்.

இன்று முஸ்லிம்கள் தமது சுய நிர்ணய உரிமை பற்றிப் பேச விடுதலைப் புலிகள் தான் முழுக் காரணம் என்றால் அது மிகையாகாது. 1980 இல் தொடங்கி இன்று வரை நடந்து முடிந்த எத்தனையோ கசப்பான அனுபவங்களுக்கு "மறப்போம், மன்னிப்போம்" என்று இரண்டு வார்த்தையில் தீர்வு காண முனைகிறது விடுதலைப் புலிகள் தரப்பு. இதே வார்த்தைகளை அரசும் - புலிகளிடம் கூறுமிடத்து புலிகள் தரப்பு அதை ஏற்றுக் கொண்டு ஜனநாயக வழிக்குத்திரும்புமா? ஆயுதங்களைக் கைவிட்டு போராட்டத்தை நிறுத்துமா? போராட்ட வரலாற்றின் ஆரம்ப நாட்களில் எத்தனையோ முஸ்லிம் சகோதரர்கள் போராளிகளுடன் இணைந்து புலிகளுக்காகவே உயிர்விட்டதை எவராவது மறுக்க முடியுமா? இன்று அந்த நிலை மாற யார் காரணம்?

போராட்ட காலங்களிலேயே முஸ்லிம் சமூகம் தனது சகோதர இனம் என்று பீ.பீ.சீ. க்கு பேட்டிய ளித்த வே. பிரபாகரன் அதே சூட்டோடு வடக்கு முஸ்லிம்களை 24 மணிநேரத்துக் குள் வெளியேறச் சொன்னது எதில் சேரும்? "மறப்போம் மன்னிப்போம்" எனும் இரண்டு வார்த்தைகளால் பொருளாதார சீரழிவுகளோடு அகதிகளாக சிதறி வாழும் அம்மக்களின் வாழ்வில் ஏற்பட்ட மறு மலர்ச்சி என்ன?

விடுதலைப் புலிகளின் போராட்டமும் தமிழ் மக்களின் தியாகமும்தான் இன்று அரசை பேச்சுவார்த்தைக்கு தயாராக்கியது என்பது தமிழ்த்தரப்பாரின் வாதம். தமிழ் மக்கள் அவர்களின் உரிமைக்காக போராடினார்கள் என்றால், முஸ்லிம்கள் தமது இருப்புக்காககூட போராட வேண்டி இருந்ததே. சிங்கள அரசு தமிழ் மக்களை ஒடுக்கியதற்கும் தமிழர் விடுதலைப் போராளிகள் முஸ்லிம்களை அடக்கியதற்கும் என்ன வித்தியாசம்?

இன்று மாவீரர் தினம் தொடங்கி அன்னை பூபதி தினம் வரை மிக பகிரங்கமாகவே கொண்டாடப்படுகின்றது. ஆனால் ஒரு பாவமும் அறியாமல் பள்ளிவாயல்களிலும், ஏறாவூர் மண்ணிலும் இன்னும் இன்னோரன்ன தாக்குதல்களிலும் ஷஹீதான மக்களுக்காக ஒரு ஷுஹதாக்கள் தினம் கூட பகிரங்கமாக கொண்டாடப்பட முடிகின்றதா? பழயவைகளை நினைவுபடுத்துவதால் தமிழ், முஸ்லிம் உறவுகள் சீர்குலைந்து போகலாம் என்பதற்காகவே அத்தகைய தினங்களை தத்தமது எல்லைகளுக்குள்ளேயே முஸ்லிம் தரப்பினர் சுருக்கிக் கொள்கின்றனர். இது எதை உணர்த்துகின்றது?

சரி, புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்னுள்ளவைகளை விடுவோம், ஹக்கீம் - பிரபாகரன் ஒப்பந்த உடன்படிக்கை முடிந்த கையோடு மூதூரிலும், வாழைச்சேனையிலும் நடந்தேறியது என்ன? தமிழர்களுக்குள் இப்படி அடித்துக் கொண்ட சம்பவம் எங்கும் நடைபெற்றுள்ளதா? வடக்கு, கிழக்கில் புலிகள் முழு சுதந்திரத்துடன் நடமாடித் திரிந்த நிலையில் நடந்தேறிய இந்த நிகழ்வுகளுக்கு என்ன அர்த்தம்? புலிகள் நினைத்திருந்தால் முஸ்லிம்களின் சொத்தழிவுகளை தடுத்திருக்க முடியாதா? தென் கிழக்கு கோரிக்கையை எதிர்த்து வந்ததாக சொல்லப்படும்சமூக மதிப்பீடுகளுக்கான நிறுவனத்தின் (காத்தான்குடி) தலைவர் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் அங்கம் வகித்து, விடுதலைப் புலிகளின் பாரபட்ச நடவடிக்கைகளினால் தனது பதவியையே ராஜினாமாச் செய்ததை எத்தனை பேர் அறிவார்கள்? இன்று இவ்வமைப்பைக் கூட சுய நிர்ணய அலகுபற்றி சிந்திக்கத் தூண்டியது யார்?

இறுதியாக ஒப்பந்தங்களும் அறிக்கைகளும் நிறைவேற்றப்பட்ட மறுநிமிடமே அவற்றை தகர்க்கவும் தயங்காத விடுதலைப் புலிகள் அதிகாரம் வழங்கப்பட்ட பின்னர் எவ்வாறான முடிவுகளை எடுப்பார்கள் என்பதே இன்றைய வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் ஒரே கேள்வியாகும். ஆனால் வெறும் எழுத்துக்களாக இருக்கும் ஒப்பந்தங்களையும், அறிக்கைகளையும் விடுதலைப் புலிகள் செயல் வடிவில் மாற்றுவதன் மூலமே முஸ்லிம்களையும் இணைத்து பலமான தீர்வொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதில் எந்தவித சந்தேகங்களும் இல்லை. இது இவ்வாறு இருக்க ஒரு சாராரின் நியாயங்களோடு மட்டும் ஏனைய தரப்பாரை குற்றஞ்சாட்டி வெளியிடப்படும் குற்றச்சாட்டும் வீணான குழப்பங்களையே ஏற்படுத்தும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

## தடயங்கள்

நடுக்கடலில்
அநாதரவாய் விடப்பட்டு
தத்தளிக்கும் நிலையில்
நாம்.

உழைப்பின் முதல்களை
கப்பம் கட்டியே
வறுமைப் போர்வையால்
அடையாளப்படுத்தப்பட்ட
நம் குடும்பங்கள்.

இழக்கக் கூடாததை
இழந்திருந்தும்
எமது வாழ்விடத்தை
தம் புகலிடமாக்கிட
பருந்து போல் காத்திருக்கும்
இனச் சுத்திகரிப்புக் கரங்கள்.

சமாதானப் போர்வையில்
எம் சமூகத்திற்கு
சதி வலை பின்னி
பட்டியலிடப்படும்
பேச்சுவார்த்தைகள்.



இத்தனைக்கும்
தங்களைப் புனரமைத்து
பதவிப் பரிசில்களை
நிலைக்கச் செய்திட
அறிக்கைத் தூதுகளால்
சமூகத்திற்குழைக்கும்
எம் தலைவர்கள்.

இதனைப் பார்த்து
ஊமைகளாய்
மௌன விரதம்
பூண்டிருக்கும்
நம் புத்தி ஜீவிகள்.

இவையெனது
தினக்குறிப்பேட்டில்
பதியப் படுகின்ற
இன்றைய
வரலாற்றுக் குறிப்புகள்

*- மருதூர் ஜமால்தீன்*

## முன்னுக்குப்பின் முரணான அறிக்கை மன்னர்கள்

அண்மைக் காலமாக நமது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அறிக்கை விடுவதிலும் அந்த அறிக்கைகளுக்கு முற்றிலும் மாற்றமாக நடந்து கொள்வதிலும் மன்னர்களாக இருந்து வருகின்றனர். இவர்களின் இப்படியான செயல்களால் அவர்கள் மட்டுமல்ல ஏனைய முஸ்லிம்களும் முழு முட்டாள்களாக நமது நாட்டிலேயே கணிக்கப்பட்டு வரும் அவல நிலை இன்று நடுவீதியில் வலம் வந்து கொண்டிருக்கின்றது.

அந்த வகையில் நமது அமைச்சர் ஹக்கீம் அவர்களைப் பற்றி இங்கே குறிப்பிடத்தேவையில்லை! அவரையடுத்து எமது கல்முனை, சம்மாந்துறை தொகுதிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களை எடுத்துக் கொண்டால் அண்மையில் முஸ்லிம் காங்கிரஸ் பிளவுபட்டு ஹக்கீம் அணியென்றும் அதாவுல்லா அணியென்றும் இருவேறு அணிகள் பலப்பரீட்சை செய்தன.

அந்த வேளையில் மு.காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு அணிகளாகி நிற்க இந்த இரண்டு உறுப்பினர்களும் நாங்கள் எந்த அணிகளையும் ஆதரிக்க மாட்டோம் என அறிக்கைக்கு மேல் அறிக்கை விட்டு தூள் கிளப்பினார்கள். மேலும் இரண்டு அணிகளும் இணைய வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்கள்.

பின்னர் எங்களுக்குத் தலைவர் ஹக்கீம்தான் எனவும், மாற்றுக் கருத்திற்கு இடமில்லை எனவும் அறிக்கை விட்டார்கள். இங்கே தான் சற்று இடிக்கின்றது. இவர்களின் கூற்றுப்படி பிரிந்த நிலையில் இரண்டு அணிகளையும் நாங்கள் ஆதரிக்க மாட்டோம் என அறிக்கைகளை விட்டு விட்டு பின்னர் அந்த அணிகளின் தலைவரொருவரை ஆதரிப்பதற்கு என்ன அர்த்தம் என்று விளங்கவில்லை.

இந்த விடயம் போன்றே முன்னர் பாராளுமன்ற பகிஷ்கரிப்பை இவர்கள் இருவரும் மேற்கொண்டு ஊடகங்களின் கவனத்தை ஈர்த்தனர். இவர்களுக்கு ஆதரவாக ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்து அவர்களும் பாராளுமன்றத்தை பகிஷ்கரித்தனர். எனினும், அந்தவேளையில் விட்ட அறிக்கைகளுக்கு மாற்றமான முறையிலேயே பின்னர் அவர்களின் செயற்பாடுகள் அமைந்தன. இதேபோன்று மேலும் பல அறிக்கை மன்னர்களும் நமது சமுகத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்து வருகின்றனர்.

இங்கே நாம் இதனை ஏன் சுட்டிக் காட்டுகிறோம் என்றால்? நமது சமூகம் இன்று உறுதியான தலைமைத்துவம் இன்றி தட்டுத் தடுமாறுகின்றது. நமது மக்கள் நமக்காக குரல் கொடுப்பார் என்று அனுப்பி வைத்த (தேர்ந்தெடுத்து) தலைமைத்துவமும் ஏனைய இனத்தவர்களால் வாங்கப்பட்டு சொல்வதென்றும் செய்வதொன்றுமாக இடத்திற்கிடம் மாறுப்பட்ட பேச்சுமாக இன்று வலம் வந்து விமர்சனத்திற்கு ஆளாகி பரிதாபகரமான நிலையில் இருந்து கொண்டிருக்கின்றது. எனவே இப்படிப்பட்ட வேளையில் பொறுப்பு வாய்ந்த நமது பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறுபிள்ளைத்தனமாக முன்னுக்குப் பின் முரணான அறிக்கைகளை அள்ளி வீசாமல் சொல்வதைச் செயலில் காட்ட வேண்டுமென்பதற்காகவே. அதுதான் வளர்ந்து வரும் அவர்களுக்கும் சிறந்ததாகும்.

*எல்.எல்.எம். முஸ்தபா, மருதமுனை.*

## முஸ்லிம் குரல் தொடர்ந்தும் வெளிவரவேண்டும்

முக்கியமான கால கட்டத்தில் எம்மவர்களுக்காக தரமான ஒரு செய்தித்தாள் வெளியிடப்படுவதைக் கண்ணுற்றுப் பெருமகிழ்வுற்றேன். இந்நாட்டில் மட்டுமல்ல முழு உலகிலும் முஸ்லிம்களை திட்டமிட்டு அழிப்பதற்கு கங்கனங் கட்டிக் கொண்டிருக்கும் இதே வேளையில் இலங்கையில் ஒருபடி மேலே செல்வது போன்று சிங்கள, தமிழ் பேரினவாதமும் முஸ்லிம்கள் மீது அடந்தேறுகின்ற சந்தர்ப்பத்தில் தான் இஸ்லாமிய புதுவருடம் (1424) ஆரம்பிக்கின்ற காலகட்டத்தில் ஓர் தைரியமான சக்தி ஒன்று அல்லாஹ்வின் துணையினால் ஆரம்பிக்கப்பட்டிருப்பதை கண்ணுற்று அகமகிழ்வுற்றேன்.

என்னுடைய முதல் கவலை என்னவெனில், முஸ்லிம்களை இழிவுபடுத்தி, கொச்சைப்படுத்தி, முஸ்லிம்களது தனித்துவத்தை மறைப்பதற்கு போர்க் கொடி தூக்கிப் பிடித்துள்ள செய்தித்தாள்களை வாங்கி படித்துக் கொண்டிருக்கின்ற எம்மவர்களை விடுவிக்கச் செய்து, நமக்காக எழுத ஆரம்பித்துள்ள (உண்மையிலே முதற்பிரதியே அதற்கு சான்று) முஸ்லிம் குரலில் இடம் பிடிக்கச் செய்வது என்பதுதான். எனது அடுத்த கவலை என்னவெனில், முஸ்லிம்களுக்காக எத்தனையோ வார இதழ்கள் வெளியானது. ஆனால், தொடர்ந்தும் வெளிவரவில்லை. இதுபோல முஸ்லிம் குரலுக்கு ஆகிவிடுமோ என்பதுதான். ஆனால் நிச்சயமாக முஸ்லிம் குரல் ஒரு போதும் மறைந்து விடாது. ஒருபடி மேலே சென்று முழு இலங்கை முஸ்லிம் மக்களின் கரங்களில் நாள் தோறும் கிடைக்க வாய்ப்புச் செய்வோம். அந்த ரப்புல் ஆலமீனுடைய முழு உதவியினாலும் வீறு நடை போடுவோம்.

*-ரிபாய் எம்.சம்சுதீன், நிந்தவூர்*

## திரை கிழிக்கப்பட வேண்டும்!

இலங்கை முஸ்லிம் அரசியல் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய பொழுது தான் 20.01.2003. தென்கிழக்கு மாணவர் சமூகம் ஏற்பாடு செய்த முஸ்லிம் தேசப் பிரகடனம், எதிர்பார்த்ததைவிட வெற்றிகரமாக நிறைவேறிய நாள்தான் அது.

தேசிய மட்டத்தில் மட்டுமன்றி, சர்வதேசிய ரீதியாக முஸ்லிம்கள் மீது ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்தி எமது உரிமைகளினைப் பெற்றுக் கொள்ள செய்யப்பட்ட ஒரு பிரகடனம் தான், "ஒலுவில் பிரகடனம்"

இது, சில ஊடகங்கள் மூலம் திரிவுப்படுத்தப்பட்டு வெளியீடு செய்யப்பட்டது. இதனைக்கண்டு நாம் கவலை கொள்ளவில்லை. காரணம், எமக்கு இது பழகிப் புளித்துப் போன விடயம் என்பதால்தான்.

ஆனால், இப்போது வெடித்துள்ள விடயம்தான் மிகவும் பூதாகரமாக மாறும் போல் உள்ளது. அதாவது, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இரண்டு அணியினரும் "நாங்கள்தான் இவ்வெழுச்சிப் பேரணியை நடாத்த ஆதரவு வழங்கினோம், பொருளாதார உதவி செய்தோம். என தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கின்றனர்.(ஆனால் இவ்வெழுச்சிப் பேரணி அரசியல் தலையீடு இன்றி, நடத்தப்படுகின்றது என சில பல்கலைக்கழக மாணவர்களால் கூறப்பட்டது என்பதையும் நாம் மறந்து விடவில்லை.)

ஆகவே, இதற்கான சரியான பதிலினை, தெளிவினை தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர் சமூகம் பகிரங்கமாக வெளிவிட வேண்டுமென நாம் எதிர்பார்க்கிறோம்.

*-பர்ஹான், அட்டாளைச்சேனை*

## ஒருவர் ஒரு கருத்தை சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா?

நாம் எழுதுவதற்கும், நமது மக்களுக்குள் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கும் விவாதங்களைத் தொடங்கவும், தொடரவும் தயாராகவுள்ளோம்! உங்கள் கருத்துக்களை சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்.

-பிரதம ஆசிரியர்

## இரண்டு ஹைக்கூக்கள்

மஹர் கொடுத்து
திருமணம் முடிக்கின்றார்கள்
குமருகள்!

வரதட்சனை வாங்கி
வாழ்க்கைத்
துணைவனானேன் நான்
இப்போது வீட்டுக்காவலில்!

*-வெளிமடை ஜஹாங்கீர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் யுத்தங்கள்

எதனால் எப்போது ஒரு நாடு யுத்தத்துக்கு செல்ல ஆரம்பிக்கின்றது? எப்போது ஒரு நாடு இன்னொரு நாட்டை ஆக்கிரமிக்கத் துணிகின்றது? ஒரு நாட்டின் வளங்கள் இன்னொரு நாட்டால் எப்போது சூறையாடப்படுகின்றது? என்ற கேள்வி எமக்கு எழுகின்ற போது நாம் சிலவேளைகளில் அதற்கான விடைகளை வெவ்வேறு முறைகளில் அறிந்து கொள்கின்றோம்.

இப்போது ஈராக்கிற்கு எதிரான அமெரிக்காவின் யுத்தம் ஆரம்பித்திருக்கின்றது. ஏன்? எதற்காக? இந்த ஆக்கிரமிப்பு யுத்தம் என்றால் ஈராக்கிலுள்ள 'எண்ணை வளம் என்பதுதான் பெரும்பாலானவர்களது விடை. உண்மைதான் அமெரிக்கா பல நோக்கங்களுக்காக பல யுத்தங்களை உலகில் நடத்தியிருக்கின்றது. கீழுள்ள பட்டியலைப்பாருங்கள். இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப்பின்னிருந்தான இன்றுவரையான நாட்களில் எத்தனை யுத்தத்தை அது நடாத்தி வந்திருக்கின்ற தென்று.

அடுத்தடுத்த ஆண்டுகளில் பலஸ்தீன், ஈரான், சிரியா, லிபியா,







லெபனான், கியூபா, சூடான், வட கொரியாவாக அமெரிக்காவின் யுத்தத்தெரிவு இருக்கலாம்...?

இந்த நாடுகள் உண்மையில் அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றதா? அல்லது எப்போதாவது அமெரிக்காவைத் தாக்கியிருக்கிறதா? இல்லை! ஆனால் அதற்கான நலன்கள் எங்காவது, எந்த விதத்திலாவது இருந்து கொண்டிருக்கின்றது இது போன்ற நாடுகளில்.






| | | | | | |
|---|---|---|---|---|---|
| சீனா | (1945-46), | வியட்னாம் | (1961-73) | சோமாலியா | (1992-93) |
| | (1950-53) | கம்போடியா | (1969-70) | ஹெய்டி | (1994) |
| கொரியா | (1950-53) | ஈரான் | (1980) | பொஸ்னியா | (1995) |
| குவாதமாலா | (1954, | லெபனான் | (1982-84) | சூடான் | (1998) |
| | 1967-68) | கிரனடா | (1983) | ஆப்கானிஸ்தான் | (1998) |
| இந்தோனேசியா | (1958) | லிபியா | (1986) | ஈராக் | (1999-2000) |
| கியூபா | (1959-60) | எல்சல்வோர்டோ | (1980 களில்) | யூகோஸ்லாவியா-சேர்பியா | (1999) |
| பெல்ஜியன் கொங்கோவா | (1964) | நிகரவோ | (1980 களில்) | ஆப்கானிஸ்தான் | (2001) |
| பெரு | (1965) | பனாமா | (1989) | ஈராக் | (2003......) |
| லாவோஸ் | (1964-73) | ஈராக் | (1991-99) | | |

எம். கே. எம். எஸ்.

# நான் பிரகடனம் செய்கிறேன்!



எனது நாட்டில் ஒரு சாண் நிலம்
எஞ்சி இருக்கும் வரை
என்னிடம் ஒரு ஒலிவமரம்
எஞ்சி இருக்கும் வரை
ஒரு எலுமிச்சை மரம்
ஒரு கிணறு
ஒரு சப்பாத்திக் கள்ளி
எஞ்சி இருக்கும் வரை
ஒரு சிறு நினைவு
ஒரு சிறு நூலகம்
ஒரு பாட்டனின் புகைப்படம்
ஒரு சுவர்
எஞ்சி இருக்கும் வரை

அரபுச் சொற்கள் உச்சரிக்கப்படும்
வரை
நாட்டுப் பாடல்கள் பாடப்படும் வரை
கவிஞர்கள்
அந்தர் அல்-அப்ஸ் கதைகள்
பாரசீகத்துக்கும் ரோமுக்கும் எதிரான
யுத்த காவியங்கள்
எனது நாட்டில் இருக்கும் வரை

எனது கண்கள் இருக்கும் வரை
எனது உதடுகள் எனது கைகள்
எனது தன்னுணர்வு இருக்கும் வரை
விடுதலைக்கான பயங்கரப் போரை
எதிரியின் எதிரில் நான் பிரகடனம்
செய்வேன்.

சுதந்திரமான மனிதர்கள் பெயரால்
தொழிலாளர்கள் மாணவர்கள்
கவிஞர்கள் பெயரால்
நான் பிரகடனம் செய்வேன்

கோழைகள் சூரியனின் எதிரிகள்
அவமான ரொட்டியினால் ஊதிப்
புடைக்கட்டும்
நான் வாழும் வரை எனது
சொற்களும் வாழும்
சுதந்திரப் போராளிகளின் கைகளில்
ரொட்டியாயும் ஆயுதமாயும்
என்றும் இருக்கும்.

மஹ்மூத் தர்வீஷ் - தமிழில் எம்.ஏ.நுஃமான்

# முஸ்லிம் காங்கிரஸ் தளர்வு நிலைக்கு ஐ. தே. முன்னணி இணைவு காரணம்?

அஷ்ரஃப் காலமாகும் வரையும் நான் கூறியவைகளை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் நான் சொன்னவை எல்லாம் ரவூஃப் ஹக்கீம் காதில் விழுந்தன அதனால் தான் அவர் எமது பக்கத்திற்கு வந்துள்ளார்.

இக்கூற்றானது. ஐ .தே. முன்னணி அமைச்சர்களும் இணைந்து அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச ஐ. தே. கட்சி, முஸ்லிம் ஆதரவாளர்களுக்கு விளக்கமளிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் அமைச்சர் ஏ.எச் எம் அஸ்வர் அவ்களினால் கூறப்பட்டதாகும்.

இக்கூற்றினை வெறுமனே பத்திரிகையில் வாசித்துவிட்டு அல்லது கேட்டுவிட்டு செல்லக்கூடிய நிலமையில் மு.கா. போராளிகளும் ஆதரவாளர்களும் இல்லை. இக்கருத்தில் தொக்கியுள்ள விடயமானது மு.கா. ஆதரவாளர்களின் மனங்களில் ஒரு நெருக்குதலை ஏற்படுத்திக் கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

மேற்படிகூற்றானது காலத்திற்கு ஏற்றதென்றும், சூழ்நிலைமைக்கு உட்பட்டதென்றும் சப்பைச்சாட்டுக்கள் சொல்லிக் கொண்டாலும் அஷ்ரஃப் அவர்களின் வழிகண்டவர்களுக்குப் பொருத்தப்பாடாக இல்லை. மு. கா. ஸ்தாபகத்தலைவரின் அரசியல் நகர்வுடன் தோற்றம்பெற்ற பொ. ஐ. முன்னணி ஆட்சியின் ஆரம்பகாலத்தில் முஸ்லிம் சமூகம் குறிப்பாக நேரடிப்பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் பெற்றுக்கொண்ட நலன்களும், அபிவிருத்திப்பணிகளும் ஐ. தே. முன்னணி ஆட்சிக்காலத்தைவிட அதிகம். அந்த ஆட்சிக்காலத்திலே கிடைக்கப் பெற்றவைகள்தான் தென்கிழக்குப் பல்கலைக்கழகமும், ஒலுவில் துறைமுகமும் மற்றும் அதிகளவான முஸ்லிம் இளைஞர்களுக்கான துறைமுக அதிகாரசபை தொழில் வாய்ப்புக்கள். மீளக்குடியமர்வு, இழப்பீட்டிற்கான நிவாரண உதவித் தொகைகள் என்பவைகள்.

ஐ. தே. முன்னணியுடன் இணைந்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தவேண்டிய அவசிய முன்னெடுப்பு அஷ்ரஃப் அவர்களுக்கு ஏற்பட்டிருந்தால் அது மேலோட்டமானதொரு இணைவாக மாத்திரம் இருந்திருக்கமாட்டாது. இன்றைய அரசு - விடுதலைப்புலிகள் உடன்படிக்கைத் தயாரிப்பு வேலைகளுடன், முஸ்லிம்கள் சார்பாகக் குரல் கொடுக்கவல்ல தலைமைப் பொறுப்பில் நிச்சயம் அவர் கைகளே ஓங்கியிருந்திருக்கும்.

பொ. ஐ. முன்னணி ஆட்சிக் காலத்தில் தனித்துவக் கட்சிக்கு எதிரான வாதங்கள் மற்றையவர்களினாலேயே ஏற்கப்பட்டது. அதிகளவில் ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர்களினால் தோற்றுவிக்கப்படாது இருந்தாலும் பொதுஜன ஐக்கிய முன்னணியில் முக்கிய பொறுப்பிலிருந்த கௌரவ ஏ. எச். எம். பௌஸி அவர்களின் எதிர்ப்புக்கள் ஜனாதிபதி அவர்களினால் கட்டுத்தப்பட்டதொரு நிலைமையில் இருந்ததுடன் ஜனாதிபதி அவர்களின் உறுதியான ஆதரவுப்பலமும் அஷ்ரப் அவர்களின் அவசியத் தேவை கருதி அவர் பக்கமே மிகைத்திருந்தது.




இன்றைய முஸ்லிம் காங்கிரஸின் உட்கட்சிப்பூசல்கள் மற்றும் பிளவுகள் வேதனை தரக்கூடியதாகவே காணப்படுகின்றது. முஸ்லிம் காங்கிரஸின் எழுச்சிப்பாதையில் ஏற்படும் ஒவ்வொரு தடைக்கற்களையும் அவதானிக்கும்போது மாமேதை அஷ்ரஃப் என்ற சக்தியின் தேவை அவசியம் என்பதே வலியுறுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. தானாக வந்தது பாதி தன்னால் வந்தது மீதி என்ற சறுக்கு நிலையில் இன்றைய அரசியற் களத்தில் முஸ்லிம் காங்கிரஸ் உள்ளது.

அம்பாறை மாவட்ட கரையோரப்பிரதேச ஐ. தே. க. முஸ்லிம் ஆதராவாளர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி கூட்டத்திலிருந்த மு.கா. பா. உ. அன்வர் இஸ்மாயில் வெளியேற வேண்டி ஏற்பட்டதும். ஆளும் கட்சியின் பலமான பங்காளிக் கட்சியாக இருந்தும் மு. கா. செயற்பாடுகள் விமர்சிக்கப்பட்டதும் அங்கிருந்த பொறுப்பானவர்கள் மௌனிகளாய் செயற்பட்டதும். எதிர்கட்சி நிலைப்பாட்டில் மு. கா. ஆதரவாளர்களைத் தள்ளியதும் ஆழமாக சிந்திக்கப்பட வேண்டியதாக உள்ளது. மு.கா.ஐ.தே. முன்னணிக் கட்சியில் இணைந்து கொண்டது. தவறா சரியா என்பது அல்ல விடயம். ஆனால் தமது தனித்துவம் களங்கப்படும் போதும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு காலம் தாழ்த்துவதுதான் வேதனையாக உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியினால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் விடயங்கள் முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவாளர்களினால் சற்று ஆழமாக சிந்திக்க வேண்டியுள்ளது.

+ வவுனியா மற்றும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி அதிகார சபைக்குக்கான தேர்தலை தமிழ்க் கூட்டமைப்பின் கோரிக்கைக்கு ஏற்பகாலம் தாழ்த்தியமையும், குறிப்பிட்டதினத்தில் அம்பாறை மாவட்ட சிங்களப் பிரதேசங்களுக்கு தேர்தல் நடத்தியமையும்.

+ அரச- விடுதலைப் புலிகளின் பேச்சு வார்த்தை தாய்லாந்தில் நடைபெற்ற போது மு.கா.தலைமை முஸ்லிம்கள் சார்பாகக் குரல் கொடுத்தபோது அன்டன் பாலசிங்கம் அவர்களின் கடும்வார்த்தைப் பிரயோக வேளையில் அரச தரப்புக் குழுத் தலைமை அல்லது உறுப்பினர்கள் ஆதரவு காண்பிக்காமை.

+ கிழக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சுக்கு உரிய அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளாமை.

+ அரசு - விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களுக்கான தனித்தரப்பு தொடர்பாக குரல் கொடுக்கப்பட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளாது கட்சியை பலவீனப்படுத்தி அனைத்து தரப்பினரையும் ஏற்றுக் கொண்டமை.

அ.முஹம்மது அனஸ்
திருகோணமலை

## முஸ்லிம் புத்திஜீவிகள் சமுதாய நலனில் அக்கறை கொண்டு செயற்பட வேண்டும்!

வீரகேசரி 24-03-2003இல் பஷீர் சேகுதாவூத்

உரிமைப் போராட்டத்தின் பெயரால் மக்களிடம் வாக்குக் கேட்டு அரசியல் சுகம் அனுபவிப்பவர்களுக்கு, சமுதாயத்திற்கு துரோகமிழைப்பதே தொழிலான போது; மக்களின் சார்பிலான புத்திஜீவிகளுக்கு அறைகூவல் விடுப்பதற்கு ஒரு அரசியல் யோக்கியதை வேண்டுமல்லவா?

முதலில் - மக்களிடம் அளித்த வாக்குறுதிகளை நீங்கள் காப்பாற்றுங்கள் - கடந்த காலத்தில் என்ன செய்து கொண்டிருந்தீர்கள் என்பதை சுயவிமர்சனம் செய்து பாருங்கள்! சாத்தான் வேதம் ஓதுவது பொறுக்க முடியவில்லை. நீங்கள் உங்கள் சமுதாயப் பணியைச் சரியாகச் செய்தால் நமது புத்திஜீவிகளும், மக்களும் மிகக்கூடிய பங்களிப்பை வழங்கத் தயாராகவே உள்ளனர்.




## சமஷ்டி பற்றி தென்பகுதி சிங்கள மக்களுக்குத் தெளிவுபடுத்தப்படல் வேண்டும்

- அன்ரன் பாலசிங்கம்

தென்பகுதி மக்களுக்கு மட்டுமல்ல, எங்கள் முஸ்லிம் தலைமைகளுக்கும் தெளிவுபடுத்தப்படல் வேண்டும். அப்போதாவது அவர்கள் தங்கள் கருத்தினை வாய் திறந்து சொல்ல உங்களிடமிருந்து ஒரு "அரசியல் விளக்கம் கிடைக்குமல்லவா? நீங்கள் முஸ்லிம்களுக்கு மிக அண்மைக்காலமாக அரசியல் வகுப்பு நடத்தித்தானே வருகிறீர்கள்? முஸ்லிம் தலைமைகளுடன் நீங்கள் பேசுவது இரண்டு அரசியல் தலைமைகளுக்கிடையிலான பேச்சுவார்த்தை போல் தெரியவில்லையே - சிறு பையன்களுக்கு வகுப்பு நடாத்தும் மோசமான ஆசிரியர் போலல்லவா நடந்து கொள்கிறீர்கள்!



யாழ்நகரில் சோனகத்தெருவில் அமைந்திருந்த பள்ளிவாசலின் தோற்றத்தையே படத்தில் காண்கிறீர்கள். 1990ம் ஆண்டில் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்டதன் பின் மிக மோசமாக சிதைக்கப்பட்ட வணக்கஸ்தலங்களின் ஒன்றின் தோற்றமே இது.


**முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருங்கள்**

நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக் கொணர முடியும்! சந்தாதாரர்களாக சேருங்கள்! சகோதர சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!



**சந்தா விபரம்!**

3 மாதங்கள் - (12 இதழ்கள்) - 120/-
6 மாதங்கள் - (24 இதழ்கள்) - 240/-
1 வருடம் - (48 இதழ்கள்) - 480/-
(தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)

காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பிவைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசுக்கட்டளையாக அனுப்புவதாக இருந்தால் Muslimkural Publication, Slave Island Post office எனக் குறிப்பிடவும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வல்லரசுகளின் கையில் புதிய ஆயுதம் - தகவல் உலகம்

கடந்த பத்தாண்டுகளாக உலகம் முழுவதும், குறிப்பாக மேலைநாடுகளில் நடந்து வரும் அறிவியல் - தொழில்நுட்பப் புரட்சியின் மாபெரும் சாதனைகளில் ஒன்று தான் "தகவல் உலகம்"

தகவலுலகத்தில் வாழும் பயனீட்டாளர்கள் - பத்திரிகையுலகின் வாசகர்கள், வானொலி உலகின் நேயர்கள், சினிமா உலகின் ரசிகர்களைப் போல செய்தித்தாளையும், திரையையும் வெறித்துக் கொண்டு வெறும் செயலற்ற பார்வையாளர்களாய் இருக்க மாட்டார்கள். இப்போதுள்ள இந்த மக்கள் பெருந்திரள் ஊடகச் சாதனங்களைப் போல தகவலுல கம் என்பது ஒரு வழிப்பாதையல்ல. அதாவது மேலிருந்து கீழேயும் மையத்திலிருந்து விளிம்புக்கும் தரப்படும் செய்திகள், நிகழ்ச்சிகளைப் படித்து, கேட்டு பார்த்துக் கொண்டிருப்பது மட்டுமே அவர்களது செயலாக இருக்காது. தொலைபேசிகளில் உரையாடுவதைப் போல இரு வழிப்பாதையாக மட்டுமல்ல, குறுக்கும் நெடுக்குமாக ஒன்றை ஒன்று கடந்து, தாண்டிச் செல்லும் பலவழிப் பாதையாக அமைந்திருக்கின்றது "தகவலுலகம்." ஆகவே, இந்தப் புதிய ஊடகத்தின் மூலம் அவரவர் தனக்குத் தரப்படும் செய்திகள், நிகழ்ச்சிகளுக்கு மேலாகப் போய்த் தனக்குத் தேவையானவற்றைத் தெரிவு செய்து கொள்ளவும் முடியும். தன்னிடம் இருப்பவற்றையும் அனுப்பவும் முடியும்.

புதிய அவதாரமாகிய இந்தத் தகவல் உலகத்தின் வரவை ஏற்கனவே நாம் வாழும் உலகம் எப்படி எதிர் கொள்கிறது? அறிவியல் - தொழில்நுட்ப ரீதியில் இது மகத்தான சாதனை, புரட்சிகரமான பயன்பாடுகள் நிறைந்தது என்பது நிச்சயமான உண்மை. பொருளாதாரம், தொழில், வணிக, வர்த்தக ரீதியில் உலகு தழுவிய தேசங்கடந்த பன்னாட்டு ஏகபோகக் கழகங்களுக்குப் பெரிதும் பயன்படக் கூடியது என்பதிலும் சந்தேகமில்லை. இந்தத் தகவலுலகை நிறுவி இயக்குவதற்கான சாதனங்களை உருவாக்கி விற்பதில் கொள்ளை லாபமிருக்கிறது என்பதால் மட்டுமல்ல, தகவலுலக, சாதனங்களின் உற்பத்தி - விற்பனையுடன் நேரடித் தொண்டில் இல்லாத பல நிறுவனங்களின் தொழில், நிர்வாகத்திற்கும் இது பெரிதும் பயன்படும்.

ஆகையால் இந்தப் பிரிவினர் உலக உழைக்கும் மக்களையும் பின்தங்கிய ஏழை நாடுகளையும் மேலும் அதிகமாகக் கொள்ளையிட தம்க்குத் துணைபுரியும் என்பதால் பேராசையுடன் தகவலுலகில் தம்து ஆதிக்கத்தை நிறுவிக் கொள்ள விழைகின்றனர். இன்னொரு முக்கிய அம்சம் அதிநவீன மக்கள் பெருந்திரள் ஊடகம் என்கிற முறையிலும் தகவலுலகத்தின் பயன்பாடுகள் கடந்த பத்தாண்டுகளாக மேல்நிலை வல்லரசுகள் நிர்மாணித்து வரும் உலகமயமான மூலதனம், உழைப்புப் பிரிவினை, உற்பத்தி, விற்பனை, விநியோகத்துக்கு ஒரு உலகச் சந்தைக்குப் பொருத்தமாக தேசங்களின், நாடுகளின் எல்லைகளை தனித்தன்மைகளைத் தகர்க்கும் உலக மயமான பண்பாட்டைக் கட்டியமைப்பதில் தகவலுலகம் தீர்மானகரமான பங்காற்ற முடியும்.

இவ்வளவு சக்தி வாய்ந்த ஒரு புதிய மக்கள் பெருந்திரள் ஊடகம் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் துள்ளுகிறார்கள் ஏகாதிபத்தியவாதிகள். அவர்களுடைய தாசர்களும் "இது சுதந்திரச் சிந்தனையாளர்களது கனவுலகம்; பேச்சுச் சுதந்திரத்தின் எல்லை என்கின்றனர்.

ஒரு புதிய அறிவியல் தொழில்நுட்பக் கண்டுபிடிப்பு மிகப் பெரிய சமூகப் பண்பாட்டு சாதனம் என்கிற முறையில் அதன் முக்கியம், பயன்பாட்டை நாம் அனைவரும் வரவேயற்கத்தான் வேண்டும். ஆனால் சக்தி வாய்ந்த இந்தச் சாதனம் யார், யார் கையில் சிக்கியிருக்கிறது. எதற்குப் பயன்படுகிறது என்பதைப் பொறுத்துத்தான் நம்முடைய



அணுகுமுறை அமைகிறது.

மனித குலமேம்பாட்டுக்குப் பயன்படக் கூடிய அணு சக்தியானது ஏகாதிபத்தியப் போர் வெறியர்களின் கையில் சிக்கி மனித குலத்தையே அழிக்கக் கூடியதாக மாறிவிட்டது. அதைப் போலத்தான் "தகவலுலகம்" ஏகாதிபத்தி தீய சக்திகளிடம் சிக்கியுள்ளது. ஏற்கனவே சினிமா, வானொலி, "கசினோ" எனப்படும் சூதாட்ட விடுதிகள், பாலுறவுச் சுற்றுலா போன்றவை மூலம் ஏகாதிபத்திய காமக் களிவெறியாட்ட, கழிசடைப் பண்பாட்டையும் தமது புதுப் புது நுகர் பொருட்களுக்கான சந்தைக் கலாசாரத்தையும் பரப்பி வருகின்றனர் ஏகாதிபத்தியவாதிகள். உலகம் முழுவதிலும் உள்ள பல்வேறு சிறிய - பெரிய தேசியப் பண்பாடு, நாகரிகம், மொழி போன்றவற்றின் தனித்துவம், சிறப்புகளைக் காலில் போட்டு மிதித்து நசுக்கி விட்டு ஏகாதிபத்திய உலகமயமான பண்பாடு, நாகரிகம் நுகர் பொருள் சந்தையை உருவாக்கி வருகின்றனர்.

அதாவது ஒரு பிரமாண்டமான "கசினோ" பொருட்காட்சி அல்லது கண்காட்சி கேளிக்கைப் பூங்காவுக்கு நுழைவுச் சீட்டு பெறுவதைப் போல. அங்கே நுழைந்த பிறகு நீங்கள் பயன்பாடுள்ள அறிவியல் - தொழில் நுட்பம் அவசியமான கல்வி கலாசாரம் நேர்மையான தொழில் வர்த்தக அரசாங்கத்துக்குள் போய் உருப்படியான காரியங்களைச் செய்கிறீர்களா? அல்லது வயிறு முட்டக் குடித்துப் பெருந்தீனி தின்று, ஆபாச வக்கிரக் களிவெறியாட்டம் போடுகிறீர்களா, சூதாட்டம் மற்றும் பிற கிரிமினல் குற்றங்கள் புரிகிறீர்களா, நிர்வாண - பாலுறவுக் காட்சிகளைக் கண்டு களிக்கிறீர்களா என்பதைப் பற்றி "கசினோ" பொருட்காட்சி போன்றவற்றை நடத்துபவர்களுக்கு அக்கறை இல்லை. இன்னும் சொல்லுவதானால் புதுப் புது சந்தாதாரர்களைக் கவரும் வண்ணம் எந்தமாதிரியான இழிகேடான செயல்களையும் செய்யும் அரங்கங்களை ஊக்குவிக்கிறார்கள். ஒவ்வொரு அரங்கிலும் சந்தாதாரர் கழிக்கும் ஒவ்வொரு நொடிக்கும் அரங்குத்தினரும், "கசினோ" அல்லது பொருட்காட்சி நடத்துபவர்களுக்கு நல்ல வசூல் வேட்டைதான்.

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலம் பிட்ஸ்பார்க் நகரில் உள்ள கார்னேஜி மெல்லோன் பல்கலைக்கழகத்தின் ஒரு ஆராய்ச்சிக் குழு, "தகவல் நெடுஞ்சாலையில் நடக்கும் பாலுறவு வக்கிர இலக்கியங்களின் வியாபாரம்" என்கிற பெயரில் ஓா ஆய்வு நடத்தியுள்ளது.

அதன்படி 18 மாதகாலத்தில் ஆயிரக்கணக்கான பாலுறவு வக்கிரப் படங்கள், சிறு கதைகள், சித்தரிப்புகள், திரைப்படங்கள் தகவலுலகில் நுழைக்கப்பட்டிருப்பதாகவும், அவற்றில் 83.5 சதவீத பயனீட்டாளர்கள் கண்டு களித்ததாகவும் தெரிகிறது. தகவலுலகில் மிகப் பெரிய அளவில் பயனீடுகள் பாலுறவு வக்கிரப் படங்கள்தாம். ஒரு அமெரிக்கப் பல்கலைக்கழகத்தின் தகவலுலக பயன்பாடு பற்றிய ஆய்வின்படி 40க்கு 13 இந்தவகையிலானவைதாம். பாலுறவு வக்கிர இலக்கியங்கள் தடை செய்யப்பட்டுள்ள சீனா, ஈரான், சவுதி, அரேபியா போன்ற நாடுகள் உட்பட 40 நாடுகளிலும், அமெரிக்காவின் 50 மாநிலங்களிலும் சேர்த்து 2000 நகரங்களில் இவற்றைக் கண்டு களிக்கிறார்கள்.

கல்வி, ஆய்வுக்காக உள்ள கல்லூரி, பல்கலைக்கழகக் கணிப்பொறிகளை மாணவ மாணவியரும் வீடுகளின் தனி அறைகளில் உறங்கப் போகும் விடலைகள் நள்ளிரவிலும் இரகசியமாக இவற்றைப் பார்த்து பிஞ்சிலேயே வெம்பிப் போகிறார்கள். "செய்திப் பலகை அமைப்பு" எனப்படும் சேவை வலைப்பின்னல் ஏற்பாட்டைப் பயன்படுத்தி சமூகவிரோதங்கள் நீலத்திரைப்பட, பாலுறவு இலக்கிய வியாபாரம் நடத்துகின்றனர். இப்படி பல ஆயிரம் "செய்திப் பலகை அமைப்பு"கள் உள்ளன. இந்த சேவைக்காக மாதம் 10 முதல் 30 டொலர் வரை சந்தா வசூலிக்கின்றன. அமெரிக்காவில் உள்ள 5 பெரிய சேவையாளர்கள் ஒவ்வொருவரும் ஆண்டுக்கு 10 இலட்சம் டொலருக்கு மேல் இதன் மூலம் சம்பாதிக்கின்றன. "செய்திப்பலகை அமைப்பு" மூலம் அமெரிக்காவில் 25,000 நீலப் படங்கள் காட்டி வியாபாரம் நடத்தி கடந்த ஆண்டு மட்டும் 8 இலட்சம் டொலர்கள் சம்பாதித்துள்ளனர்; கலிபோர்னியாவில் உள்ள ராபர்ட் தோமஸ் கர்லீன் தம்பதியினர், இதற்காக இப்போது மூன்றாண்டு சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

காமக் களிவெறியாட்டங்களும் கழிசடைக் கலாசாரமும் தாராளமாக அனுமதிக்கப்பட்டு நிரம்பி வழியும் அமெரிக்காவிலேயே பலரும் அதிர்ச்சியுறும் வண்ணம் தறிகெட்டுப் போய்க் கொண்டிருக்கிறது "தகவலுலகம்". அதில் உள்ள ஆபாசவக்கிரக் காட்சிகளையெல்லாம் தொகுத்து "நீலப் புத்தகம்" என்கிற பெயரில் அமெரிக்க நாடாளுமன்றத்தில் சுற்றுக்கு விட்டபோது "தகவலுலக" வக்கிரங்களுக்குத் தடை விதிக்க வேண்டும் என்று ஒரு புதிய சட்டமே போடப்பட்டது. அமெரிக்க மக்களில் 45 சத வீதத்தினர் தடையை ஆதரித்த போதும் 48 சதவீதத்தினர் தடை விதிக்கக் கூடாது, தாராளமாக அனுமதிக்க வேண்டும் என்கின்றனர். இருந்த போதும் ஏற்கனவே நிலவும் கொஞ்ச நஞ்ச சமூக ஒழுக்கம், நாகரீகம், பண்பாடுகளை வக்கிரமான முறையில் "தகவலுலகம்" சீரழிக்கும் என்கிற பயபீதி உலகம் முழுவதும் பரவி வருகிறது.

# கையில் பை! கழுத்தில் டை! வாயில் பொய்!

**நீங்களும் படிக்கலாம் - சில குறிப்புகள்.**

அப்துல்லா தன்னுடைய வீட்டு வரவேற்பு அறையில் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு நாளிதழ் படித்துக் கொண்டிருக்கின்றார்.

அப்பொழுது வீட்டின் வாசற் கதவு தட்டப்படுகின்றது.

ஆங்கிலத் தமிழில் வாழ்த்துக்களைக் கூறியவாறு மூவர் புன்னகையோடு வாசலில் நின்று கொண்டிருக்கின்றனர்.

அதில் ஒருவர் பெண்மணி, மற்றவர்கள் ஆண்கள், வீடு தேடி வருபவர்களை வாய்மலர வரவேற்பது நமது பாரம்பரியம் அல்லவா.

அப்துல்லாவும், வந்தவர்களை வரவேற்று வீட்டுக்கு உள்ளே வரும்படி அழைக்கின்றார்.

இரு ஆண்களின் கைகளில் பை, கழுத்திலே டை, பெண்மணியின் கையில் ஒரு கோப்பு.

வந்தவர்கள் வியாபாரிகளாகக் காட்சி தரவில்லை. ஏதோ ஒரு நிறுவனத்தின் தூதர்களாக, அப்துல்லாவையும், அவரின் குடும்பத்தையும் செல்வந்தவர்களாக மாற்றக் கூடிய அற்புதம் தங்களிடத்தில் இருப்பது போல தாங்கள் அங்கு வந்திருப்பதாக தெரிவித்ததும், அப்துல்லாவிற்கு ஒரே ஆச்சரியம்.

தன் தாய்மொழியிலேயே, விரிவாகவும், விளக்கமாகவும் வந்தவர்கள் கூறுவதால், அவர்கள் மீது நம்பிக்கை கொண்ட அப்துல்லா, அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, அச்சிடப்பட்ட அழகான சில தாள்களில் கையெழுத்திட்டார்.

வந்தவர்கள் சொன்னது இதுதான்.

முன் பணமாக 2850 ரூபா கொடுக்க வேண்டும். அதற்கு கைமாறாக மூன்று மாதிரியான மின்சாதனங்கள் இலவசமாக கொடுக்கப்படும். பிறகு மாதத்திற்கு ஒரு முறை 1500 ரூபா கொடுக்கப்படும்.

இதற்காக அப்துல்லா மேலும் சிலரைத் தங்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். அப்துல்லாவிற்கு வழங்கப்பட்ட மின் சாதனங்களின் மொத்த விலை 22600 ரூபா என அறிவிக்கப்பட்டது.

அப்துல்லா மகிழ்ச்சியாக பொருட்களை பெற்றுக்கொண்டு, பணத்தைக் கொடுத்தார். பணத்தைப் பெற்றுக் கொண்டவர்கள், ரசீது ஒன்றைக் கொடுத்து விட்டு, பண்பாட்டோடு வழங்கப்பட்ட தேநீரையும், பிஸ்கட்டையும் உண்டுவிட்டு புறப்பட்டு விட்டனர்.

இப்பொழுது மாதங்கள் பல கடந்து விட்டன. அப்துல்லாவிற்கு வாக்குறுதி வழங்கப்பட்டது போல பணம் வந்து சேரவேயில்லை. அவருக்கு இலவசமாக வழங்கப்பட்ட 3 மின்சாதனங்கள் பயன்படுத்தப்பட்ட இரண்டே வாரங்களில் "தலைவலியை" கொடுக்க ஆரம்பித்து விட்டன.

தனக்கு வழங்கப்பட்ட 3 மின்சாதனங்களின் மொத்த விலை 1200 ரூபாவைக் கூட தாண்டவில்லை என்பதைப் பிறகுதான் அப்துல்லா உணர்ந்தார்.

அந்தப் பொருட்கள், அண்டை நாட்டில் தயாரிக்கப்பட்டு சாலை ஓரத்தில் விற்கப்படுகின்ற பிரபலம் இல்லாத பொருட்களாகும். அப்துல்லாவிற்கு கொடுக்கப்பட்ட ரசீதில் இருந்த முகவரியுடன் தொடர்பு கொண்ட போது, அந்த முகவரியில் அந்நிறுவனம் செயல்படவில்லை என தெரியவந்தது. தொலைபேசி எண்ணும்



பயனில்லாமல் போய்விட்டது.

ஆம்! இலங்கையர்களிடையே சீக்கிரமே பணக்காரர் ஆகலாம் என்ற காய்ச்சல் மிக வேகமாக இப்போது பரவி வருகிறது.

உழைக்காமல், வியர்வை சிந்தாமல் பணம் வேண்டும் என ஆசைப்படுவோருக்கு அப்துல்லாவின் அனுபவம் ஓர் உதாரணம்.

ஆனால், நாட்டில் ஆயிரக்கணக்கான அப்துல்லாக்கள் இருக்கின்றனர்.

இது போன்ற திடீர் பணக்காரர் ஆகுங்கள் என்ற திட்டத்தை ஆரம்பித்து அதனால் லாபம் அடைந்த முதலாளிகள் தான் அதிகம். ஏமாந்து போன பயனீட்டாளர்களோ எண்ணிலடங்கா.

யாரோ ஒருவர் லாபம் அடைந்திருப்பார். அதனை உதாரணம் காட்டி அனைவரும் பணக்காரர்களாக ஆகிவிட முடியும் என்பது இந்த நிறுவனங்கள் சொல்கின்ற கற்பனைக் கதை.

**உழைக்காமல் உயர்வேது?**

தண்ணீர் ஊற்றாமல் செடி வளராது. அதுபோல உழைக்காமல், நாற்காலியில் அமர்ந்து கொண்டே பணக்காரராக ஆகிவிட முடியும் என முயற்சி செய்வது முட்டாள் தனமான செயலாகும்.

இப்படி ஆரம்பத்தில் சொற்ப அளவு பணம் போட்டு அது பெரிய அளவில் பெருகிவிடும் என நம்பி இறுதியில் பணம் கிடைக்காமல் மனக் கோளாறு ஏற்பட்டவர்கள் எத்தனையோ பேர்.

சேமித்த பணத்தை இப்படி போட்டு பணம் வராத பட்சத்தில் மனக்கோளாறுகளுக்கு உள்ளானவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

மனைவிக்குத் தெரியாமல் கணவனும், கணவனுக்குத் தெரியாமல் மனைவியும் இந்த திடீர் பணக்காரர் ஆகும் திட்டத்தில் பணத்தைப் போட்டு ஏமாந்து இப்பொழுது இருவருக்கிடையே பேச்சுவார்த்தை இல்லாமல் இருக்கும் குடும்பத்தையும் நம்மால் காண முடிகிறது.

இப்படிப்பட்ட அவல நிலைகள் நமக்கு வேண்டுமா?

ஆண்டவன் நமக்கு இரு கைகளையும், கால்களையும் கொடுத்திருக்கின்றான்.

நேர்மையான வேலை செய்து, பணம் சம்பாதித்து அதிலிருந்து நாம் பெறும் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க நினைத்தால், அப்பணம் நீடித்து நிலைத்திருக்காது.

உழைப்பை நம்பி பிழைப்பைத் தேடுவோம். உயர்வுக்கு அதுவே சிறந்த வழி.

எஸ்.எம்.முகம்மது இத்ரீஸ்.

# இலங்கை தேடும் சமஷ்டி முஸ்லிம்களை பாதிக்கக் கூடாது

இனப்பிரச்சினை - சமாதான முன்னெடுப்புக்கள் போன்ற விடயங்களில் நம் முஸ்லிம்களுக்கு தெளிவேற்பட வேண்டும் என்ற நன்னோக்கில், "முல்லா" சென்ற வாரம் சில சிந்தனைகளை சீண்டி விட்டிருந்தேன். அதிலொன்று, சமூக நல அமைப்புக்கள் நாட்டின் அரசியல் பிரச்சினை குறித்து, முஸ்லிம்களிடையே தெளிவேற்படுத்தும் கூட்டங்களை - கலந்துரையாடல்களை - கருத்தரங்கு மாநாடுகளை எல்லாம் நடத்தும்படி "முல்லா" வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

சென்றவார "முஸ்லிம் குரல்" வெளியான மறுதினம், வெள்ளிக்கிழமை ஜூம்ஆ தொழச் சென்றபோது "முல்லா"வுக்கு ஒரு துண்டுப்பிரசுரம் கிட்டியது. அதில் "மக்கள் பணிமனை" எனும் புதியதொரு அமைப்பு "இலங்கை தேடும் சமஷ்டி" எனும் தலைப்பில் உரையாற்றும் நிகழ்வொன்றுக்கு பொது மக்களுக்கு அழைப்பு விடுத்திருந்தது. கொழும்பு அல் - ஹிக்மா கல்லூரி மண்டபத்தில் 16-மார்ச்-2003 ஞாயிறு மாலை 4.45 மணிக்கு நடைபெறும் விபரத்தையும் அத்துண்டுப்பிரசுரம் சொல்லியது.

பிரஸ்தாபக் கூட்டத்திற்கு "முல்லா" போனேன். "யாழ்" எங்களது தாயகமே எனக்கூறிக் கொண்டிருந்தார் சுபியான் மௌலவி அவர்கள். அடுத்து விரிவுரையாளர் சகோதரர் அனீஸ் "இலங்கை தேடும் சமஷ்டி" எனும் தலைப்பில், சாதாரண பொதுமக்களுக்கும் விளங்கும் விதத்தில் சமஷ்டி பற்றிய அறிமுகத்தை, அது தொடர்பான பல கருத்துக்களை நிகழ்த்தினார்.

விரிவுரையாளர் அனீஸ் "இலங்கை தேடும் சமஷ்டி" தொடர்பாக கூறிய கருத்துக்களின் சாராம்சத்தை "முல்லா" முதற்கண் வாசகர்களுடன் பரிமாறிக் கொள்வது, தொடர்ந்துவரும் கருத்துரையாடல்களுக்கு பயன்படும் என்றே நினைக்கின்றேன்.

"......... சமஷ்டி ஆட்சிமுறையின் அடிப்படை நோக்கம், அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டு வேற்றுமையிலும் ஒற்றுமைகாண்பதேயாகும். இதன்மூலம் பிரிவினை எண்ணம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். அதனாலேயே உலகின்பல நாடுகளில் சமஷ்டி ஆட்சிமுறை பன்னெடுங்காலமாக நிலவி வருவதை அறிகின்றோம். சுவிச்சர்லாந்தில் 700 ஆண்டுகளாக சமஷ்டி ஆட்சிமுறை இருந்து வருகிறது என்றால், அதன் பழமையை எண்ணிப்பாருங்கள்.




இவ்வாறே அமெரிக்கா - கனடா - ஜேர்மனி - இந்தியா போன்ற பல நாடுகளில் இவ்வாட்சி முறை இருந்தே வருகின்றது...."

"இந்த சமஷ்டி ஆட்சிமுறை நிலவும் அத்தனை நாடுகளிலும், ஒரேவிதமான - ஒரே வரைவிலக்கணத்திற்கு உட்பட்ட, ஒரே தன்மையுள்ள சமஷ்டி முறையா பின்பற்றப் படுகின்றது என்றால் அதுதான் இல்லை. எல்லா நாடுகளிலுமே வெவ்வேறு விதமான சமஷ்டி முறையே பின்பற்றப்படுகின்றது என்பதுதான் உண்மை. ஒவ்வாரு நாடும் தத்தமது தேவைக்கேற்ப தமது நாட்டின் பிரச்சினைகளுக்கு பரிகாரம் காணக்கூடிய, தமது மக்களின் மனநிலைக்கேற்பவே சமஷ்டி முறையையே அமுலாக்கி வருகின்றது.

இந்நிலையில் நம் தலைவர்கள் நமது நாட்டுப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில், அவர்களின் சமஷ்டி முறைகளை நம்நாட்டுக்கு கொண்டு வரவே முயற்சிக்கின்றனர். நம்மவர் பிரச்சினைகளுக்கு சமஷ்டி முறைகளில் எப்படி பரிகாரம் காண்பது? எவ்வகையில் பொருத்தமானதாக அமையும்? நாம் அவர்கள் அல்லவே! நாம் நாம் தான். அவர்கள் அவர்கள் தான். இந்நிலையில் பிற நாட்டார் ஒருவரின் சமஷ்டி முறை நம்நாட்டுக்கு எப்படி பொருந்தி வரப்போகின்றது என்பதை சிந்திப்போமாக.

"அதனால் நம் நாட்டுக்கு எந்த நாட்டிலிருந்து சமஷ்டி ஆட்சி முறையை "இறக்குமதி" செய்தாலும், அது நம்மவர் எதிர்நோக்கும் பிரச்சனைக்கு முடிவுகண்டு நம்மவர் சமய - கலாசார விழுமியப்பண்புகளைப்பேணிப்பாதுகாத்து பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுப்பதாக இருக்கவேண்டும். அப்போதுதான் அது, "இலங்கையின் ஆட்சியாக இருக்கும், இருக்கவும் வேண்டும்".

இன்று நம்நாட்டுக்குத் தேவையான சமஷ்டி முறை எப்படி இருக்கவேண்டும் என விளக்கிய விரிவுரையாளர் அனீஸ், சமஷ்டி ஆட்சியின் பண்புகளையும் அதன் நோக்கங்களையும் இலங்கைக்கண்ணோட்டத்தில் மேலும் விளக்கினார்.

"நம் நாட்டுக்கு வரவிருக்கும் சமஷ்டி முறை இனங்களை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும். நம் நாட்டை கடந்த காலங்களில் சீரழித்து வந்தது இனப்பிரச்சினையே! அதனால் இன முரண்பாடுகள் களைந்து, இனங்களிடையே புரிந்துணர்வை, ஒற்றுமையை ஏற்படுத்தி, அதனைக்கட்டிக்காக்கும் சமஷ்டியே வரவேண்டும்.

அதிகாரப்பகிர்வும் இனங்களை அடிப்படையாகக்கொண்டே செய்யப்படவேண்டும். இனங்களை - அவற்றின் அபிலாஷைகளை மறந்துவிட்டு மேற்கொள்ளப்படும் அதிகாரப் பகிர்வு நிச்சயம், நமது நாட்டைப்பொறுத்தமட்டில் தோல்வியையே தழுவும். அரசியல் ரீதியில் இனங்களை மனதில் கொண்டு தீர்வு காணும் அதேவேளை பொருளாதார வளர்ச்சிக்கும் வழிவகை காணவேண்டும். ஒரு நாடு அரசியல் ரீதியில் ஆரோக்கியமாக இருந்துவிட்டால் பொருளாதார ரீதியிலும் அது ஆரோக்கியமாக இருக்கவேண்டும். இன்றேல் சமஷ்டி ஆட்சி சமாதியாகிவிடும்...?

"சமஷ்டி ஆட்சி ஒரு நாட்டில் உருவாகவும் வளர்ச்சிபெறவும் அடிப்படைத்தேவை, சேர்ந்து வாழும் மனப்பக்குவம் ஆகும். எல்லா இனங்களும் மற்ற இனத்தவரை மதித்து, அவர்களின் அபிலாஷைகளைப் புரிந்து சேர்ந்து வாழவேண்டும்" நாம் இதுகாலம்வரை ஒற்றையாட்சியில் பக்குவம் பெற்றவர்கள். சமஷ்டி - கூட்டு ஆட்சியை அடிநாதமாகக் கொண்டதாகும்.

மத்தியில் ஓர் அரசு இருக்கும். மற்றது மாநில அரசாகவோ, மாகாண அரசாகவோ இருக்கும். மத்திய அரசு சில முக்கியமான அதிகாரங்களை தன்னகத்தே வைத்திருக்கும். மற்ற அதிகாரங்களை மாநில, அல்லது மாகாண அரசுகளுக்கு பகிர்ந்தளித்துவிடும். இதுபற்றிய சட்ட அமைப்பு எழுத்தில் அதாவது எழுதப்பட்ட சட்ட அமைப்பாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் இனங்களுக்கிடையே நம்பகத்தன்மை ஏற்படும்"

விரிவுரையாளர் பேசி முடித்ததும் சபையினர் சந்தேக வினாக்களை தொடுத்தனர். பேச்சாளர் அவற்றுக்கு விளக்கமளித்தார்.

நமது நாட்டில் பேரினவாதிகள் அதிகாரங்களை தம் கையில் வைத்துக்கொள்ளவே விரும்புகின்றனர். இந்நிலையில் அதிகாரப்பகிர்வு எந்தளவில் வெற்றியளிக்கும் என்பதை காலம்தான் கூறவேண்டும். அதனால் சட்ட ஏற்பாடு எழுதப்பட்டதாக இருக்கவேண்டும் என்ற உறுதிப்பாடு அவசியமாகின்றது.

விரிவுரையாளர் அனீஸ் பேசிய கருத்துக்களை செவியேற்றபோது, முஸ்லிம் சமூகத்தின் நிலைமைகளை, யதார்த்த நிலைகளை "முல்லா" வுக்கு பல்வேறு பிரச்சினைகளை சிக்கவிழ்த்த பின்னரே சமஷ்டி முறை சாத்தியமாகும் என்பது புரியலாற்று. "தலையை மூடினால் கால் தெரிகிறது, கால்களை மூடினால் தலை தெரிகின்றது" என்ற நிலை யிலேயே முஸ்லிம் சமூகம் இருக்கும் பரிதாபம் "முல்லா" வின் அடிமனதில் சோகமாக பரவியது.

சன்மார்க்க நெஞ்சங்களே! முஸ்லிம்கள் முன்பு போல ஏனோ தானோ என்று இருந்துவிட முடியாது. சமஷ்டி ஆட்சிமுறை அமுலுக்கு வருமுன் நம் சமூகம் சமஷ்டியின் வளைவு சுழிவுகளை உரிய முறையில் உள்வாங்கி ஒரு தெளிவு நிலைக்கு வரவேண்டும். நமது சமூகத்திலுள்ள அரசியல் விற்பன்னர்கள் தாமதியாது ஒன்று கூடி, நம் சமூகத்திற்கு தீங்கு வராத சமஷ்டி முறைவிதிகளை ஆராய்ந்து சமூகத்தை தயார் நிலைக்கு இட்டுச்செல்லவேண்டும். சமஷ்டி விஷயத்தில் ஆட்சியாளர்கள் நடவடிக்கை மேற்கொள்ளும் போது நம்மவர்கள் நமக்குத் தேவையானதை தெரிவிக்கும் தெளிவு நிலையை இப்போதிருந்தே பெறுவதற்கு அரசியல் விரிவுரையாளர்கள் முன்வரவேண்டும்.

காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளும் சந்தர்ப்பத்தை தவறவிட்டால் நம் சமூகம், வருங்காலத்தில் பல்வேறு சிரமங்களை - சிக்கல்களை சந்திக்கவேண்டும். வருங்கால சந்ததியினரின் சாபத்திற்கு ஆளாகாதிருக்க நிகழ்கால அரசியல் தலைவர்களும் அறிஞர்களும் தம்பங்கை சரிவர நிறைவேற்ற முன்வருவோமாக! நம் முன்னோர்கள் காலனித்துவக்காலத்திலும், சுதந்திரம் கிட்டிய ஆரம்பகாலத்திலும், அரசியல் செய்த பங்கினை நாமும் செய்ய முன்வருவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்வர் ஹாஜியாருக்கு ஒரு திறந்த மடல்!

ஒரே நேரத்தில் நேசிக்கப்படக் கூடியவராகவும், வெறுக்கப்படக் கூடியவராகவும் ஒரு மனிதன் இருக்க முடியாது என்பது உங்களுக்குத் தெரியும்! ஒரு நேரத்தில் ஒருவர் நேசிக்கப்படவும், பிறிதொரு நேரத்தில் அவரே வெறுக்கப்படவும் கூடும். நீங்கள் நேசிக்கப்படக் கூடியவராகவும், வெறுக்கப்படக் கூடியவராகவும் இருந்திருக்கிறீர்கள், இருக்கிறீர்கள். இந்த நேசத்திற்கும் வெறுப்பிற்கும் காரணமாக அமைந்திருப்பது உங்கள் அரசியல் வாழ்வில் உங்களது பாத்திரம் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்!

இஸ்லாமிய வாழ்க்கை முறைக்கேற்ப ஒழுகும் உயரிய பண்புகள் கொண்ட மனிதர் நீங்கள். நமது முஸ்லிம் அரசியல்வாதிகளின் ஒழுக்க சீலத்திற்கு நீங்கள் ஒரு முன்மாதிரி! அந்த வகையில் உங்கள் மார்க்க வழி நடத்தைகள் நமது அரசியல் தலைமைகளுக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். இக்கடிதத்தை நாம் உங்களுக்கு எழுதிக் கொண்டிருக்கும் போது இப்போதைய முஸ்லிம் கலாசார அமைச்சர் மு.காங்கிரஸ் தலைவர் பொத்துவிலில் ஒரு திறீ ஸ்டார் உல்லாச ஹோட்டலை திறந்து வைத்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் முஸ்லிம் கலாசார அமைச்சராக இருக்கும் போது எந்த உல்லாச ஹோட்டல்களைத் திறக்கவுமில்லை. இப்படி நடக்கவுமில்லை. உங்கள் பண்பாடு அனுஷ்டானப் பேணுகையை நமது முஸ்லிம் அமைச்சர் முன் மாதிரியாகக் கொள்ள வேண்டும்!

முஸ்லிம் கலாசார அமைச்சு, அமைச்சர் பற்றிப் பேசும்போதெல்லாம் உங்களை மறந்துவிட முடியாது. அவ்வமைச்சை முஸ்லிம்களின் நலனுக்கு பரந்துப்பட்ட அடிப்படையில் சேவையாற்றுவதற்கு மாற்றியதில் உங்களின் பங்களிப்பு கணிசமானது. பள்ளி வாசல்களை நிர்வகிப்பதற்கும், அரபு நாடுக ளிலிருந்து வரும் பேரீச்சம் பழங்களை பங்கிடுவதற்கும் ஹஜ்ஜுக்கு ஆட்களை அனுப்புவதற்கும்... என்றே மட்டுப்படுத்தப்பட்டிருந்த அதன் பணிகளை விசாலமாக்கியதில் உங்களின் உழைப்பு அதிகமானது.

உங்களின் ஆளுமையும் அர்ப்பணிப்பும் அதிகமானதுதான். மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவர் நீங்கள். நல்ல வாசிப்புள்ளவர். நமது சமூக ஆளுமைகளை இனம் கண்டு கௌரவிப்பதிலும், கண்ணியப் படுத்துவதிலும் நீங்கள் முன்னின்று உழைத்த ஒரு சேவைக்காரர்.

நீங்கள் அரசியலுக்கு வந்தது இன்று நேற்றல்ல. டி.பி.ஜாயா, டொக்டர் கலீல் போன்றோர் காலத்தில் அவர்களுடைய அரசியல் வாழ்வுக்கு நிழலாக இருந்து செயற்பட்டீர்கள். அவர்களின் உயர்ச்சிக்கும் பணிக்கும் உங்கள் உழைப்பும் காரணமாக இருந்துள்ளது. ஆனால், அவர்கள் உங்களை பகிரங்க அரசியலுக்கு வராமல் "ஒரு மொழி பெயர்ப்பாளராகவே" வைத்திருந்தனர். அந்த இருட்டடிப்பு தெரிந்தவர்களுக்கு தெரிந்த விடயமே! இவர்களின் மறைவின் பின்னும் கொழும்பு மத்தியிலும், முஸ்லிம்கள் மத்தியிலும் உங்களுக்கு ஒரு தனி இடம் இருந்தது. ஆனால், ஏனோ நீங்கள் அந்த இடத்தை நிரப்ப முன்வரவில்லை. மர்ஹூம் பாக்கீர் மாக்கார் அவர்கள் சபாநாயகராக இருந்தபோது உங்களை அவரின் பிரத்தியேக செயலாளராக நியமித்தார். அவரும் கூட உங்களை நேரடியான அரசியலுக்கு கொண்டு வரவில்லை.

"நியாயமான உழைப்பிற்கு அல்லாஹ் கூலி தருவான்" என்பதற்கு நீங்கள் ஒரு நியாயமான சாட்சி. ஓர் அயராத உழைப்பாளியாக நீங்கள் இருந்ததை நமது நாட்டின் உன்னத தலைவர்களில் ஒருவரான பிரேமதாசா இனம் கண்டார். உங்களை கௌரவித்தார். உங்களுக்கு தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் தந்து முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் ராஜாங்க அமைச்சராகவும் உங்களை ஆக்கினார். நீங்கள் தேசிய ரீதியாக பிரபல்யமானீர்கள். பாராளுமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராக பணியாற்றிய நீங்கள் பாராளுமன்றத்தில் பிரதிநிதியாக்வேயானீர்கள்.

இங்குதான் உங்கள் பாராளுமன்ற அரசியல் வாழ்வு ஆரம்பிக்கிறது. உங்கள் பாராளுமன்ற அரசியல் வாழ்வில் பிறழ்வானதும், முன்பின் முரணானதும், சந்தர்ப்பவசமானதும், கட்சி விசுவாசமானது மான பல்வேறு முகங்களை நீங்கள் எடுக்க வேண்டி வந்தன. 1989 தொடக்கம் 1994 வரை ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்தபோது முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக உங்களால் குரல் கொடுக்க முடியாமல் போய்விட்டது. மனித சமூகமே வெட்கித் தலை குனியுமளவுக்கு முஸ்லிம் சமூகத்தின் மீது மிகப் பெரும் கொடுமைகள் அக்காலப் பகுதியில் அரங்கேறின.

வடக்கிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் புலிகளினால் இனச்சுத்திகரிப்புச் செய்யப்பட்டனர். கிழக்கில் முஸ்லிம்களுக் கெதிரான இனப்படுகொலைகள் நடந்து கொண்டிருந்தன. காத்தான்குடி பள்ளி வாசல்களில் 100க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் இறை வணைத் தொழுது கொண்டிருந்த போது ஷஹீதாக்கப்பட்டனர். மக்காவுக்கு சென்று திரும்பிய ஹாஜிகள் குருக்கள் மடத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டனர். கிழக்கு மாகாணம் பூராகவும் முஸ்லிம்கள் அழித்தொழிக்கப்பட்டனர். பொலநறுவை அழிஞ்சிப் பொத்தானை



முஸ்லிம் கிராமம் படுகொலைகளினால் சிதைக்கப்பட்டது. தென்னிலங்கையில் முஸ்லிம்கள் மீதான சிங்கள இனவாதம் கூர்மையடைந்து முஸ்லிம்கள் நசுக்கப்பட்டனர். இது தொடர்பாக நீங்கள் வாயே திறக்கவில்லை. உங்கள் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் முஸ்லிம்களை பாதுகாப்பதில் இருந்து தவறி விட்டது என்பதை நீங்கள் நேர்மையாக இதுவரை மக்களிடம் ஏற்றுக் கொள்ளவில்லை.

இலங்கைக்கும் - பாகிஸ்தானுக்கு மிடையே கிரிக்கட் மெச் நடந்தால், இலங்கை முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்கு ஆதரவு தெரிவிப்பது கூடாது என்றும்; இலங்கைக்கே ஆதரவு தெரிவிக்க வேண்டுமென்றும் பத்திரிகை, ஊடகங்களுக்கு அறிக்கை விட்டு உங்கள் தேசப்பற்றை நீங்கள் அந்தக்கால கட்டங்களில் வெளிப் படுத்துவீர்கள்!.

இலங்கையில் முஸ்லிம் உம்மா பாதிக்க ப்படும் போது உங்கள் இனத்துவப்பற்று வாய்மூடி மௌனமாகவிருந்தது. சொந்த மக்கள் பாதிக்கப்படும் போது அவர்களை நேரடியாக நீங்கள் வந்து பார்த்தீர்கள். அது உங்கள் மனிதாபிமானம். 1985 ஏப்ரல் சம்பவத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான கலவரத்தின்போது கல்முனை, அக்கரைப் பற்று வரை தன்னந்தனியாக வந்து மக்களை சந்தித்து விட்டுச் சென்றீர்கள். ஆனால் அந்த மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக நீங்கள் குரல் எழுப்பவில்லை. காத்தான்குடி, ஏறாவூர் படு கொலை நடந்த போதும் நீங்கள் எங்கள் ஊர்களுக்கு வந்தீர்கள். கொடூரம் தாங்காமல் கண்ணீர் வடித்தீர்கள். இவைகளை நாங்கள் மறக்கவில்லை. ஆனால், உங்கள் அரசியலில் தொடரும் பாசாங்குத் தனத்தை எங்களால் ஜீரணிக்க முடியாமல் இருக்கிறது.

1989 தொடக்கம் 1994 வரையான உங்கள் காலம் முஸ்லிம்களைப் பொறுத்தவரை "ஒரு ஊமைக் காலமாகவே இருந்தது" திடீரென 93 மேயில் பிரமேதாசா கொல்லப்பட்ட போது உங்கள் அரசியல் வாழ்வு முடிந்து விட்டது என உங்கள் அரசியல் எதிரி கள் மகிழ்ச்சியடைந்திருப்பார்கள். ஆனாலும், உங்கள் பங்களிப்புக் காரணமாக விஜயதுங்க உங்களை கௌரவித்து உங்களது பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலும், ராஜாங்க அமைச்சர் பதவியிலும் கைவைக்கவில்லை.

1994 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் உங்களை எதிர்கட்சிக்கு தள்ளியது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக பாராளுமன்றத்தில் ஒரு குரல் ஒலித்தாலும் அதனை எதிர்க்கும் முதல் ஆள் நீங்கள்தான். உங்கள் கட்சி விசுவாசத்தைக் கண்டு சிங்கள ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களே அதிர்ந்து விட்டார்கள். கனவுகளிலும் கூட மறுப்புத்தான் கொடுத்துக் கொண்டிருந்திருப்பீர்கள் போலிருக்கிறது. அந்தளவிற்கு உங்கள் கட்சி விசுவாசம் தலைக்கேறியிருந்தது. "MR ஒழுங்குப் பிரச்சினை" என உங்களை அழைக்கும் அளவிற்கு நீங்கள் பாராளுமன்றத்தில் ஆள் மாறி இருந்தீர்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கிய அந்தக் காலப் பகுதியில் முஸ்லிம் காங்கிரஸை உருவாகவிடாமல் தடுப்பதற்கு நீங்களும் உங்களைப் போன்று பல்வேறு அரசியல்வாதிகளும் எடுத்த முயற்சிகளும் - அதற்கு எதிராக நமது மக்கள் உறுதி யுடன் நின்று போராடியதையும் நீங்களும் அறிவீர்கள் நாங்களும் அறிவோம். உங்கள் எதிர்ப்புகளை எல்லாம் முறியடித்து முஸ்லிம்களுக்கான தனித்துவ மான அரசியல் இயக்கத்தை நமது மக்கள் கட்டி எழுப்பினார்கள். பாராளுமன்றத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மர்ஹூம் அஷ்ரஃப் அவர்கள் "பிஸ்மில்லாஹிர் ரஹ்மா னிர் ரஹீம்" என பேசத் தொடங்கும் போதே பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நீங்கள் இடையூறு செய்யத் தொடங்கி விடுவீர்கள். உங்களை பாராளுமன்றத்தில் சமாளிப்பதே முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்கு பெரும் சவாலாக இருந்தது. 1989 தொடக்கம் 1992வரையான ஹன்சாட்டுகளை ஒரு முறை தூசு தட்டிப் பாருங்கள்.

இன்று வரலாறு எப்படி மாறி வந்திருக்கிறது. அஸ்வர் ஹாஜியார் அவர்களே! எந்த முஸ்லிம் காங்கிரஸை அழிக்க நினைத்தீர்களோ அந்த முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவுடன்தான் நீங்களும் அமைச்சராக அரியணை ஏறி இருக்கிறீர்கள் - இப்போதெல்லாம் நீங்கள் - பாராளுமன்றத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பேசும் போதெல்லாம் குறுக்கிடுவதில்லை - இந்த நடத்தை மாற்றம் உங்களால் விளைந்ததல்ல, அவர்கள் மாறிவிட்டார்கள், உங்களுடன் சங்கமமாகி விட்டார்கள் என்பதனையே இது காட்டுகிறது.

நீங்கள் சம்மாந்துறைக்கு ரணில் விக்கிரமசிங்காவுடன் வந்து, மரத்திற்கு வாக்குப் போடுங்கள் என எமது மக்களிடம் அழுது கெஞ்சினீர்கள்; கடந்த வாரம் சம்மாந்துறை வந்து அப்போது ரணில் சொன்னதைத் தான் நான் சொன்னேன்; இனி மரத்திற்கு ஓட்டுப் போடாதீர்கள் என்கிறீர்கள். இது எப்படித் தகும் ஹாஜியார்?

இப்போதும் நீங்கள் "MR ஒழுங்குப்பிரச்சினைதான்." முன்னைவிட சற்று அதிகம். இப்போது நீங்கள் குறுக்கிடுவது ஜே.வி.பி, பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் பேசும போது மட்டும்தான். தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்கள் பேசும்போது கூட குறுக்கிடுவதில்லை. அவர்கள் முஸ்லிம் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு எதி ராகப் பேசினாலும் கூட, அப்படி குறுக்கிட்டால் உங்களை ரணில் வீட்டுக்கு அனுப்பிவிடுவார் என்பது நன்றாகத் தெரியும் உங்களுக்கு! எதிர்க்கட்சியினர் பேசினால் அதற்கு மறுப்பு கொடுப்பதே உங்களுக்குத் தரப்பட்டிருக்கும் பணி - அதை ஒழுங்காக கட்சி தலைமை வியக்குமளவிற்கு செய்து வந்தால் - தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக - அமைச்சராக தள்ளு வண்டிக் காலம் வரை நீங்கள் இருக்கலாம். உங்கள் அதிவிசுவாசத்திற்கான கூலி அது!

நாங்கள் உங்களிடம் கேட்க விரும்புவது இதைத்தான்! நீங்கள் எதிர்கட்சியில் இருக் கும் போது எழுப்பிய கேள்விகள் - ஆளும் கட்சியானபோது ஏன் மௌனமடைகிறது? சற்று ஞாபகப்படுத்திப் பாருங்கள் - மாவனல்லை எரிந்தபோது நீங்கள் நமது மக்களுக்காக எழுப்பிய குரல் - ஏன் மாளிகாவத்தை எரிந்தபோது எழுப்பப்படவில்லை? அஷ்ரஃப் அவர்கள் ஊழல் செய்தார்கள் என்று பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து கூத்தாடிய நீங்கள், இப்போது ஏன் ஊழல்களை மூடி மறைக்கப் பார்க்கிறீர்கள்? சந்திரிகா தீர்வுத்திட்டம் கொண்டு வந்து அதனை பாராளுமன்றத்தினுள்ளே தலைவர் அஷ்ரஃப் சமர்ப்பித்துபேசும்போது போட்ட குதியாட்டம். இப்போது முஸ்லிம்கள் முற்று முழுதாகப் புறக் கணிக்கப்படும் போது எப்படி காணாமல் போனது?

கண் முன்னே புலிப் பயங்கரவாதிகள் முஸ்லிம்களை வாழைச்சேனையில் அழித்த போது அதற்கும் புலிகளுக்கும் எதுவித சம்பந்தமுமில்லை என எப்படி உங்களால் வாய் கூசாமல் அறிக்கை விட முடிந்தது? நமது சகோதரர்களை அழிக்க அவதார மெடுத்து வந்தது போல் போர் முரசு கொட்டிய கரி காலனை எப்படி உங்களால் கட்டித் தழுவ முடிந்தது? நமது மக்களின் மரணக் குழிகளின் மீது சமாதானத்தை ஏற்படுத்துவோம் என எப்படி உங்களால் தொடர்ந்தும் மார்தட்ட முடிகிறது?

ஏன் நீங்கள் நமது மக்களின் விடயத்தில் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் பதவியில் இருக்கும் காலத்தில் ஊமை ஆகிறீர்கள். - 'ஊமையன் ஊரைக் கெடுப்பான்' என்பது எமது ஊரில் வழக்கத்திலுள்ள ஒரு பழமொழி. நீங்கள் அரசாங்கத்தில் இருக்கும் போது 'ஊமையாக' முஸ்லிம்கள் விடயத்தில் இருந்து கொண்டு, எடுத்ததற்கெல்லாம் ஏன் சப்பைக் கட்டு கட்டுகிறீர்கள் அரசாங்கத்திற்கு? ஏன் நமதுமக்களின் அரசியல் உணர்வோடு தொடர்ந்தும் மல்லுக்கு நிற்கிறீர்கள்?

இப்படி எழுதுவதால் கோபப்பட்டு விட வேண்டாம்! உங்களின் மீது இருக்கும் அன்பின் காரணமாகவே எழுதுகிறோம்! எதற்கு மறுப்பு கொடுக்க வேண்டும்? எதற்கு வாய்மூடி மௌனமாகவாவது ஆகக் குறைந்தது இருக்கலாம் என்ற இம்மை மறுமை கூட உங்களுக்குப் புரியவில்லையா? உங்களின் விருப்பத்திற்குரிய எதிரிகளான ஜே.வி.பி. தோழர்கள் பாராளுமன்றத்தில் உங்களுக்கு வைத்திருக்கும் பெயர் பற்றிய உங்கள் அபிப்பிராயம்தான் என்ன?

உங்களுக்கு ரணில் எம்.பி பதவி, அமைச்சர் பதவி தருவார், குலைக்கும்...... எஜமான் இறைச்சி போடத்தானே வேண் டும்? எங்களுக்கு எமது சொந்த மக்க ளுக்கு ரணில் என்ன தருவார் என்பதை நீங்கள் சொல்வீர்களா? முஸ்லிம் மக்கள், அரசியல் உரிமையின் பெயரால் வாக்குப் போட்ட கட்சி ஆட்சி அமைக்க உங்களுக்கு வேண்டும். ஆனால், அந்த மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் கடமையை ஏன் மறுக்கிறீர்கள்? உங்களை கண்ணியப்படுத்தும் பணிகளை இனியாவது செய்யப் பாருங்கள். நமது அரசியல் தலைமைகள் போல் நீங்களும் கணக்கெடுக்கப்படாதவர் பட்டியலில் வந்துவிட வேண்டாம். உங்கள் பாராளுமன்ற விவகார அமைச்சுப் பதவியை ரணிலிடம் கொடுத்துவிட்டு பழைய முஸ்லிம் சமய பண்பாட்டு அமைச்சுக்கே திரும்பி வந்து விடுங்கள். அதுவே நமது மக்கள் மத்தியில் உங்களை நேர்மையாக பதிவு செய்யும் பணியுள்ள அமைச்சாகும். உங்களின் மகனின் வயதிலிருந்தே உங்களுக்கு இந்த ஆலோசனையைச் சொல்லுகிறோம்.

அது சரி, நமது முஸ்லிம்களை நீங்கள் விடுங்கள், உலக முஸ்லிம்களின் நண்பராயிற்றே நீங்கள். ஈராக் தூதுவரை உங்கள் அரசாங்கம் அழைத்து அமெரிக்காவுக்கு எதிரான மக்கள் போராட்டங்களை இலங்கையில் நடத்தக்கூடாதென உத்தரவு பிறப் பித்துள்ளதே - சர்வதேச முஸ்லிம்கள் மீதான உங்கள் பரிவுக்கும் பாசத்திற்கும் இப்போது என்ன நடந்தது? வாய்மூடி ஊமையாகி விட்டீர்களா?

நீங்கள் வாய் திறக்க முடியாது என்பது எங்களுக்குத் தெரியும். ஏனெனில் உங்கள் வாய் திறப்பதும், வாய்மூடுவதும் உங்கள் அரசாங்கத்தின் கொள்கையைப் பொறுத்து மட்டும்தான். உங்களுக்கென்று ஒரு சொந்த வாயும் மூளையும் இல்லவே இல்லை ஆளும் கட்சியில் இருக்கும் போது.

'வாய் இருந்தால் வங்காளம் போகலாம்' என எங்கள் மூத்த உம்மா சொல்லுவா, வாயிருந்தால் பாராளுமன்ற உறுப்பினராகி பதவி சுகம் அனுபவிக்கலாம் என்பதும் உங்களைப் பொறுத்தவரையில் உண்மையாகிவிட்டது. உங்கள் இதயம் அண்மையில் வேகமாகத் துடித்துக் கொண்டிருக்கிறது. விரைவில் ஒரு தேர்தல் நடந்தால் தொடர்ந் தும் தேசியப் பட்டியல் எம்.பி. பதவி கிடைக் குமா என்ற சந்தேகம் இப்போது உங் களுக்கு அடிக்கடி வரத் தொடங்கி விட்டது. நீங்கள் இதுவரை காட்டிய எஜமான் விசுவாசத்திற்கு ஊறு வந்து விடப் போகிறது என்று உங்கள் ஆழ்மனமும் சொல்லத் தொடங்கிவிட்டது. அது உண்மையாகியும் விடலாம்; ஏனெனில் நீங்கள் மட்டுமல்ல; அனைத்து முஸ்லிம்களும் சிங்கள ஆட்சி யாளர்களுக்கு கறிவேப்பிலை தான்! பாவித்து விட்டு எறிந்து விடுவார்கள்.

"உங்கள் நாவுகளை பேணிக் கொள் ளுங்கள்' என இறைவன் அல்குர்ஆனில் அச்சமூட்டி எச்சரிக்கை செய்துள்ளான் என் பதை மறந்து விடவேண்டாம். அது உங்களுக்கும் சேர்த்துத்தான்!

உங்கள் பதில் கண்டு மறுமடலில் சந்திக்கும் வரை

அன்புடன்

-அலி உதுமான்-

# தேசந்தழுவிய களியாட்டங்கள்

2003 உலகக் கோப்பை கிரிக்கெட் என்பது வெறும் விளையாட்டு மட்டுமல்ல. அதில் பங்கு பெறுபவர்கள் விளையாட்டு வீரர்களும் நடுவர்களும் மட்டுமல்ல. முடிவுகளைத் தரப்போவது வீரர்களின் திறமைகளும் விதிகளின் நடைமுறைகளும் மட்டுமல்ல. உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளின் பின்னணியில் மட்டுமல்ல, மொத்தக் கிரிக்கெட் விளையாட்டின் பின்னணியில் இருப்பது வியாபாரம் - சாவதேச நவீன வியாபாரம் என்பதை ஒவ்வொரு 5 நிமிடமும் உணர்ந்து கொண்டேதான் கிரிக்கட் பார்க்கப்படுகிறது. உணர்த்தியபடியேதான் கிரிக்கெட் காண்பிக்கப்படுகிறது.

கிரிக்கெட்டுக்கும் நவீன வியாபாரத்திற்குமுள்ள தொடர்புகள் பற்றி விரிவாக விளக்கிச் சொல்லவேண்டிய அவசியமில்லை. ஒவ்வொரு தேசத்து கிரிக்கெட் வாரியங்களும் பெரும் செல்வங் கொழிக்கும் மையங்களாக மாறி நிற்பதும், அதன் நிர்வாகத் தலை மையிடங்களைக் கைப்பற்ற அந்தந்த நாட்டு பெரும் பணக்காரர்களிடையே மோதல்களும், சதித்திட்டங்களும் நடைபெறுவதும் பத்திரிகைகளின் தொடர் செய்திகள்தான். அதனைப் பற்றிய அக்கறைகள் கிரிக்கெ ட்டின் ரசிகனுக்கு 2ம் பட்சம்தான். அவனுக்குத் தேவை அவனது நாயகர்களின் சாகசங்கள் மட்டுமே.

சாகச நாயகர்களின் திளைப்பே தனது திளைப்பாக மாற, பெருமித நடைபோடும் ரசிகனுக்கு விளையாட்டின் பின்னணியில் இருக்கும் வியாபாரத்தின் நுட்பப் பரிமாணங்கள் எல்லாம் பொருட்படுத்தத்தக்கன அல்லதான். கிரிக்கெட்டை விமர்சனம் செய்யும் ஒருவனும் கூட இதனை விலாவாரியாகப் பேசி, தனது புலமையைக் காட்டிக் கொள்ள முடியுமே தவிர கிரிக்கெட்டிலிருந்து வியாபாரத்தையோ வியாபாரத்திலிருந்து கிரிக்கெட்டையோ பிரித்து விட முடியாது. எனவே, அதனைவிட்டு வேறுவிதமான அக்கறை ஒன்றைக் காண்பிக்கலாம்.

90களில் கிரிக்கெட் வெறும் விளையாட்டு அல்ல; இந்தியர்களின் அடையாளம், பாகிஸ்தானியர்களின் தன்மானம், இலங்கைக்கோ தேச இருப்பிற்கான வெளிப்பாடு. இந்த கீழ்த்திசை நாடுகளுக்கு மட்டும் இவ் வாறு நேர்ந்திருக்க கிரிக்கெட்டின் பூர்வ சொந்தக்காரர்களான ஆங்கிலேயர்களுக்கும், அவுஸ்திரேலியர்களுக்கும் இன்றும் அது வெறும் விளையாட்டுத்தான். மேற்கிந்திய தீவுக்காரர்களும் தென்னாபிரிக்கர்களும்கூட அதனை வெறும் விளையாட்டாகவே கருதுகின்றனர். ஆனால், எதிர்வரும் வியாபார நெருக்கடிகளில் இவையெல்லாம் மாறவும் கூடும். சிம்பாப்வே, பங்களாதேஷ், கனடா, நமீபியா, ஹொலந்த் என புதிய வியாபார வெளிகளில் கிரிக்கெட்டின் சாகசங்கள், விளம்பர உத்திகளாக மாறலாம்.

அடுத்த உலகக் கோப்பை நடக்கப் போகும் 2007க்குள்ளேயே இவை எல்லாம் நடந்தேறி விடக்கூடும்.

எட்டாவது உலகக் கோப்பைக்கு இந்திய அணியின் தலைவராக சௌரவ் கங்குலி இருப்பார் என்பது 2002 ஜனவரியில் யாருக்



கும் தெரியாது. அவரே கூட அந்த நம்பிக்கையில்இருந்திருக்க மாட்டார். அந்த நம்பிக்கை அவருக்கு இருந்திருந்தாலும், அவரின் கீழ் ஆட ப்போகும் அணியின் வீரர்கள் பெயரைக் கூற முடியுமா எனக் கேட்டிருந்தால் எட்டுப் பேரின் பெயரைக் கூட அவரால் சொல்லியிருக்க முடியாது. ராவிட், சச்சின் என்று2 மட்டையாளர்களின் பெயரை, வேண்டுமானால் உறுதியாகக் கூறியிருக்க முடியும். மற்றவர்களின் பெயர்களைச் சொல்வதற் கான உறுதியும், திடமும் கங்கு லிக்கு இருந் திருக்க வாய்ப்பே இல்லை. ஆனால், அந்த திடத்தையும் உறுதியையும் தைரியத்தையும் வழங்கிய ஆட்டமொன்று லண்டனில் லோர்ட்ஸ் மைதானத்தில் கடந்த ஆண்டு ஜுன் மாதம் நடந்தது. நொர்ட் வெஸ்ட் கோப்பையின் இறுதி ஆட்டம் தான் அந்த ஆட்டம்.

முத்தரப்புப் போட்டியான நொர்ட் வெஸ்ட் கோப்பைப் போட்டியிலிருந்து இலங்கை வெளியேற, இங்கிலாந்தும் இந்தியாவும் அன்று மோதின. முதலில் மட்டை பிடித்த இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 325 ரண்களைக் குவித்துவிட்டு "வெற்றி நிச்சயம்" என்ற கணிப்புடன் வெளியேறியது. 2வதாக மட்டை பிடித்த இந்திய வீரர்களும், வேகமாக வெளியேறிக் கொண்டிருந்தனர். தொடக்க ஜோடி சொற்ப ரன்களில் பிரிந்து போனது. நம்பிக்கை நட்சத்திரம் டெண்டு ல்காரும் வெளியேறி விட்டார்; ராவிட்டும் நிதானம் இழந்து வெளியேறி "அணியின் தோல்வி உறுதி" என்று இருந்த நிலையில் இளம் வீரர்கள் யுவராஜ் சிங்கும், முஹம்மது ஹைஃபும் போக்கை மாற்றினர். இலக்கு எட்டப்பட்டது. தோற்றுப் போன ஆட்டம் வென்றெடுக்கப்பட்டது. நான்கு மணிநேரத்திற்கு முன்பு காணாமல் போயிருந்த நம்பிக்கைகளும், அணியின் தைரியமும் மீட் டெடுக்கப்பட்டன.

கழுத்தில் தொங்கும் பாசிமணிகளும், நகைகளும், கயிறுகளும் சோர்ந்து ஆட தனது சட்டையைக் கழற்றிக் கங்குலி சுற்றிய சுற்றில் எல்லா அவநம்பிக்கைகளும் காணாமல் போயின. அந்த சுழற்சியில் தனது தலைமை தக்கவைக்கப்பட்டது என்பதோடு இந்தியாவின் உலகக் கோப்பை அணியைக் கண்டு பிடித்து விட்ட சந்தோஷமும் இருந்தது. அந்தச் சந்தோஷம் கங்குலியின் சுழற்றலை ஆதரித்துப் பேசிய வர்ணனையாளரும், முன் னால் தொடக்க ஆட்டக் காரருமான நவ்ஜோத் சிங் சித்துவிடம் மேலும் கூடுதலாக வெளிப்பட்டு, இந்தியாவில் தொலைக்காட்சிப்பெட்டிகளின் முன்னால் அமர்ந்திருந்த எல்லோரையும் தொற்றிக் கொண்டது. பேச்சு இந்தியாவின் வெற்றியாகப் பெறப்பட்டு, உணர்ச்சிகரமான கதாபாத் திரங்களின் வெளிப்பாடாக மாறியது. யுவராஜ் சிங்கும், முஹம்மது ஹைஃபும் பெற்ற வெற்றியை கங்குலியும் சித்துவும் சேர்ந்து கைப்பற்றிய மாயத்திற்கு உதவியது ஊடகங்கள், ஊடகங்களுக்குத் தேவை உணர்ச்சிக [illegible] சித்துவும் கங்குலியும் தங்கள் மிகை உணர்ச்சிகளை அன்று சிறப்பாக வெளிப்படுத்தினார்கள். மிகை உணர்ச்சி கொப்பளிக்கும் மனிதர்களின் ஒழுங்கற்ற நடனங்களே களியாட்டங்களின் ஆதார மையங்கள்.

உலகக் கோப்பைப் போட்டிகளை நடத்தவும் இந்தக் கீழ்த்திசை நாடுகளும் போட்டி போடுகின்றன. வெற்றிகளைப் பெற்று விடவும் அவை தயாராகி விட்டன. போட்டிகளுக்கு நிதி உதவி அளிக்கும் வியாபார நிறுவனங்களும் கூட கீழ்த்திசை தேசத்துக் கம்பனிகளே. இந்த எட்டாவது உலகக் கோப்பையின் முக்கிய விளம்பரதாரர்கள் கூட கீழ்த் திசை நாடுகளில் தங்கள் வியாபார வெளிகளைப் பரப்பியுள்ளவர்கள். கீழ்த் திசை நாடுகளில் நவீன வியாபாரத்தை மேம்படுத்த நவீன கிரிக்கெ ட்டை விட உபயோகமான ஒரு கருவி வேறொன்றிருக்க முடியாது. நவீன கிரிக்கெட் என்பது மைதானத்திற்கு வந்து டிக்கட் வாங்கி, விளையாட்டுப் பார்க்கும் பார்வையாளர்களின் விளையாட்டல்ல. 50 ஓவர்களில் ஒரு முடிவையும் மற்றொரு 50 ஓவர்களில் இன்னொரு முடிவையும் தரும்படியாக வடிவமைக்கப்பட்டுள்ள ஒருநாள் ஆட்டங்கள் மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் பார்வையாளர்கள் பங்கேற்க வாய்ப்பளிக்கும் மிக உணர்ச்சி நாடகங்களின் வடிவத்தை தனதாக்கிக் கொண்டுள்ளன. இன்னும் சொல்வதானால் மேற்கத்திய நடைமுறை நாடக வடிவில் எதிர் எதிர் துருவங்களின் சந்திப்பு, முரண்களின் வளர்ச்சி, உச்ச நிலை, முடிவை நோக்கிய பயணம், இன்பியலாகவோ, துன்பியலாகவோ ஒரு முடிவு எனக் கட்டமைக்கப்பட்ட வடிவில் நிகழும் நாடகம் அது. ஆனால் ஒருநாள் ஆட்டங்கள் உண்டாக்கும் உணர்வுகளோ கீழ்த்திசை நாடுகளின் களியாட்டங்கள் தரும் உணர்வுகளாக உள்ளன. ஒரேயொரு வேறுபாடு, நாடகத்தின் முடிவு அதனைப் பார்த்த பெரும்பாலான பார்வை யாளர்களிடம் ஒரே விதமான உணர்வுகளையே எழுப்ப முயலும். ஆனால் ஒருநாள் கிரிக்கெட்டோ பார்வையாளர்களில் ஒருசா ராருக்கு இன்பியல் உணர்வுகளையும், மற் றொரு சாராருக்குத் துன்பியல் உணர்வுகளையும் உண்டாக்க வல்லதாக இருக்கிறது.

இந்தியா போன்ற கீழ்த்திசை நாடுகளில் நடைபெறும் கிராமங்கள் சார்ந்த களியாட்டங்களிலும் கொண்டாட்டங்களிலும் பங்கேற்றலும் வெளிப்படுத்தலும் என்ற இரண்டு அம்சங்கள் முக்கியமானவை. ஒரு கிராமத்தின் அனைத்துப் பிரிவுமக்களும் ஒன்று திரண்டு நடத்தும் கிராமப்புறத் திருவிழாக்களில் பங்கேற்று வெளிப்படுபவர்கள் அடுத்த வருடத் திருவிழாவரை நினைக்கப்படுவார்கள்; குறிப்பிடப் படுவார்கள். சம அளவில் செய்யப்படும் வசூல் மட்டுமின்றி, பெருந்தனக்காரர்களின் நன்கொடை மூலமும் பரிசளிப்புகள் மூலமும் களை கட்டும் கிராமப்புறக் களியாட்டங்கள் இன்றும் கூடத் தொடர்கின்றன. அவற்றில் அந்தக் கிராமத்து மனிதர்களின் பங்கேற்பு பல விதமாக வெளிப்படும். மஞ்சள் நீராட்டு, புரவி எடுப்பு, காவடி எடுப்பு, மாடுபிடி, பொட்டி தூக்குதல், அக்கினிச் சட்டி, அலகு குத்துதல், பூக்குழி இறங் குதல் என அவர்கள் பங்கேற்று வெளிப்படும் போது உண்டாகும் உணர்வுகள் திளைப்பும் வலியும் தான். ஒரே நேரத்தில் ஒரு பங்கேற்பாளனுக் குத் திளைப்பையும் வலியையும் தரவல்ல கீழைத்தேய கொண்டாட்ட வடிவங்கள் சடங்குகளாகவும் கலை வடிவங்களாகவும் இருந்து காணாமல் போய்க் கொண்டிருக்கின்றன. கிராமங்களைக் காணாமல் போகச் செய்யும் நவீன பொருளா தாரம் தான் அந்த இழப்புக்கும் காரணம். கிராமங்களை விட்டு விட்டு இடம்பெயர்ந் தாலும் அந்த மனிதர்கள் இழந்துவிட்ட இழப்பின் சுமை மனத்தில் தங்கியே நிற்கும். அதை தேடி அலைந்து கொண்டும் இருக்கும். அந்த இழப்புகள் ஈடு செய்யப்பட வேண்டிய இழப்பு கள் என்பதை உணரும் நிலையிலும், அதன் ஈடுசெய்யப்பட்ட வடிவம் கூடுதல் பலன்க ளைத் தரவல்லதாக ஆகும் என்ற நிலையிலும் நிபுணர்களின் மூளையும் செயல்திட்டங்களும் உற்சாகம் கொள்கின்றன. அந்த உற்சாகங்களின் விளைவுகளே இன்று நம்முன் விரியும் ஒரு நாள் ஆட்டங்கள்; ஆட்டநாயகன் விருதுகள்; தொடர் நாயகன் பரிசுகள்; உலகக் கோப்பைப் பிரமாண்டங்கள்.



→ 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வள்ளல் மரம்

அந்தக் காலத்தில் அங்கே ஒரு மரம் இருந்தது. அதற்கு அந்தச் சின்னப் பையனை மிகவும் பிடிக்கும். அவன் அதன் இலைகளைப் பறித்து கிரிடம் செய்து சூட்டிக் கொண்டு "நான் தான் இக்காட்டின் அரசன்" என்று சொல்லி விளையாடுவான்.

அவன் அந்த மரத்தின் மீது ஏறி கிளைகளை உலுக்குவான். அம்மரத்துடன் ஒளிந்து விளையாடுவான். அதன் நிழலிலேயே தூங்கி விடுவான். அவன் அந்த மரத்தை மிகவும் நேசித்தான். அந்த மரமும் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தது.

காலச் சக்கரம் உருண்டு கொண்டிருந்தது. பையனுக்கு வயது கூடிக் கொண்டிருந்தது. இப்போது மரம் பெரும்பாலும் தனியாகவே இருந்தது.

ஒருநாள் அந்தப் பையன் மரத்திடம் வந்தான். மரம் அவனிடம் சொன்னது. "வா தம்பி, வா, என் மீது ஏறு, என் கிளைகளை உலுக்கி விளையாடு. என் பழங்களைச் சாப்பிடு என் நிழலில் விளையாடு. நீ மகிழ்ச்சியடைவாய். நானும் மகிழ் வேன்.

"நான் இப்போது பெரியவனாகிவிட்டேன் என்னால் உன் மீது ஏறி விளையாட முடியாது" என்று பையன் சொன்னான். "எனக்குச் சில பொருள்கள் வாங்க வேண்டும். அப்போதுதான் நான் மகிழ்ச்சியடைவேன். அப்பொருளை வாங்க எனக்குப் பணம் தேவைப்படுகிறது."

"என்னை மன்னித்துவிடு. என்னிடம் பணம் இல்லையே" என்றது.

"ஆனால் என்னிடம் நிறைய இலைகளும் பழங்களும் உள்ளன. எனது பழங்களைப் பறித்து நகரில் விற்றால் உனக்கு நிறைய பணம் கிடைக்கும். நீ மகிழ்ச்சியாக இருக்கலாம்" என்று சொன்னது அம்மரம்.

பையன் உடனே மரத்தின் மேல் ஏறி பழங்களைப் பறித்துச் சென்றான். மரம் மிக்க மகிழ்ச்சியடைந்தது. அதன் பின், அப்பையன் வெகுநாட்கள் வரை அம்மரத்தின் பக்கம் வரவேயில்லை. அந்த மரம் மிகவும் சோகம் அடைந்தது.

ஒரு நாள் திடீரென்று அந்தப் பையன் மீண்டும் வந்தான். மரத்திற்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அது சொன்னது, "வா தம்பி என் மீது ஏறி, என் கிளைகளை உலுக்கி விளையாடு, எனக்கு அது மகிழ்ச்சியைத் தரும்." "இப் போது மரங்களின் மீதுஏறுவதற்கு என்னி



டம் நேரம் இல்லை. எனக்கு ஒரு வீடு உடனடியாக வேண்டும். நான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன். என் மனைவி குழந்தைகள் எல்லோரும் வசிப்பதற்கு ஒரு வீடு தேவை நீ எனக்கு ஒரு வீடு தருவாயா?"

"என்னிடம் வீடு எதுவும் இல்லையே" என்றது மரம்.

"இக்காடுதான் என்னுடைய வீடு. ஆனாலும் நீ என்னுடைய கிளைகளை வெட்டிக் கொள். அவற்றைக் கொண்டு ஒரு வீடு கட்டிக் கொள். ஆனந்தமாக இரு" என்றது மரம்.

அவன் அந்த மரத்தின் கிளைகளை வெட்டி எடுத்துச் சென்று வீட்டைக் கட்டிக் கொண்டான். மரம் மகிழ்ச்சியடைந்தது. அதற்குப் பின் வெகுநாட்கள் வரை அவன் அம்மரத்தின் பக்கம் வரவேயில்லை.

ஒரு வழியாக அவன் மீண்டும் வந்தபோது மகிழ்ச்சியால் வாயடைத்துப் போய் மரத்தால் பேசக்கூட முடியவில்லை. "வா தம்பி" என்று மெல்லிய குரலில் சொல்லியது. "வா! விளையாடு" என்றது.

"இப்பொது எனக்கு மிக வயதாகிவிட்டது. நான் சோகமாக இருக்கிறேன். விளையாடும் நிலை இல்லை" என்றான் அவன்.

"எனக்கு ஒரு படகு வேண்டும். அதில் ஏறி வெகுதூரம் செல்ல வேண்டும். உன்னால் ஒரு படகை தர முடியுமா?"

"என் நடுப்பகுதியை வெட்டி எடுத்து படகு செய்து கொள். அப்புறம், படகில் ஏறி பயணம் செய்து நீ ஆனந்தமடையலாம்" என்றது மரம்.

அவன் நடு மரத்தை வெட்டி எடுத்து ஒரு படகு செய்து படகின் மீது ஏறி பயணம் சென்றுவிட்டான். மரம் மகிழ்ச்சியுடன் இருக்க முயன்று தோற்றது. அதற்குப் பின் பல ஆண்டுகள் கழிந்தன.

அவன் மிண்டும் வந்தான். "என்னை மன்னித்துவிடு தம்பி, உனக்கு தருவதற்கு என்னிடம் ஒன்றுமேயில்லை. என் பழங்கள் தீர்ந்து விட்டன." என்றது மரம்.

"என் பற்கள் ஆடிப்போய் விட்டன. என்னால் பழங்களைக் கடித்துத் தின்ன இயலாது" என்றான் அவன்.

"என்னிடம் கிளைகளே இல்லையே. உன்னால் அவற்றை உலுக்கி விளையாட முடியாதே" என்றது மரம். "எனக்கு ரொம்பவும் வயதா கிவிட்டதே; என்னால் கிளைகளை உலுக்கி விளையாடவும் முடியா தே!" என்றான் அவன்.

"இப்போது என் மீது ஏற முடியாதே"

"என்னால் ஏற இயலாதே"

"உனக்கு ஏதாவது தரவேண்டும் என்று ரொம்பவும் ஆசை. ஆனால், தருவதற்கு என்னிடம் எதுவுமில்லையே என்று நினைத்து நான் வருத்தமடைகிறேன்" என்றது மரம்.

"இப்போது எனக்கு எதுவும் தேவையில்லை" என்றான் அவன். "அமைதியாக உட்கார்ந்து ஓய்வெடுக்க ஒரு இடம் தேவைப்படுகிறது. ஏனெனில் நான் இப்போது சோர்வடைந்து விட்டேன்."

"நல்லது" என்றபடி சற்று நிமிர முயற்சித்தது அந்த (அடி) மரம்.

"வா தம்பி, வா, வந்து என் மீது உட்கார்ந்து ஓய்வெடுத்துக் கொள்"

## (அ.ஸ.நினைவுக் கவிதை)



## தட்டி வளர்த்தார், தமிழ் செய்யதுடித் தெழுந்தோம்!

"காக்கா" என்று நான் கனிவோடு அழைக்கின்ற
பூப்போன்ற அ.ஸ போய்வருட மாகிறதா?
காவியமாய் எனக்குள்ளே கதைபேசி உள்ளத்தில்
ஓவியமாய் பதிந்து உணர்வுகளில் கலந்துள்ளார்

சின்னப் பருவத்தில் செம்மலை நான் காதலித்தேன்
காதலித்த காரணத்தால் கவித்தேனை சுற்றி வந்தேன்
கல்முனைக்கு வந்தால் காணாமல் வரமாட்டார்
அக்கரைப்பற்றில் என்றால் அன்பகத்தில் சந்திப்பேன்.

"மாதுளம் முத்து" என்ற மகத்தான நூலுக்கு
பெயர் சூட்டி வாழ்ந்த பெருமகன் அவரேதான்
எப்போதும் எங்களுக்குள் இறுக்கம் இருந்ததுகாண்
"காக்கா"வை இன்று காணாமல் தவிக்கின்றேன்.

கட்டி அணைத்து கன்னத்தில் முத்தமிட்டு
தட்டி வளர்த்ததனால் தமிழ் செய்ய துடித்தெழுந்தோம்!
அக்கரைப்பற்றில் எங்கள் அ.ஸ. பிறக்காவிட்டால்
திக்கெல்லாம் இன்று தீந்தமிழ் ஒலித்திருக்கா

பக்குவமாய் செந்தமிழை படிப்பித்தார் எல்லோரும்
சொக்கிப் போய் நின்று சுவைத்து மகிழ்ந்தார்கள்
கைகொட்டி தமிழ்வாழ
கரகோசம் செய்தார்கள்.

எங்கள் புலவர்கள் எழுதிய இலக்கியங்கள்
புதை யுண்டு அழிந்தன புதுப்பித்து தமிழாக்கி
தந்தவரில் ஒருவராய்
தலை நிமிர்ந்து நிற்கின்றார்.

எழுத்தாளர் என்றால் இமயத்தில் வாழ்பவராய்
எண்ணுகின்ற "மணிகள்" எமக்குள்ளே ஏராளம்
இந்த மணிகளுக்குள் அ.ஸ எப்போதும்
"சிந்தாமணி"யாக சிறப்போடு வாழ்ந்திருந்தார்.

எத்தனை எழுத்தாளர் எமக்குள்ளே பிறக்கின்றார்
சித்திரமாய் படைப்புகளை செய்பவர்கள் எத்தனை பேர்?
அ.ஸ எமக்குள்ளே
அதிசயமாய் வாழ்ந்த மகன்.

கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், நாடகங்கள்
நாவல்கள் என்றெங்கள் நாயகன் தந்தவைகள்
கொஞ்சமா அவைகளை கூட்டி பெருக்கிவிட்டால்
மலைபோல எங்கள் மனங்களுக்கு காட்சிதரும்.

இலக்கியத்தை வாழ்க்கையின் இலட்சியமாய் ஆக்கியவர்
இந்திய எழுத்தாளர் எழுதிய சிறுகதையை
அப்படியே பார்த்து அதைக் கொஞ்சம் திருத்திவிட்டு
பரவசம் அடைபவர்கள் பலர் இங்கே வாழ்கின்றார்.

அந்த நிலையை அப்படியே மாற்றி
முஸ்லிம் வாழ்க்கையினை முற்றாகச் சிறுகதைக்குள்
செப்பமாய்ச் செய்து சிந்தையில் இடம்பெற்றார்.
பாத்திரத்தை மட்டுமல்ல பண்பாட்டை வாழ்க்கையினை
சிறுகதைக்குள் படம்பிடித்த செம்மலாய் திகழ்கிறார்

நாவலைக் கூட எங்கள் நாயகன் எப்பொழுதும்
பொழுது போவதற்காய் புவியிலே தரவில்லை!
எங்கள் பிரச்சினையை இதயத்தைத் தொட்டவற்றை
மண்வளச் சொற்களை மாறிவரும் புது உலகை
அற்புதமாய் நாவலுக்குள் அடக்கி புகழ்சேர்த்தார்.
கல்விக்கு ஒரு போதும் கரையில்லை என்று சிலர்
சொல்லுகிறார் ஆனாலும் சுகம் பெற்றோர் ஒரு சிலர்தான்
வயதைப் பெரிதாய் வாழ்க்கையிலே நினைக்காது
உன்னி உழைத்தார் உயர்ச்சியினை அவர் கண்டார்.

"பிறைப் பண்ணை" என்ற பிரசுர ஆலயத்தை
ஆக்கித் தமிழுக்கு அரும்பணிகள் அவர் செய்தார்.
"இலக்கியப் பொய்கையை" எழுதாது விட்டிருந்தால்
தமிழ்மொழித் தாகம் தணிந்திருக்க மாட்டாது.

எழுத்தாளர் என்றால் இறுமாப்புச் சிலருக்கு
அஞ்சலுக்குக் கூட அவர் பதில் தரமாட்டார்
என்றாலும் எங்கள் இலக்கிய மணியாய்
வந்துதித்த எங்கள் வரலாற்று நாயகன்
சின்னக் குழந்தைக்கும் சீக்கிரத்தில் பதில் தீட்டும்
பண்பை எனக்குள்ளே பார்த்து ரசித்துள்ளேன்.

எழுபத்தி இரண்டு எழுதிய காவியத்தின்
பக்கங்கள் சிலதை மட்டும் பாசத்தில் புரட்டினேன்.
இத்தனையும் எங்கள் இதயத்துக்குள்ளிருக்கும்
புத்தகத்துக்குள்ளேதான் புதைந்து கிடக்கிறது.
அத்தனையும் திரட்டி அழகுபடுத்திவிட்டால்
இத்தரையில் உள்ளவர்கள் இனிப்போற்ற எழுவார்கள்.

-கவிச்சுடர் அன்பு முகையதீன்

# அமெரிக்காவினால் பதவி கவிழ்க்கப்பட்ட உலகத்தலைவர்கள்

1951 ஆம் ஆண்டு ஈரானில் பிரதமராக இருந்தவர் மொஹமட் மொஸாதே. இவர் தீவிர தேசியவாத சிந்தனை கொண்டவர். ஈரானில் செயற்பட்டு வந்த அங்லோ ஈரான் எண்ணெய்க் கம்பனியை மொஸாதே தேசியமயமாக்கினார். இதனால் அமெரிக்க - பிரிட்டிஷ் நலன்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இதன் காரணமாக அமெரிக்க அடிவருடி ஆட்சியாளராகவிருந்த மன்னர் ஷாவின் கோபத்திற்கும் மொஸாதே ஆளானார். இதன் விளைவு சி.ஐ.ஏ ஏஜெண்டுகளால் இவருக்கு எதிராகக் கலவரங்களும், அரசியல் கோஷங்களும் கிளப்பிவிடப்பட்டன. உடனே மன்னர் ஷா இவரைப் பிரதமர் பாவியில் இருந்து தூக்கி எறிந்துவிட்டு, தனது ஏகாதிபத்திய எஜமான்களுக்கு மிகவும் பிடித்த ஜெனரல். பஸ்லுல்லாஹ் செஹதியை பிரதமராக்கினார்.

1970 இல் சிலி நாட்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சோஷலிசக் கட்சி சார்பாகப் போட்டியிட்ட சல்வடோர் அலண்டே வெற்றி பெறும் வாய்ப்பு அதிகமாகக் காணப்பட்டது. அமெரிக்கா அப்போது சிலியில் பல சுரங்கங்களை நிர்வகித்து வந்தது. இந்தச் சுரங்கங்கள் தேசிய மயமாக்கப்படலாம் என அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் அச்சம் கொண்டார். இதன் விளைவாக சல்வடோர் அலண்டேயின் வெற்றியைத் தடுக்க சி.ஐ.ஏ. தனது சதித்திட்டங்களை ஆரம்பித்தது. ஆனால் அவை பலிக்கவில்லை. அலண்டோ ஜனாதிபதியானார். சி.ஐ.ஏ. சளைக்கவில்லை. அவருக்கு எதிராக பல கலவரங்களைத் தூண்டிவிட்டது. அன்றைய காலகட்டத்தில் சுமார் பத்து இலட்சம் டொலர்களை இதற்கென அமெரிக்கா ஒதுக்கியிருந்தது. சிலியின் பல்வேறு பிரிவுகளில் பணம் வாரி இறைக்கப்பட்டது. முடிவாக 1973 இல் சல்வடோர் அலண்டே பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டார்.

இந்தச் சம்பவத்துக்குப் பின் சிலியின் ஜனாதிபதியாக வந்தவர்தான் ஜெனரல் அகஸ்டோ பினாச்சே. பிற்காலத்தில் ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலியெடுத்த ஒரு அரக்கனாகத் தான் இவர் சிலியை ஆட்சி செய்தார். மக்களால் விரும்பப்பட்ட ஒருவரை தூக்கியெறிந்து விட்டு, மக்களின் இரத்தத்தைக் குடிக்கும் ஒரு கொடியவனைத் தான் அமெரிக்கா அந்த நாட்டின் ஜனாதிபதியாக்கியது.

சி.ஐ.ஏ. தனது கேவலமான அரசியல் நாடகத்தை அரங்கேற்றிய மற்றொரு முக்கிய நாடு கொங்கோ, ஆபிரிக்கா கண்டத்தைச் சேர்ந்த இந்த நாடு முன்னர் சயர் என அழைக்கப்பட்டது. பெல்ஜியத்தின் காலணித்துவ நாடாக இருந்த கொங்கோவில், பெல்ஜியத்துக்கு எதிராக சுதந்திரப் போராட்டத்துக்கு வித்திட்டவர் பெட்கிஸ் ஒலும்பா, கொங்கோவின் முதலாவது பிரதமராக 1960 இல் இவர் பதவியேற்றார். ஆனால் ஒரு நாட்டின் சுதந்திரத்துக்காகப் போராடிய ஒரு தலைவரை நான்கே நான்கு மாதங்கள் மட்டும் தான் பதவி வகிக்க அமெரிக்கா அனுமதித்தது. பெல்ஜியத்துக்கு உதவும் நோக்கில் அந்த நாட்டுப் புலனாய்வுப் பிரிவினர் இணைந்து நடத்திய சதியில் ஒலும்பா கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டார். கொங்கோவின் கடங்கா மாநிலத்தில் [illegible] கெரில்லாக்களின் தலையில் பழிபோடப்பட்டது.

ஆனால், பின்னர் இந்தச் சதியை ஒப்புக் கொண்டு பெல்ஜியம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரியது.

சி.ஐ.ஏ.யின் மற்றொரு சதி அரங்கேற்றப்பட்ட நாடு இந்தோனேஷியா. இந்தோனேஷியாவில் அந்நியர் ஆதிக்கத்துக்கு எதிராகப் போராடி, தேசபிதா என அந்த நாட்டு மக்களால் அன்போடு அழைக்கப்பட்டவர்தான் சுகார்னோ இன்றைய ஜனாதிபதி மேகவதியின் தந்தை. 1966 இல் ஜெனரல் சுஹார்ட்டோவினால் சதிப் புரட்சி மூலம் இவர் பதவி கவிழ்க்கப்பட்டார். இந்தோனேஷிய இராணுவத்துக்கும், கம்யூனிஸ்ட்டுகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்களை மிகச் சாதுர்யமாக தனக்குச் சாதகமாப் பயன்படுத்திக் கொண்ட அமெரிக்காவும் பிரிட்டனும் சுகார்னோவை பதவியில் இருந்து கவிழ்த்தன. இராணுவ - கம்யூனிஸ்ட் மோதல்களின் போது இராணுவத்தைப் பயன்படுத்தியே தனக்குப் பிடிக்காத கம்யூனிஸ்ட்டுகளை அமெரிக்கா தீர்த்துக்கட்டியது. கொல்லப்பட வேண்டிய கம்யூனிஸ்ட்டுகளின் பட்டியலை சி.ஐ.ஏ. இந்தோனேஷிய இராணுவத்துக்கு வழங்கியதாகவும் சில வரலாற்றுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. இதன் விளைவு சுஹார்ட்டோ சுமார் 30 வருடங்களுக்கு மேல் பதவியில் இருந்து நாட்



டையே சூறையாடினார். இன்றுகூட இவருக்கு எதிரான ஊழல் வழக்குகள் பல விசாரணையில் உள்ளன.

இவ்வாறு வரலாற்றில் பதியப்படாத பல கேவலமான செயல்களிலும் அமெரிக்கா சி.ஐ.ஏ.யை ஈடுபடுத்தி வந்துள்ளது. அமெரிக்காவின் சி.ஐ.ஏ.க்கு தொடர்ந்தும் சவாலாக இருந்து வரும் தலைவர்கள் வரிசையில் கியூபா ஜனாதிபதி பிடல் கஸ்ரோவும், ஈராக் ஜனாதிபதி சதாம் ஹூசேனும் முக்கிய இடத்தில் உள்ளனர். இவர்களுள் ஜனாதிபதி கஸ்ட்ரோவை கொலை செய்வதற்கு சி.ஐ.ஏ. தன்னால் முடியுமான கேவலமான மிகவும் தரக்குறைவான எத்தனையோ வழிமுறைகளைக் கையாண்டுவிட்டது. அவற்றில் எதுவுமே இதுவரை பலிக்கவில்லை. சி.ஐ.ஏ.யைப் பொறுத்தமட்டில் கஸ்ட்ரோ ஒரு சிம்ம சொப்பனம்.

இந்த வரிசையில் தற்போது அமெரிக்காவுக்கு பெரும் தலையிடியாக இருப்பவர்தான் சதாம் ஹூசேன். ஈராக்கின் இரும்பு மனிதன். நான் மேலே குறிப்பிட்ட எந்த ஒரு நாட்டின் தலைவரையும் கொலை செய்வதற்கு அமெரிக்காவும் பிரிட்டனும் எந்தக் கட்டத்திலும் யுத்தப் பிரகடனங்கள் எதையும் செய்யவில்லை. இன்றைய நிலைக்கும், இதற்கு முன்னால் முன்னைய நிலைக்குமுள்ள பிரதான வேறுபாடு இதுதான். இந்த வேறுபாட்டுக்கு காரணம் முன்னர் சி.ஐ.ஏ. கலவரங்களை ஏற்படுத்தி, அரசு தலைவர்களைத் தீர்த்துக் கட்டிய எந்த ஒரு நாட்டையும் கைப்பற்றும் எண்ணம் அமெரிக்காவுக்கு இருக்கவில்லை. அதற்கு முக்கிய காரணம் அந்த நாடுகள் எதிலும் அமெரிக்காவுக்குத் தேவையான அளவு, அல்லது அது சுரண்டக் கூடிய அளவுக்கு எண்ணெய் வளம் அங்கு இருக்கவில்லை. தற்போது அமெரிக்கா முழு மூச்சாக ஒரு யுத்தத்தில் குதித்துள்ளது என்றால் அதற்கான ஒரே காரணம் மத்திய கிழக்கின் முழு எண்ணெய் வளத்தையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்தாக வேண்டும் என்பதுதான்.

அமெரிக்கா அரசு தலைவர்களைக் கவிழ்த்தியதால் அந்த நாட்டு மக்கள் எந்த நன்மையையும் அடையவில்லை. ஈரானில் ஷாவின் ஆட்சியாலோ, சிலியில், ஜெனரல் பினாச்சேயின் ஆட்சியாலோ, அல்லது இந்தோனேஷியா வில் சுஹாட்டோவின் ஆட்சியாலோ மக்களுக்கோ தேசத்துக்கோ எவ்வித நன்மையும் கிட்டவில்லை. மாறாக அவர்கள் அனுபவித்ததெல்லாம் துன்பமும், கொடுங்கோன்மையும் தான். இதைப்பற்றி அமெரிக்காவுக்கு எவ்வித கவலையும் கிடையாது. ஏனெனில் அமெரிக்கா சொல்வதைத் தான் அவர்கள் செய்தார்கள். ஆனால் அமெரிக்காவால் பதவியில் அமர்த்தப்பட்டவர்கள் பிற்காலத்தில் அந்த நாட்டு மக்களால் துரத்தியடிக்கப்பட்டுள்ளார்கள் என்பதும் வரலாறு புகட்டும் ஒரு பாடமாக உள்ளது.

ஒரு நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டுமானால் அதை அந்த நாட்டு மக்கள் முடிவு செய்ய வேண்டும். தேர்தல் மூலமோ அல்லது மக்கள் எழுச்சி மூலமோ இது நடக்கும். இதில் வெளியார் எவரும் தலையிடத் தேவையில்லை.

ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்து கொண்டு சதாம் ஹூசேன் பிறந்து வளர்ந்த மண்ணில் இருந்து அவரும் அவரது குடும்பமும் வெளியேற வேண்டும் என புஷ் கட்டளையிடுவதும், அதற்காக காலக்கெடு விதிப்பதும், அது நடக்காத பட்சத்தில் தனது ஆயுத பலத்தால் அந்த நாட்டின் அப்பாவி மக்களைக் கொன்று குவிப்பதும் இன்றைய நாகரிக உலகில் மிகவும் அநாகரிகமான செயலாகும்.

ஈராக்கிற்கு எதிரான இந்த மனிதாபிமானக் குற்றத்தை அமெரிக்கா இப்போது இரண்டாவது தடவையாகக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. சுமார் 12 வருடங்களுக்கு முன் தந்தை புஷ் செய்த அதே அநாகரிகச் செயலை இப்போது தனயன் புஷ் செய்கிறார். ஆனால், தந்தையைவிட ஒரு படி முன்னேறி ஈராக்கை தனது காலடியில் போட்டு நசுக்கும் கைங்கரியத்தில் தனயன் புஷ் ஈடுபட்டுள்ளார். "வெற்றியைத் தவிர வேறு எந்த முடிவையும் யுத்தத்தில் தான் ஏற்கப் போவதில்லை" என புஷ் மமதையோடு கூறியுள்ளார். ஆனால், இந்த வரலாற்றுத் தவறுக்காக புஷ் வருத்தப்படப் போகிறார் என்பதையே யுத்தத்தின் ஆரம்பக்கட்டத் தகவல்கள் உணர்த்துகின்றன.

-அபூ மஹ்தியா

## வர்ணம் தீட்டும் போட்டி - 6



மாணவ, மாணவிகளே! மேலே உள்ள படத்துக்கு வர்ணம் தீட்டி எங்களுக்கு அனுப்பிவையுங்கள். 12 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களே இந்தப் போட்டியில் கலந்து கொள்ள முடியும். கீழ் உள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து 04.04.2003 ஆம் திகதிக்கு முன் எமக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பத்தில் பாடசாலை அதிபர் அல்லது ஆசிரியரின் உறுதியுடன் பாடசாலை இலச்சினையும் பொறிக்கப்படல் வேண்டும். வர்ணம் தீட்டியனுப்பியவர்களுக்கு சிறுவர் நூல்கள் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.

பெயர்: ---------------------------------

வயது: ---------------------------------

வகுப்பு: ---------------------------------

பாடசாலை முகவரி: ---------------------------------

---------------------------------

அதிபர் / ஆசிரியர் கையொப்பம்:

---------------------------------

பாடசாலை முத்திரை:

## காணவில்லை



15 வயது நிரம்பிய மாணவனாகிய அப்துல் ரஷீத் முஹம்மது நபீல் என்பவர் கடந்த மாதம் 23ம் திகதியிலிருந்து காணாமல் போய்விட்டார். இவர் கல்முனை அல்-ஹாமியா அரபுக் கல்லூரி மாணவராவார். இவர் பற்றிய தகவல்கள் தெரிந்தால் தயவு செய்து 5/15, நாவிதன் வெளி, சவளக்கடை, கல்முனை என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள். இவர் காணாமல் போன விடயம் தொடர்பாக பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

*தகவல் - எம்.சி. சரீப்தீன்*

தேசம் தழுவிய கிராமப்புறக் களியாட்டங்கள் மிகக் குறுகிய வெளிகளுக்குள் அதன் பங்கேற்பாளர்களுக்குத் திளைப்பையும் வலிமையும் தரும் அதே நேரத்தில் அதனை அடுத்துள்ள ஒரு கிராமத்திற்கு அவை வெறும் சத்தம் மட்டுமே. தங்களால் நடத்த முடியவில்லையே என்ற வருத்தமோ, நாங்கள் நடத்தும் களியாட்டங்களை இதை விடப் பிரமாதப்படுத்துவோம் என்ற வீறாப்போ மட்டும்தான் இருக்கும். ஆனால் இன்றைய நவீன ஒருநாள் கிரிக்கெட் சகல விதமான உணர்வுகளையும் ஒருசேர உசுப்பிவிடும் வேலையைச் செய்து விடுகிறது. வெற்றி - தோல்வி என்ற இரண்டு முடிவுகளைத் தனித் தனிக் குழுவினருக்கு ஒரே நேரத்தில் அனுப்பு வதன் மூலம் பார்வையாளர்களின் தன்னிலை மட்டும் உசுப்பிவிடப்படுவதில்லை. எதிராளியின் பிறநிலையும் உணர்த்தப் படுகிறது. இந்திய அணி வெற்றி பெறுகிற போது எதிரணி பாகிஸ்தானா கவிருந்தால் இது உணரப்படும் தன்னிலையும் பிறநிலையும் இந்தியா பாகிஸ்தான்; இந்து. இஸ்லாம் என்பதாக மாறுகிற மாயம் இதுதான். இங்கிலாந்தாக இருந்தால் இது அடிமைப்பட்ட வனின் எழுச்சி ஆண்டைகளின் வீழ்ச்சியாகத் தொடர்கிறது. இலங்கையாக இருந்தால் பெரிய நாடு சிறியநாடு என்பதாக விரிகிறது. இதே போல் கறுப்பு, வெள்ளை; சிறுபான்மை, பெரும்பான்மை; நட்பு நாடு, எதிரி நாடு எனப் பலப்பலவாய் விரிந்து கொண்டே இருக்கின்றன.

வலியையும் திளைப்பையும் ஒருசேரத் தந்த கிராமப்புறக் களியாட்டங்களின் இடத்தில், தேசந்தழுவிய களியாட்டங்கள் தேவைப்படுகின்றன. அதிலும் கீழ்த்திசை நாடுகளின் அதிகாரக் கட்டமைப்புகளைத் தக்கவைப்பதற்கு இவை இன்றியமையாதனவாக இருக்கின்றன. இந்தக் களியாட்டங்கள் இல்லையென்றால் இந்தத் தேசங்களின் அடையாளங்களும் இல்லை, தேசங்களின் எல்லைகளும் இல்லை; மானங்களும் இல்லை; இருப்புகளும் இல்லை; இந்தக் களியாட்டங்களில் பங்கேற்காதவர்கள் நாடற்றவர்களாகவும், அடையாளம் இழந்தவர்களாகவும் சுயம் தொலைந்தவர்களாகவும், எண்ணிக்கைக்கு வெளியே இருப்பவர்களாகவும் கணிக்கப் படும் ஆபத்துக்கள் உண்டு.

தேசந்தழுவிய களியாட்டங்கள் காணாமல் போகும் காலம் வரலாம் - ஞாலந்தழுவிய களியாட்டங்கள் உருவாகும் பொழுது.

அஸ்ஸலாமு அலைக்கும்.

முஸ்லிம் குரல் பத்திரிகையின் பிரதிகளைப் படித்தேன். அதில் இழையோடியிருக்கும் சுதந்திரக் கருத்துக்களில் வெகுவாகக் கவரப்பட்டேன். மக்களைக் கைவிட்டு கட்சி சார்பாக எழுதும் இன்றைய பத்திரிகை உலகத்துக்கு மத்தியில் ஒரு பக்கசாரா சமூக விமர்சகராக முஸ்லிம் குரல் இருப்பதில் எனக்குப் பரிபூரண திருப்தி ஏற்படுகின்றது.

முஸ்லிம்களின் நாளைய எதிர்காலத்தைச் சிந்தித்து கவலைப்படும் இளைஞர்களுள் நானும் ஒருவன். இந்தச் சிந்தனை எனக்கு நீண்ட காலமாக இருந்து வந்தது. அதனை எனது ஏனைய சகோதரர்களோடு பகிர்ந்து கொள்ள நினைத்த போது முஸ்லிம் குரல் ஒரு களமாகப் போய்விட்டது எனக்கு.

முஸ்லிம் குரல் பத்திரிகை தொடர்ந்து வரப் பிரார்த்திப்பதோடு முஸ்லிம்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகும் போது அதற்காக போராடும் போராளிகளில் நான் முதன்மையானவனாக இருப்பேன்.

நன்றி.

*நாஸிமுஹம்மது இப்னு ஜாபிர், அக்கரைப்பற்று*

குரலின் நான்காவது சுவடே என் பார்வைக்குக் கிடைத்தது. பார்த்த மாத்திர த்திலேயே அது வசீகரிக்கும் தன்மையை முன்னறிவித்தது. பிரச்சினைக்குரிய விஷயங் கள் தீர்வுகளுக்கான கேள்விகள் ஒரு சமூக த்தின் அபிலாஷைகளை அவாவி நிற்கும் கோணங்கள் ஒவ்வொரு முஸ்லிமின் கை களுக்கும் சென்றடைய வேண்டுமென்பது காலத்தின் தேவையாய் இருக்கின்றது. குரலின் வெற்றிக்கான எனது பிராத்தனை கள் என்றும் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு முஸ்லிம்களின் கல்வி வீழ்ச்சியை நோக்கிய பாதாளத்தில்

முழு இலங்கை முஸ்லிம் பிரதேசங்களையும் நோட்டமிட்டால், கொழும்புவாழ் முஸ்லிம்கள் கல்வித்துறையில் மற்ற பிரதேசத்து முஸ்லிம்களைவிட, மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருப்பதை அறியலாம். இலவசக் கல்விக் கொள்கை அமுலுக்கு வந்து அரைநூற்றாண்டுக்கு மேலாகியும், தலைநகரில் கல்வி வளங்கள் பெருகியிருந்த போதும், கொழும்பு முஸ்லிம் பாடசாலைகளின் "அறுவடை"கள் சந்தோஷப்படும் விதமாக இல்லை.

கொழும்பு வாழ் முஸ்லிம்களில் பெரும்பான்மையினர் - அநேக முஸ்லிம் குடும்பங்கள் இன்றும் தமது அன்றாட வாழ்வியல் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலையிலேயே உள்ளன(ர்). வெளிநாடு சென்று வந்த சில குடும்பங்கள் போடும் "தர்பார்" மினுமினுப்பை அளவுகோலாக வைத்து, கொழும்பு முஸ்லிம்களை அவர்கள் தம் வாழ்க்கைத் தரத்தை எடைபோடக் கூடாது.

கொழும்பு முஸ்லிம்களின் பொருளாதார நிலை, ஊமை கண்ட கனவு போல, வெளியே செல்ல வெட்கப்பட வேண்டிய நிலையிலேயே உள்ளது என்பதை அன்னவர்கள் வாழும் தோட்டங்களின் உள்ளே சென்று பார்த்தால் புரிந்துவிடும். கொழும்பு முஸ்லிம்களின் தொழில் நிலை - பொருளாதார ஈட்டலுக்கான வட்டம் ஆரோக்கியமானதல்ல. கொழும்பு புறக்கோட்டை பஸாரில் நாட்டாண்மைக் காரர்களாக கூலி வேலை செய் வோராக வீதியோர (பேமண்ட்) வியாபாரிகளாக, ஆட்டோ ஓட்டு நராகவே கொழும்பு முஸ்லிம்களில் பெரும் பான்மையோர் "தொழிற்" படுகின்றனர்.

**எஸ்.ஐ.நாகூர்கனி**

இந்த சம்பாத்தியம் போதியதாக இல்லை என உணர்ந்த குடும்பங்களில், அக்குடும்பப் பெண்கள், அப்பம், இடியப்பம், பிட்டு போன்ற காலையுணவு வகையறாக்களை சுட்டு, புறக்கோட்டை பஸாரின் "பெட்டிக்கடை"களுக்கு விநியோகிக்கும் வியாபாரிகளாகக் காலத்தை ஓட்டுவது, இன்றுமே வெளிச்சத்திற்கு வராத யதார்த்தங்கள்.

இப்படி ஆணும் - பெண்ணும், குடும்பத் தலைவனும் - தலைவியும் அன்றாடக் காட்சிகளாக இருக்கையில், அவர்களுக்குத் தம் பிள்ளைகளின் கல்வித்துறையில் அவர்களால் பரிபூரண கவனமோ, கரிசனையோ காட்ட முடிவதில்லை என்பதுதான் நிகழ்கால தரிசனங்கள். "ஏதோ தம் பிள்ளை பள்ளிக்கூடம் போனால் போதும்" என்ற மேலோட்ட உணர்வுதான் கொழும்பு முஸ்லிம்கள் பெரும்பான்மையினரின் மனநிலையாக இருக்கிறதே தவிர, தன் மகன் கற்றவனாக வரவேண்டும் என்ற எண்ணம் எதுவுமேயில்லை. ஏதோ நாலுவார்த்தை தெரிந்தால் போதும் என்ற மனம்.

இதனால் கொழும்பு வாழ் முஸ்லிம் பெற்றோர்களின் பாடசாலை தொடர்பு ஆரோக்கியமானதாக இல்லை. கொழும்பு முஸ்லிம் பள்ளிக்கூடங்களில் தம் பிள்ளைகளின் கல்வி நலன் குறித்துப் பேச அழைப்பு விடுத்தால், 1000 பிள்ளைகளுக்கு 10 பெற்றோர்களே வருகை தரும் பாரம்பரியம் இன்றும் நடைமுறையில் உள்ளது. இதனால் தான் "பாடசாலை கூட்டங்களுக்குப் போனால், அது .... இது என்று காசு கேட்பார்களோ" என்ற பயம் தரும் தன்மான உறுத்தலும், பெற் றோரின் பங்களிப்பு குறைவுக்கு ஒரு காரண மாகும்.

ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கு அதிபர், ஆசிரியர்களின் பங்கு ஒருபுறம் என்றால், மறுபுறத்தே பெற்றோர் - பழைய மாணவர்களின் பங்களிப்பு மிகவும் அவசிய மாகும். பாடசாலை நிர்வாகத்திற்கு அதிபர் - ஆசிரியர்கள் பொறுப்பு என்றால், பாடசாலையின் புறகிருத்திய நடவடிக்கைகளுக்கு பெற்றோரும், பழைய மாணவர்களுமே துணை நிற்க வேண்டும். இது எல்லாப் பாடசாலைகளுக்கும் பொருந்தக்கூடிய பொதுவான விதி முறை.

கொழும்பு முஸ்லிம் பாடசாலைகளை எடுத்துக் கொண்டால், பெற்றோரின் பங்களிப்பு, போதியளவு இல்லை என்பது துரதிஷ்டமாகும். பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு, பிள்ளைகளின் கல்வி நலன்குறித்த கலந்துரையாடலுக்கு வரு ம்படி அழைத்தால் முஸ்லிம் பெற்றோர் வராத நிலையில், குறிப்பிட்ட பாடசாலை எப்படி முன்னேற முடியும்? அப்பாடசாலையின் தரம் எப்படி உயரமுடியும்?



"பாடசாலை கல்விக்கு அதிபர் - ஆசிரியர்கள் தாமே பொறுப்பு; பெற்றோர் அல்லவே!" அப்படியிருக்க, பெற்றோரின் தொடர்பு அவ்வளவாக இல்லை என்பதற்காக, கல்வித்தரம் எப்படி குறைய முடியும் எனக் கேட்பதிலும் உண்மை இல்லாமலில்லை. நடைமுறை கைகொடுக்காத போது, எந்த தியரியும் (கருத்தும்) வெற்றியடையப் போவதில்லை. யாரும் கேட்டு வரப் போவதில்லை; கடமை யை சரிவரச் செய்வதாலும், செய்யாவிட்டாலும், அப்படி பெரிய தண்டனை எதுவும் தரப்ப டுவதில்லை; கொழும்பு பிள்ளைகளுக்கெல்லாம் படிப்பு தலைக்கு ஏறப்போவதில்லை என்ற மன நிலை போன்ற காரணங்களால் கல்வித் தரத்திற்கு பொறுப்பான அதிபர் - ஆசிரியர்கள் ஏனோதானோ மனப் போக்கில் நடக்கும் பொறுப்பற்றத்தனம்.

இந்தப் பொறுப்பற்றத்தனத்தினால் இன்னும் கொழும்பு முஸ்லிம் பாடசாலை ஆசிரியர்கள் பலர், கற்பித்தலோடு வேறு தொழிலும் செய்கின்றனர். பாடசாலையில் வைத்து, பாடசாலை நேரங்களில் "பிஸ்னஸ்" பேசும் ஆசிரிய வியாபாரிகளும் இருப்பதை சுட்டிக் காட்ட முடியும். அதிபரை "கைக்குள்" போட்டுக் கொண்டு, அதிபருக்குத் தேவையான போது "கடனும்" கொடுத்துக் கொண்டு, பாடசாலையில் வைத்து "பாஸ் போட்" வியாபாரம் பண்ணிய புண்ணியவான்களும் கொழும்பில் இருக்கவே செய்கின்றனர். தங்கள் வகுப்பு ஏ.எல். பயின்ற பழைய மாணவி ஒருத்தியை தொண்டர் ஆசிரியர் மாதிரி கற்பிக்க வழி செய்துவிட்டு, அதிபரின் தயவுடன் புறக்கோட்டை பஸாரில் சுற்றித் திரிந்து "திரவியம்" தேடும் ஆசிரியர்களும் இல்லாமலில்லை.

கொழும்பு முஸ்லிம் பாடசாலைகளை பிற ஊர் ஆசிரியர்கள் விரும்பி கேட்டோ, அரசியல்வாதிகள் - எம்.பிக்களின் அரவணைப்பிலோ இடமாற்றம் பெற்று வந்துவிடுகின்றனர். தமது மேல் படிப்பை பட்டதாரி கற்கை நெறியை கொழும்பில் பயின்று கொண்டு, தனது "செலவுக்கு" பாடசாலை ஆசிரியராகவும் ஒட்டிக் கொண்டிருப்போரும் இருக்கவே செய்கின்றனர். தமது எதிர்காலம் பற்றி சிந்திக்கும் அத்தகைய ஆசிரியர்கள், தம்மிடம் நேரசூசி போட்டு ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி எண்ணிப் பாராத "கண்ணியத்திற்குறிய ஆசிரியர்களும்" இருக்கவே செய்கின்றனர்.

மேற்படி வியாபார ஆசிரியர்களால் நாளைய பாடத்தை தயார்படுத்த முடியாத நேரநெருக்கடியில் மறுநாள் வகுப்புக்குச் சென்று, எப்படியோ சமாளித்து விட்டு வரும் ஸாலிஹான ஆசிரியர்களை என்ன செய்யலாம்.

மற்றது கொழும்பில் சனச்செறிவு அதிகம் என்பதாலும், நடுத்தர ஏழை முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும் காலை முதல் நள்ளிரவு வரை தொலைக் காட்சியின் தொல்லை; வானொலிகளின் அலறல் என்பன. கொழும்பிலுள்ள கல்விச் சூழலை கபளீகரம் செய்துவிடுகின்றன.

இப்படி கொழும்பு முஸ்லிம் பாடசாலைகளின் கல்வித்தர வீழ்ச்சிக்கு வித்திடும் காரணங்களை ஆய்ந்து கொண்டே போகலாம். சிறுவட்டம் மட்டும் சிறுபொருளாதார வளர்ச்சியில் தம் பிள்ளைகளை ஓரளவு படிப்பித்து வருகின்றது. இன்னொரு வட்டம் சர்வதேச கல்லூரிகளுடன் கைகுலுக்குகின்றது. பெரும்பாலான முஸ்லிம்கள் மேற்கண்ட காரணங்களை ஆய்ந்து ஆவனம் செய்யாத நிலையில், தரம் எட்டிப் பார்க்கவேயில்லை. பாவம் கொழும்பு வாழ் எம்பிமார்களும் இத்த கையபந்தங்களை எட்டிப் பார்க்கவே யில்லை. பாவம் கொழும்பு வாழ் அப்பாவி முஸ்லிம்கள்.

# முஸ்லிம்கள் ஆயுதம் ஏந்துவது சாத்தியமா?

அரசுக்கும், புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் பல கட்டங்களாக முன்னேறிக் கொண்டிருக்கும் நிலையில் முஸ்லிம்கள் சம்பந்தமாக எத்தகைய உருப்படியான தீர்வுகளும் கணக்கில் எடுக்கப்படாத நிலையே காணப்படுகிறது. பேச்சுவார்த்தை வெற்றிக்கு வரும் பட்சத்தில் நிச்சயமாக முஸ்லிம்களுக்கென தனி அலகோ, சுயாட்சியோ எதுவுமே கிடைக்கப் போவதில்லை என்பது மிகவும் நிச்சயமான ஒன்று. வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் புலிகளின் நிருவாக கட்டமைப்புக்குள் விரும்பியோ, விரும் பாமலோ உள்வாங்கப்படுவார்கள் என்பது உறுதியான ஒன்று.

*ஜீ.முபாறக், மருதானை*

இந்நிலையில் முஸ்லிம்கள் தமது கோரிக்கையான தனியலகை வென்றெடுப்பதற்கு ஜனநாயக ரீதியிலான போராட்டம் தோற்றுப் போனதால் ஆயுதப் போராட்ட த்தை முன்னெடுக்கும் நிலை ஏற்படலாமென கருத்துக் கள் முன்வைக்கப்படுகின்றன. அப்படியானதொரு ஆயுதப் போராட்டம் சாத்தியமா? என்பது பற்றிய விவாதங்கள், கருத்துக்கள் அவசியமாகின்றன. ஆயுதப் போராட்டம் என்பது வெறுமனே துப்பாக்கியை வாங்கி சுடுவது என்பதல்ல. ஆயுதப் போராட்டத்துக்கான சூழல், தளம், மன தைரியம் என்பன முஸ்லிம்களிடம் உள்ளனவா என்பது கேள்விக்குறியாகி விட்ட ஒன்றாகும்.

முஸ்லிம்களைப் பொறுத்த வரை இவை எதுவும் சாத்தியமானதாகத் தெரியவில்லை. முஸ்லிம்கள் மிகப் பெரும்பாலும் நகர வாழ்க்கையையே கொண்டவர்களாக உள்ளதால் முஸ்லிம் ஆயுததாங்கிகள் கிராமங்களுக்கு ள்ளும், ஊர்களுக்குள்ளுமே தலைமறைவாக வாழ வேண்டி ஏற்படும். இதன் காரணமாக ஆட்சியிலிருக்கும் தமிழ் இராணுவம் மிக இலகுவாக அவர்களை வேட்டை யாடி விடலாம். அவர்களுக்கு பக்க துணையாக முஸ்லிம் களிடமுள்ள எட்டப்பர்களும் நிச்சயம் காட்டிக் கொடுப்பவர்களாக இருக்கத்தான் போகிறார்கள். கடந்த காலங்களிலும் அவர்கள் காட்டிக்கொடுத்த சம்பவங்களும் உண்டு. ஆக, முஸ்லிம்களின் ஆயுத போராட்டத்துக்குரிய தளம் இல்லை என்பது தெளிவாகிறது. அதற்குரிய புறச்சூழல் உள்ளதா என்பதை ஆராய்வோம்.

தமிழர்கள் தமது போராட்டத்தை ஆரம்பித்த போது தமிழ் நாட்டை தமது புறச்சூழலாக ஆக்கிக் கொண்டார்கள். காயப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்தல், ஆயுத பயிற்சி, கொள்வனவு என்பன அனைத்தும் அங்கிருந்தே நடைபெற்றன. போராட்டம் முறுக்கேறி வலுப் பெற்ற பின்னரே அவை அனைத்தும் இலங்கைக்குள் நடைபெற் றன. தான் கொல்லப்பட்டால் தனது குடும்பத்தை, மனைவி, பிள்ளைகளுக்கு வாழ்வளிக்க, உணவளிக்க சமூகம் தயாரான நிலையில் இல்லை என்பது முஸ்லிம் வாலிபர்களுக்கு நன்கு தெரியும். போராட்டத்தில் அவர்கள் மரணித்தால் அவர்கள் ஏதோ பாவம் செய்திருப்பார்கள். அதனால் தான் கொல்லப்பட்டார்கள் என்று சிந்திக்கும் பிற்போக்குத்தனமாக ஆத்மீக வறுமையும் நமது நாட்டு முஸ்லிம்களிடையே காணப்படுகின்றன.

கடந்த காலங்களில் முஸ்லிம் சமூகத்தைக் காக்க புறப்பட்டு புலிகளால் கொல்லப்பட்ட பல முஸ்லிம்களின் குடும்பங்கள் அனாதரவாய் இருப்பதையும், இவ்வாறு கொல்லப்பட்டவர்களையும் முஸ்லிம் சமூகம் மறந்து விட் டிருப்பதையும் உதாரணமாகக் காணலாம். ஆக தனியலகு கிடைக்காவிடில் ஆயுதம் ஏந்த வேண்டுமென்ற உணர்ச்சித்தனமான கோசங்கள் எழுப்புவதை முஸ்லிம் அரசியல்வாதிகள், புத்திஜீவிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதற்குப் பதிலாக தங்களுக்கான புறச்சூழல், களம் என்பவற்றை இனம் காணமுயல வேண்டும்.

இவற்றைச் செய்ய முடியாது போனால் தலைவிதியே என புலிகளின் கீழ் அடிமைகளாக வாழ்வது தவிர வேறு வழி இல்லை. இதுதான் யதார்த்தம்.

# நமது ஆளுமைகள்

## மர்ஹூம் பதியுத்தீன் மஹ்மூத்

வரலாற்றுக்கும் தனிமனித வாழ்க்கைச் சரித்திரத்திற்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. ஏனெனில் சமூக மேம்பாட்டுக்காக உழைத்த சிந்தனையாளர்கள், அறிஞர்கள், சமூக சீர்திருத்தவாதிகள், அரசியல் தலைவர்கள் சிலரது வாழ்வு நமது சமூக வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளன. நமது சமூக உருவாக்கத்திற்கு அவர்களது பங்களிப்புக்கள் பக்கத் துணையாக நின்று உரமாகியுள்ளது. நமக்கும் இந்த ஆளுமைகளின் இலட்சியங்களும் இலக்கும் முன்மாதிரியாக அமையவேண்டும். அம்மாபெரும் ஆளுமைகளின் பதிவுகளை நமது நிகழ்கால சந்ததியினருக்கும், எதிர்காலத்திற்கும் கையளிப்பதே இத்தொடரின் நோக்கம். நீங்களும் நமது சமூக ஆளுமைகள் பற்றிய கட்டுரைகளை எமக்கு எழுதலாம்.
(பிரதம ஆசிரியர்)

5

இக்கடிதத்தைப் பார்க்கும் பொழுது பதியுத்தீன் மஹ்மூதின் சகோதரர் வழக்கறிஞர் சலாஹுதீன் அவர்கள் குவாஜா கமாலுத்தீன் அவர்களைப் பற்றி எவ்வளவு அறிந்திருந்தார் என்பதும் அவர் மீது எவ்வளவு மரியாதை வைத்திருந்தார் என்பதும் புலனாகின்றதல்லவா? அப்படிப்பட்ட மிகவும் மதிப்பு வாய்ந்த ஒருவரை நண்பராக அடைவதாயின் உண்மையில் ஜனாப் பதியுத்தீன் அவர்கள் மிகவும் பாக்கியம் பெற்ற ஒருவர் எனத்தான் கூற வேண்டும். குவாஜா கமாலுத்தீன் சாஹிப் அவர்களால் எழுதப்பட்ட கடைசிக் கையெழுத்துப் பிரதியைக் கூட, ஜனாப் பதியுத்தீன் அவர்களுக்கு வாசித்துக் காட்டினார். குவாஜா கமாலுத்தீன் அவர்கள் இறையடி சேருவதற்கு முன்பு, ஜனாப் பதியுத்தீன் அவரது அன்பையும், மதிப்பையும் மட்டும் பெற்றுக் கொள்ளவில்லை. மிகவும் மதிப்பும் உயர்வு வாய்ந்த தாழ்மையான தூய்மையான வாழ்த்துக்களையும் தான் பெற்றுக் கொண்டார், அத்தோடு அவர் எதிர்காலம் பிரகாசம் பொருந்தியதாக அமையவேண்டும் என்று பிரார்த்தித்த பிரார்த்தனைகளும் கூட வீண் போகவில்லை எனக் கூறலாம். அந்த முஸ்லிம் ஞானியின் வாழ்த்துக்களும் பிரார்த்தனைகளும் பிற்காலத்தில் அவரை உயர்ந்த மனிதனாக்கியது என்றால் மிகையாகாது. இதன் காரணமாகத்தான் இந்தியாவிலே அவருக்கே ற்பட்ட பல தடைகளையும் இன்னல்களையும் அகற்றிக் கொண்டு முன்னேறிக் கொண்டே செல்ல இயலுமாக இருந்தது.

## அலிகார் புகுதலும் ஆப்கானிஸ்தான் அரசனின் அரசாங்க விருந்தாளி ஆனதும்

பதியுத்தீன் அவர்கள், 1931 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 07 ஆம் திகதி அலிகார் சர்வகலாசாலைக்கு அனுமதிக்கப்பட்டார். மிகவும் உயரிய இலட்சியங்களைக் கொண்ட அவர், தனது உயர் கல்வியின் தரத்தை உலகுக்கு நிரூபிக்க வேண்டுமென்ற பேராவலோடு காணப்பட்டார். அவரது அலிகார் பிரவேசம் இலங்கையிலிருந்து முஸ்லிம் இளைஞர்களுக்கு ஒரு முன் மாதிரியாகவும், நண்பர்களுக்கும் அவரது நலத்தை விரும்பியவர்களுக்கும் ஒரு எடுத்துக் காட்டாகவும் அமைந்திருந்தது. இலங்கை யிலிருந்து முதன்முதல் அலி கார் சர்வகலாசாலைக்குப் புகுந்த மாணவன் பதியுத்தீன் அவர்களே.



அவர் சகோதரத்துவத்தின் அடிப்படையிலே உலகன் நன்மைகளைப் பற்றி அதிகம் நம்பிக்கை கொண்டிருந்சாலை புகும் பொழுதே தம்மிடையே அமைத்துக் கொண்டகவே அமைந்ததேயன்றி எவ்வித குறுகிய நோக்கஙளையோ கொண்டதாக இருக்கவில்லை. மிகவும் தூரத்போகின்றது? நாம் எம்மை எவ்விதமாகத் தயாரித்துக்றெல்லாம் மிகவும் ஆழமாகச் சிந்தித்து அதற்கேற்ற கொள்கைகளை வகுத்துக் கொண்டார்.

முஸ்லிம் சம்மேளனம் ஒன்றிதார். அலிகார் சர்வகலா கொள்கை மிகவும் பரந்ததாங்களையோ இலட்சியங்கதிலே என்ன நடை பெறப் கொள்ள வேண்டும்? என் விதமாகவேதான் தனது

அலிகார் சர்வகலாசாலையிலே "விகார் முல்க் ஹோல்" எனும் கட்டிடத்திலே புது மாணவர்களுக்கான விருந்து (Freshmen's dinner) ஒன்று நடைபெற்றது. அதில் அவர் நடத்திய பிரசங்கம் அவரது அலிகார் பிரவேசத்தின் நோக்கங்களைப் பிரதிபலித்து. "நான் இலங்கையிலிருந்து வந்திருக்கிறேன். இதனை ஒரு சாதாரண சர்வகலாசாலை என நினைத்துப் பட்டம் பெற்றுக் கொண்டு செல்வதற்காக அல்ல. நான் இங்கு வந்திருப்பதன் விசேட காரணம் இது உலகத்திலே பிரசித்தமான முஸ்லிம் சர்வகலாசாலை என்றதனாலாகும். இஸ்லாமிய அடிப்படையிலும், இஸ்லாமிய சூழ்நிலையிலும் நான் இங்கு கல்விகற்று, இந்தியாவில் இருக்கும் பெரிய தலைவர்களையும் கண்டு, அவர்களது ஆசீர்வாதங்களையும் பெற்று, ஒரு நல்ல பட்டதாரியாக நான் எனது தேசத்திற்குத் திரும்பச் சென்று, எனது தேசத்திற்கும், சமூகத்திற்கும், கலாசாரத்திற்கும் அதிக ஆசையோடு சேவை செய்யக் காத்துக் கொண்டிருக்கின்றேன் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்." எனத் தனது பேச்சிலே கூறிக் கொண்டார்.

எப்பொழுதுமே தனது கொள்கையில் விடாப்பிடியாக இருந்து, அயராது உழைத்து வந்ததன் காரணமாக அவரது புகழும் வெற்றிகளும் இந்தியாவிலே மேலோங்கலாயிற்று. அவரது தலைமைத்துவத்தின் மீது இளைஞர் சமுதாயம் கொண்டிருந்த மதிப்பும், மரியாதையும், நம்பிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தன. எல்லோருடனும் கதைத்துப் பழகித் தன் கொள்கைகளை விளக்கமாக விவரித்து அவர்களையெல்லாம் தன் பக்கம் இழுத்துக் கொள்வதில் வெற்றி கண்டார் மாணவன் பதியுத்தீன். இதனால் அகில இந்திய இளைஞர் சமுதாயத்தின் தலைவரைப் போலவே ஆகிவிட்டார். இந்திய முஸ்லிம் மாணவர்கள் மிகவும் பலம் வாய்ந்த தலைமைத்துவத்தை ஏற்று நடத்த சக்தி வாய்ந்த தலைவர் ஒருவரைத் தேடிப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தனர். எல்லோரையும் ஒன்று திரட்டக் கூடிய ஒரு தலைமைத்துவம் அக்காலத்திலே மிகவும் அவசியமான ஒரு தேவையாகவே இருந்து கொண்டிருந்தது. அத்தேவையை நிறைவு செய்யக்கூடிய பாக்கியம் மாணவன் பதியுத்தீனுக்கே கிடைத்தது.

ஜனாப் பதியுத்தீன் அவர்களின் பின், அலிகார் சர்வகலாசாலையின் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்த ஜனாப் பசால்பாய் பீ.ஏ. (லண்டன்) அவர்கள் கீழ்வரும் கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்.

அக்கருத்துக்கள் அக்காலத்தில் இருந்த முஸ்லிம்களது மனப்போக்கை நன்கு பிரதிபலிக்கின்றது. "இந்திய முஸ்லிம் மாணவர்கள், முன்னைய பரம்பரையினரின் தலைமைத்துவம், மாறுபாட்டுத்தனங்கள், இவை மிகவும் பரந்த ஆழ்ந்த நோக்குக் கொண்டில்லாமை காரணமாக மிகவும் சளைத்துவிட்டனர். அவர்களது சமுதாயத்தை ஒரு புதிய பார்வையிலே காண்பதற்காகவும் புதுவாழ்வு காண்பதற்காகவும் ஒரு புதுவிதமான தலைமைத்துவம் ஒன்றையும் விரும்புகின்றனர். "இவ்வாறு கூறப்பட்டுள்ளதைப் பார்க்கும் பொழுது அக்கலாத்திலே இஸ்லாமிய இந்திய மாணவர்களுக்கு ஒரு சிறந்த தலைமைத்துவம் வகிக்கக் கூடிய ஒருவர் இல்லாமல் போய்விட்டது என்பது புலனாகின்றதல்லவா? இப்படிப்பட்ட நேரத்திலே ஜனாப் பதியுத்தீனின் பேரும் புகழும் இந்தியாவில் பரவிக்கொண்டே இருந்தது. இதனால் பதியுத்தீனின் திறமைகளின் மீது ஏற்பட்ட நம்பிக்கை அவரை அகில இந்திய மாணவ தலைமைத்துவத்தை ஏற்கும்படி தேடி வந்தது. ஒருவர் தன் நாட்டிலிருந்து வேற்று நாடு சென்றால், அந்நாட்டின் கல்வி, கலாசாரம், மொழி என்பவற்றை நன்கு அறிந்து கொண்டால்தான் அந்நாட்டாரோடு இயல்பாக வாழமுடியும். ஜனாப் பதியுத்தீனை நோக்கிப் பதவிகள் காத்துக் கொண்டிருந்தாலும், அவர் அவற்றை ஏற்க முதலில் விருப்பம் தெரிவிக்கவில்லை. அதற்கு நியாயமான காரணங்கள் அவரிடம் இருந்தன. சூழ்நிலையில் ஏற்பட்ட மாற்றங்களும், இந்திய மொழிகளை அறியாமல் இருந்தமையும் தான் அவருக்கு இருந்த முக்கிய தடைகளாகும். மிகவும் குறுகிய காலத்திலே எவ்வாறு இந்திய மொழிகளை அறிந்து கொள்ள முடியும்? எனவே இவ்விதமான இடுக்கண்களை எதிர்த்து எதிர் நீச்சல் அடித்துப் போராடி வெற்றி கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. இதனால் பல்கலைக்கழக இளைஞர் தலைமைப்பீடத்தை ஏற்கச் சிலகாலம் சென்றது. அவரைச் சுற்றி இருந்த சூழ்நிலை மிகவும் கஷ்டமானதாகக் காணப்பட்டதால் தன்னம்பிக்கையையும் கூடுதலாக வரவழைத்துக் கொள்ளலானார்.

(தொடரும்)

# சமாதானப் பாதையிலே முஸ்லிம்கள் எதிர்பார்ப்பது என்ன?

நூற்றாண்டுக்காலச் சரித்திரங்கள் எமது இலங்கை நாடு, உலகின் பல்லின மக்களின் சமாதானமும், நிம்மதியும் வழங்கிய நாடாகச் சித்தரிக்கப்படுவதை நாம் யாவரும் அறிவோம். கல்விச் சீர்த்திருத்த நோக்கங்களில் கூட, மற்றவர்களை மதித்தல் அவர்களது மொழி, கலாசாரம், சமய அனுஷ்டானம் என்பவற்றின் முழு உரிமைகளையும் வழங்கல் மற்றய சமூகத்தினரையும் சகோதரத்துவத்துடன் பேணல் என்பனவே மிக முக்கியமாக வலியுறுத்தப்பட்டிருப்பதை நாம் உணர வேண்டியது அவசியமாகும்.

எம் தாய் நாடான இலங்கையின் முக்கிய இனங்களாகக்கருதப்படும் சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகத்தினரிடையே கலாசார, சமய அனுஷ்டானங்களிலே வித்தியாசமான நடைமுறைகளும், செயற்பாடுகள் காணப்படுவதும் நாமெல்லாம் அறிந்ததே. எனினும், சகோதரத்துவம் எனும் பண்பாட்டை ஒவ்வொரு சமூகமுமே வலியுறுத்திக் கொண்டிருக்கின்றது.

அதேபோன்றுதான், ஒவ்வொரு சமுதாயத்தின் மூதாதையர்கள் அவர்களின் வாழ் காலத்திலே இயற்கையின் வளங்களாகப் பெற்றுக் கொண்ட, அதேபோன்று தங்களது அயராத பாடுபடல் மூலம் பெற்றெடுத்துக் கொண்ட வளங்களும், அவர்கள் ஒரு சமுதாயமாக வாழும்போது பேணிக்காத்த விழுமியங்கள், பாரம்பரியங்கள் உரிமைகள் என்பன பரம்பரை பரம்பரையாகக் கட்டிக்காக்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

இந்த அடிப்படையிலே ஒரு சமூகம் பேணிக்காத்து வரும் இவ்வுரிமைகளின் அமைவிடம் வேறொரு சமூகத்தின் வாழ்விடங்களின் மத்தியிலோ அன்றி அவர்களைச் சுற்றியோ அமைந்துவிடுவதில் எவ்விதத் தவறுமில்லை. இவ்வாறான அமைவுகள் எம் நாட்டில் வாழும் இனங்களுக்கு வழங்கப்பட்டுப் பேணப்படும் உரிமைகளை எடுத்துக்காட்டுபவனவாகவே அமைகின்றனவேயன்றி யாதொரு ஆக்கிரமிப்புத் தன்மையையும் எடுத்துக் காட்ட மாட்டாது. எனினும், நாம் சமூகங்களிடையே எதிர்பார்க்கும் சகோதரத்துவம் பேணப்படாவிட்டால், தவறான உணர்ச்சியையே ஏற்படுத்தும் என்பதில் சிறிதுகூடச் சந்தேகமேயில்லை.

அரேபியா போன்ற நாடுகளிலே இன்று வீணாக்கப்படும் உணவுகள் நைஜீரியா போன்ற நாடுகளின் பஞ்சத்தைப் போக்கப் போதுமானவை என்று நாம் உணர்கின்றோம். ஆயினும், இது நடைமுறையிலே சமநிலையைப் பேணுவதற்கான செயற்பாடாக என்றுமே மேற்கொள்ளப்படுவதில்லை. அதேபோன்றுதான், சமூகங்களும், அவர்களின் பௌதீக, பொருளாதார குடியியல் வளங்களை எம்நாட்டிலும் வித்தியாசமான அளவிடைகளிலேயும் தராதரத்திலும் கொண்டிருப்பதை நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்.

இந்த அடிப்படையிலே முஸ்லிம்கள் தங்களின் பல கோடி மதிப்புள்ள சொத்துக்கள், உடைமைகள் என்பவற்றை மற்றய சமூகங்களின் வாழ்விடங்கள், அல்லது அவர்களைச் சுற்றியுள்ள இடங்களிலே வைத்திருக்கின்றார்கள். இவை அவர்களின் மூதாதையர் வழிவந்த அல்லது அவர்களின் விடா முயற்சி, கடும் உழைப்பு என்பவற்றினால் அவர்களுக்கு உடமையாகியவையாகும். அதுமட்டுமல்லாமல் முஸ்லிம்கள் என்றும் மற்றய சமூகத்தினரைச் சகோதரத்துவத்துடனேயே பேணிப் போசிப்பவர்களாக காலா காலமாக இருந்து வருகின்றார்கள் என்பதன் அசைக்க முடியாத சான்றாகும். அதுமட்டுமல்லாமல், மற்றயச் சமூகத்தினரும் தம்முடன் சமூக, சகோதரத்துவத்துடனேயே நடந்து கொள்வார்கள் என்பதிலே திடசங்கற்பம் கொண்டிருப்பதையும், அதனால்தான் முஸ்லிம்கள் எவ்வித வேறுபாடுகளுமின்றி தமது உடைமை, சொத்துக்கள் என்பவற்றை மற்றய சமூகங்களின் மத்தியாயிருந்த போதிலும் தேடி வைத்திருக்கின்றார்கள் என்றால் அதுமிகையாகாது.

ஆனால், எம் முஸ்லிம் சமூகத்தின் நிலையோ மிகவும் பரிதாபத்திற்குட்பட்டதாகிவிட்டது. நாட்டின் தங்களின் உரிமைக்காகப் போராடி, சமாதானப்பாதையிலே அடி எடுத்து வைத்திருக்கும் இரு முக்கிய சமூகமுமே, எமது நிலைகளை ஒரு முக்கிய விடயமாகக் கருத முன்வராமையே இதுவாகும். காலங்கள் மாறி, சரித்திரங்கள் மறக்கடிக்கப்பட முனைந்தாலும், மனச்சாட்சி ரீதியாக முஸ்லிம்களின் நிலைப்பாடு, அவர்களுக்கு வேண்டப்படும் உரிமைகள் என்பவற்றை யாருமே புறக்கணித்து விடவே முடியாது.

எமது நாட்டின் அரசியல் சாசனங்களுக்கேற்ப, ஒவ்வொரு தனி மனிதனும் சம உரிமை பெறவேண்டும். அதே போன்று சமூகங்களிடையே பரந்து வாழும் முஸ்லிம்களின் உரிமைகள் பேணப்படல் வேண்டும். வடக்கு,கிழக்கு மாகாணங்களிலே எந்த உரிமைகளை வேண்டுவதற்காக தமிழ் சமூகத்தினர் எவ்வகையான ஆதாரங்கள், காரணங்களைச் சுட்டிக் காட்டுகின்றார்களோ, அதே ஆதாரங்கள் காரணங்களை முஸ்லிம் சமுகத்தினரும் தங்களது உரிமைகளைக் கோரும் குரலே கொண்டிருக்கின்றார்கள்.

ஆகவே, வடக்கு, கிழக்கின் முஸ்லிம்கள், எமது நாட்டின் சமாதானப் பணியிலே பங்கேற்ற சமூகமென்ற அடிப்படையிலே சந்தர்ப்பம் வழங்கப் பெறல்வேண்டும். தமிழ் முஸ்லிம்களுக்கு வழங்கப்படும் அதே உரிமைகள் எவ்விதக் குறைபாடுமின்றி முஸ்லிம்களுக்கும் வழங்கப்படல் வேண்டும். சகோதரத்துவ அடிப்படையிலே முஸ்லிம்களின் சொத்து உடைமை என்பனவற்றைத் தமிழ் சமூகம் தாமாகவே முன்வந்து வழங்குதல் வேண்டும். அதற்கு வழிவகுக்கும் வகையிலே, முஸ்லிம் சமூகத்தின் சார்பாகக் குரல் கொடுக்கும் உரிமை, ஒவ்வொரு எதிர்வரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போதும் வழங்கப்பட வேண்டும். இவ்வாறான நடைமுறையினாலேதான் இன்று நாமெல்லாம் ஏங்கிக் கொண்டிருக்கும் சமாதானத்தை வென்றெடுக்க முடியும் என்பதையே வலியுறுத்த விரும்புகின்றேன்.

எம்.ஏம்.முஹைதீன், [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல், எண்ணெய் மற்றும் புஷ்

ஈராக்கிற்கெதிரான அமெரிக்க தலைமையிலான யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உண்மையில் அங்கு என்ன நடைபெறுகிறது, எத்தனை அப்பாவி உயிர்கள் கொல்லப்படுகின்றன, "நேசநாடுகள்' எத்தகைய விளைவுகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றன என்ற உண்மைகள் நமக்கு சரிவரத் தெரியாமலேயே போய்க் கொண்டிருக்கின்றன. யுத்தத்தை முன்னின்று நடாத்திக் கொண்டிருக்கும் நாடுகளின் செய்திகளையே நாம் பிபிசி-சிஎன்என்னுக்கூடாகக் கேட்டும், பார்த்தும் கொண்டிருக்கிறோம் என்பது எவ்வளவு துயரமானதும் கேவலமானதும் கூட. அவ்வப்போது மாற்றாக எழும் குரல்கள் எம்மைச் சரிவர வந்து சேர்வதுமில்லை. இந்தப் பின்னணியில், இன்றைய யுத்த முனைப்பிற்கான பின்னணிகளை, அதற்காகப் போடப்பட்ட திட்டங்களை சற்று பின்னோக்கிய தகவல்களுடன் நோக்கலாம்.

பெப்ரவரி 14,2002, The Guardian பத்திரிகையின் அறிக்கையைப் பார்ப்போம் "இரண்டு இலட்சம் அமெரிக்கத் துருப்புக்களை ஈடுபடுத்தி, சதாமை ஆட்சியிலிருந்து கவிழ்க்கும் முகமான தாக்குதலை இவ்வருட பிற்பகுதியில் ஆரம்பிக்க CIA யும் பெண்டகனும் ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றன" என அமெரிக்க இராஜதந்திர வட்டாரங்களை ஆதாரங்காட்டிய அறிக்கை இவ்வாறு கூறியது.

"ஈராக்கினை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாமல் போனது ஏன்? ஆக அடுத்த கட்டம் ஆட்சிக் கவிழ்ப்புத்தான். அதற்கான தவிர்க்க முடியாத வழி இராணுவ ஆக்கிரமிப்புத்தான். எப்போதாவது தனது தெளிவான, வெளிப்படையான அபிப்பிராயத்தை, ஈராக்கின் பேரழிவு ஆயுதங்களை களைவது தொடர்பில் US தெரிவித்திருக்கிறதா? இல்லை. ஐநா ஆயுத பரிசோதனை என்பது ஒரு கண்துடைப்பு ஆனால் இதுவும் ஒரு காரணமாகலாம். சதாமின் அதிருப்தியாளர்களாலும் சதாமை கவிழ்க்க முடியாத நிலை. மொத்தத்தில், ஆயுதக்களைவுதான் அமெரிக்காவின் முழு முதல் நோக்கமல்ல..."



அந்த அறிக்கையின் இன்னொரு பகுதி இவ்வாறு கூறுகிறது. "ஈராக்கின் பிரதான எதிரணியான ஈராக்கிய தேசிய காங்கிரஸின் இராணுவரீதியான பலத்தில் CIA பெரியளவில் நம்பிக்கை கொள்ளவில்லை. என்றாலும் அது, அதற்குப் பயிற்சி வழங்கல், ஆயுதங்கள் வழங்கல் ஏனைய தந்திரோபாய உதவி வழங்கல் என பல நடவடிக்கைகளை உள்ளிறங்கிச் செய்யவாரம்பித்திருக்கிறது. ஆனால் இவர்களை வைத்து எதிர்பார்த்ததைத் தொடங்குவதற்கான பிடி "ஆயுதப் பரிசோதனை" நிகழ்வுகள்தான்..."

ஆக இங்கு நாம் முதலாவது உண்மையைத் தெரிந்து கொள்கிறோம். அதாவது, அமெரிக்கா நீண்ட காலத்திற்கு பேரழிவு ஆயுதப் பரிசோதனை என்று சதாமை சகித்துக் கொண்டிருக்க முடியாது. அதற்குத் தேவை உடனடி மாற்று அரசாங்கம் அது அமெரிக்காவின் தாளத்திற்கு ஆடுகிற, அதன் இருப்புக்கு அமெரிக்காவில் தங்கி நிற்கின்ற, ஒரு நட்பான அரசபீடம்.

இரண்டாவது யதார்த்தம் இஸ்ரேல் சார்ந்தது. மார்ச் 22, 2002 இஸ்ரேலிய அரச வானொலி இஸ்ரேலிய தகவலாதாரங்களை முன்வைத்து ஒரு செய்தி வெளியிட்டிருந்தது. அதில் அமெரிக்க உப ஜனாதிபதி டிக்செனாய், ஷரோனிடம், அமெரிக்காவின் ஈராக் திட்டங்களில் பாதகம் ஏற்படாதிருக்கும் வகையில், இஸ்ரேலின் பலஸ்தீன முரண்பாடுகளை குறைத்துக் கொள்ளுமாறு கேட்டிருந்தார்.. மேலும் அவர் ஷரோனிடம் அமெரிக்கா முதன் முறையாகவும், முக்கியமாகவும் இஸ்ரேலிய நலனுக்காய் ஈராக்கை தாக்கப் போகிறது என்றார். இதனை மனப்பூர்வமாக ஏற்று, அங்கீகரித்து தாக்குதலுக்கான ஆசிர்வாதத்தையும் வழங்கினார் ஷரோன். ஏன் இஸ்ரேலுக்காக அமெரிக்கா தாக்க வேண்டும்? இஸ்ரேல் அந்தளவுக்கு ஈராக்கிற்கு பயப்படுகிறதா? இருக்கலாம். ஆனால் ஷரோனின் உள்நோக்கம் வேறு... "அமெரிக்காவின் தாக்குதலால் ஈராக்கில் ஏற்படும் பேரழிவு பின்னடைவு பலஸ்தீனியர்களிடத்திலும் ஒரு சோர்வை, பின்டைவை ஏற்படுத்தி, இந்திபாதாவை தோற்கடித்து ஒரு முடிவுக்குக் கொண்டு வரலாம் என்பதுதான் ஷரோனின் பெரும் எதிர்பார்ப்பு.."

"முதன் முறையாகவும், முக்கியமாகவும் இஸ்ரேலுக்காக" என்பதையும் பலஸ்தீனியர்களை சோர்வடையச் செய்தல் என்பதையும் மிகக் கவனமாக வாசியுங்கள்.

அடுத்த, மூன்றாவது 'உண்மைக்குப்' போகமுதல் 2002ன் நடுப்பகுதிக்கு கொஞ்சம் சென்று வருவோம். அப்போது, ஈராக்கில் ஆயுதபரிசோதனை மேற்கொள்ளல் என்ற விடயம் ஒரு சிலருக்குத்தான் தெரிந்திருந்தது. ஆனால் எல்லோருக்கும் தெரிந்த விடயம் அமெரிக்கா இராணுவ ரீதியாக ஈராக்கைத் தாக்க தயாராகிக் கொண்டிருக்கின்றது என்பது. இந்தத் தாக்குதல் ஏன்? ஓர் ஆட்சிமாற்றத்திற்காகத் தான். உதாரணத்திற்கு ஒரு விடயத்தைப் பார்ப்போம். ஒகஸ்ட் 1, 2002ல் ஐ.நா ஆயுத பரிசோதகர் Hons Blix ஐ. ஆயுதப் பரிசோதனை தொடர்பாகப் பேச ஈராக், பக்தாதுக்கு அழைத்தது. ஆனால் அதனை அமெரிக்கா நிராகரித்து விட்டது. ஈராக்கும், ஐ.நாவும் ஆயுத பரிசோதனை விடயதானங்கள் தொடர்பாக கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருக்கையில், அமெரிக்கா இது தொடர்பில் தனது 'பிரதான இலக்கு' எதுவென்பதை வேறுபக்கத்தில் சொல்லிக் கொண்டிருந்தது. வெள்ளை மாளிகை பாதுகாப்புக் கவுன்சிலின் பேச்சாளர் Sean McCromack ஒகஸ்ட் 2ம் திகதி, ஆட்சிமாற்றக் கொள்கை இந்த பரிசோதனை நடவடிக்கைகளால் பாதிக்கப்படுமா என்று கேட்டதற்கு... "எங்கள் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை. 1995லிருந்தே எங்களிடமிருப்பதே அந்த ஆட்சிமாற்றக் கொள்கைதான்." என்றார்.

இதை US under secretary John Bottan k; ஒகஸ்ட் 3ல் இவ்வாறு குறிப்பிட்டார். இதில் யாருக்கும் குழப்பம் வேண்டாம். நாங்கள் ஆயுத பரிசோதகர்களின் பணியை வலியுறுத்துகிறோம் தான். ஆனால் எங்கள் பிரதான கொள்கை பக்தாதில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதுதான். ஆயுத பரிசோதகர்கள் போகிறார்களோ இல்லையோ எங்கள் கொள்கையில் மாற்றமுமில்லை, பிரதியீடுமில்லை..."

### பேரழிவு தரும் ஆயுதங்கள்

'பேரழிவு தரும் ஆயுதங்கள் என்ற விடயம் இதில் எந்தளவு சம்பந்தப்படுகிறது? இவர்கள் ஈராக்கில் ஆட்சிமாற்றம் பற்றிக் கதைக்கிறார்கள். அவர்கள் சொல்வது போல் அப்படி ஏற்பட்டால் இந்தப் 'பேரழிவு ஆயுத விடயங்கள்' எப்படிப் போகும்? எப்படி, எந்த உத்தரவாதப்படி இவ்வழிவு ஆயுதங்களை புதிய அரசு அழிக்கும். இவ்வாயுதங்கள் மிகப்பயங்கரமானது என்கிறார்கள். ஜோர்ஜ் புஷ் காத்திருக்க முடியாது அழித்துவிட வேண்டுமென்று துடிக்கிறார். புதிய மாற்றத்திற்கும் காத்திருக்கத்தானே வேண்டும். அவர்கள் இதனைச் செய்வார்கள் என்ற உத்தரவாதம் யாருக்கு வழங்கப்பட்டிருக்கிறது? இதற்காக ஏதும் உத்திகள், திட்டங்கள் போடப்பட்டிருக்கிறதா? இல்லை. ஆக, இந்தப் பேரழிவு ஆயுதங்கள் விடயம் வெறும் கண்துடைப்பும், இந்த யுத்தத்தின் புறக்காரணியும்தான்!

மூன்றாவது 'உண்மை'க்கு வருவோம். இந்தப் பூகோளத்தில் ஈராக் மட்டுமல்ல இன்னும் பல நாடுகள் இருக்கின்றன அணுவாயுதங்களுடன்! ஈராக்கிடம், இருப்பதாக குற்றம்தான் சாட்டப்பட்டிருக்கிறது. ஆனால் எங்களிடம் அணுவாயுதம் இருப்பதாக சில நாடுகள் ஒத்துக்கொண்டு சவாலும் விட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு வடகொரியா. அது அமெரிக்காவுடன் அனைத்து அணுவாயுத உடன்படிக்கைகளையும் முறித்துக் கொண்டது. பரிசோதகர்களை வெளியேற்றியது. அணுகுண்டு தயாரிக்கும் வல்லமையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆனால் உலகப் பொலிஸ்காரனும், உலகில் தன்னைத் தானே சமாதானத்தின் பாதுகாவலனாய் காட்டிக் கொள்பவனாகிய அமெரிக்கா இங்கு ஒரு ஆட்சி மாற்றத்தை நிகழ்த்த விரும்பவுமில்லை, அழிக்க விரும்பவுமில்லை. இதெல்லாம் புஷ்ஷுக்கு வெறுமனே "இராஜதந்திர விடயங்கள்."!

ஆனால் ஈராக்கில் இது தலைகீழ். கிட்டத்தட்ட 250 தேடுதல்கள், பரிசோதனைகள், பள்ளிவாசல்கள், மாளிகைகள், தனியாரின் வீடுகளென்று சோதனை நடாத்தினார்கள். ஐ.நா பரிசோதகர்களால் ஒரு போத்தல் அளவுகூட அழிவுதரும் இரசாயனங்களைப் பெறமுடியவில்லை. இரசாயன ஏவுகணைகளுக்குப் பயன்படுத்தும் 11 சாதனங்கள் இருந்ததென்றார்கள். அவ்வளவுதான். யுத்தத்தைத் தொடங்கிவிட்டார்கள். ஈராக்கிற்கெதிராக. வட கொரியாவிற்கெதிராக அல்ல. ஏனென்றால் ஈராக்கால் அதன் அப்பாவித்தனத்தை நிரூபிக்க முடியவில்லை. குற்றத்தை ஒப்புக்கொண்டு பகிரங்கப்படுத்தி சவால்விட்ட வட கொரியாவுக்கு எதிராக யுத்தமில்லை. இது பெரும் முரண்நகை.

### தெளிவான ஆனால் இன்னும் பேசப்படாத உந்துதல்கள்

ஆக, அமெரிக்காவின் பிரதான யுத்தக் காரணி பேரழிவு தரும் ஆயுதவிடயம் அல்ல என்பது தெளிவாகத் தெரிகையில், மற்றக் காரணிகள் எது என்பது இலகுவாகத் தெரிந்து விடுகிறது. அவை எண்ணெய்யும், இஸ்ரேலும்.

சரி, மற்ற நாடுகள் இந்த பேரழிவு ஆயுத விடயத்தில் எந்தளவு ஆர்வம் காட்டின? அல்லது அவை இவ்விடயத்தால் ஏதும் அசைவாக்கம் பெற்றதா? உண்மையில் ஐநாவிலுள்ள 180 நாடுகளளவில் இந்த யுத்தவெறிக்கு உடன்படவில்லை. அமெரிக்காவின் அழுத்தம் பல நாடுகளில் பிரயோகிக்கப்பட்டு திசை திருப்பப்பட்டன. பதினைந்து நாடுகளளவில் தீர்மானத்தை வழிமொழிந்து ஈராக்கை ஒத்துழைக்குமாறு கேட்டதுடன், இல்லாத பட்சத்தில் எதிர் விளைவுகளை சந்திக்க வரும் என்ற எச்சரிக்கையும் விடுத்தன. இந்த நாடுகளை வாலாட்டிக் கொண்டு வரச்செய்ய அமெரிக்காவும், பிரிட்டனும் எடுத்த பிரயத்தனங்கள் ஏராளம். இது விடயத்தில் வேறு சில நாடுகள் பலவகை ஆட்டம் போட்டன. சிரியாவுக்கு தனிப்பட்ட முறையிலான உத்தரவாதங்கள் தருவதாக வாக்குறுதியளிக்கப்பட்டது. இப்படி நிறைய கொடுக்கல் வாங்கல்கள், விட்டுக்கொடுப்புகள் என பல செய்து தனக்குப் பின்னால் பல நாடுகளை அணிதிரட்டியது அமெரிக்கா.

எது எவ்வாறு நடந்தாலும், பேரழிவு ஆயுத விடயம், அதில் ஐநாவின் ஈடுபாடு என்பனவெல்லாம் அமெரிக்காவின் மட்டுமேயான அலட்டலை இப்போது உலகுக்குக் காட்டியிருக்கின்றன. ஆனால் மிக வருத்தத்திற்குரிய விடயம் என்னவென்றால், வெறும் 300 மில்லியனளவான மக்களைக் கொண்ட ஒரு நாடு, அதன் அற்பத்தனங்களுக்காக உலகின் 6 பில்லியன் மக்கள் கூட்டத்தை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றது என்பதுதான்! உலகின் நீதி நியாயங்களுக்கு என்ன நடந்துவிட்டது என்ற அங்கலாய்ப்பு மறுபுறம் மனச்சாட்சிகளை உறுத்தியும் கொண்டிருக்கிறது.

பேரழிவு தரும் ஆயுதங்சள் என்ற விடயம் எண்ணெய்க்காக மூட்டிவிடப்பட்ட கரும்புகையடர்ந்த நெருப்பு. அமெரிக்காவின் எல்லாக் கூத்துக்களும் இந்த சக்தியின் ஆதாரமான எண்ணெய்க்காகத்தான். அதற்கான பாவனைத் தேவைகள், அங்கு மிக அதிகம். அமெரிக்கா குறித்த ஓர் அளவான எண்ணெய் வளம் கொண்டிருப்பினும், அதன்



அரைவாசிக்கு மேற்பட்ட தேவைக்கு இறக்குமதி எண்ணெய்யில் தங்கியிருக்க வேண்டிய நிலையிலிருக்கிறது. அத்துடன் அதன் எண்ணெய்க் கிணறுகளும் விரைவாக கையறு நிலைக்குச் செல்லும் நிலையிலிருக்கின்றன. இது போலத்தான் மத்திய கிழக்கல்லாத ஏனைய எண்ணெய் வள நாடுகளது (சோவியத்திலிருந்து பிரிந்த சில நாடுகள், ஆசிய பசிபிக், தென் மற்றும் மத்திய அமெரிக்கா, வெனிசுவேலா) நிலைமைகளும்.

ஈரானுடனான யுத்தத்தின் போதும், ஈராக் - ஈரான் யுத்தத்தின் போதும், அமெரிக்கத் தலைவர்கள் அடிக்கடி ஒரு விடயத்தைச் சொன்னார்கள். அதாவது, இந்தப் பிராந்தியத்தின் எண்ணெய் தடையின்றி அமெரிக்காவை வந்தடைய வேண்டும் என்பதே அக்கூற்று. அத்துடன், உலகின் அரைவாசி எண்ணெய்த் தேவையும் இப்பிராந்தியத்தில் இருந்து செல்ல வேண்டியிருப்பதும் கவனிப்பிற்குரியது.

இந்த எண்ணெய்ப் படலத்தில் ஈராக்கின் இடம் எது? தற்போதை உற்பத்தி வீதத்திலேயே தொடர்ந்தும் ஐநூறு வருடங்களுக்கு நிலைக்கக் கூடிய தன்மையில் ஈராக் இருக்கிறது. இதே நிலை அமெரிக்காவுக்கு 10 வருடத்திற்குத்தான் தாக்குப்பிடிக்கும். குவைத்திற்கு 116 வருடங்கள் பொதுவாக, கிடைக்கின்ற ஏற்புடைய தகவல்களின் படி மத்திய கிழக்கு அதாவது மேற்காசியப் பிராந்தியம் 65 வீதமான, 100 வருடங்களுக்கும் அதற்கும் மேலாகவும் நிலைத்திருக்கக்கூடிய செழிப்பான எண்ணெய் வளங்களை, வயல்களைக் கொண்டிருக்கின்றதென்பது கவனிப்பிற்குரியது.

### மத்திய கிழக்குத் தலையீடு

அமெரிக்காவின் இந்தப் பின்னணியூடான மத்திய கிழக்குக் குவிவு, சதாமை வெற்றிகொள்வதில் பெருமளவு தங்கியிருக்கிறது. அத்துடன் அமெரிக்கா கருதுகிற ஈராக்கின் அசைவியக்கமற்ற தன்மையை அதாவது பிடிகொடுத்து மண்டியிடாத தன்மையை இல்லாமல் செய்வதும் அதற்கு அவசியம். பொதுவாகவே இந்த எண்ணெய் வள நாடுகள் ஜனநாயக வழிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றங்களை, அரசுகளையோ கொண்டிருக்கவில்லை. ஈரானும், ஓரளவுக்கு யமனும் இதில் விதிவிலக்கு. சில நாடுகள் தேர்தல் முறை மூலம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தாலும் அவர்கள் தீர்மானங்கள் எடுக்கும் பிரதான விடயங்களில் செல்லாக் காசுதான். ஆக மொத்தத்தில் இந்த நாடுகளில் அமெரிக்க மேலாதிக்கமே நிலவுகிறது. இது அமெரிக்காவுக்கு மிக அவசியமானது. பொதுவாக அது தனது நலன்களுக்கு பாதகமில்லாத அரசு பொம்மைகளை உருவாக்கிக் கொள்கிறது. கூடவே அந் நாடுகள் தங்கள் பாதுகாப்பு விடயங்களில் அமெரிக்காவையே முற்றுமுழுதாக தங்கி, நம்பி இருக்க வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தி விடுகிறது. அத்துடன் இந்நாடுகளின் எண்ணெய் உற்பத்தித் துறைகளில் இருந்து அமெரிக்க எண்ணெய் நிறுவனங்களை, ஸ்தாபனங்களை வெளியேறச் செய்ய முடியாத அழுத்தங்களையும் ஏற்படுத்தி விடுகிறது.

### குவைத்: அமெரிக்காவுக்கான வரப்பிரசாதம்

ஆக, இவை எல்லாவற்றிற்கும் இப்பிராந்தியத்தில் அமெரிக்காவின் இருப்பு இன்றியமையாததாகிறது. இந்நேரத்தில்தான் குவைத்மீதான ஈராக்கின் ஆக்கிரமிப்பு அமெரிக்காவுக்கு கதவைத் திறந்துவிடுகிறது. விளைவு: சவுதி, கட்டார், குவைத், ஓமான், பஹ்ரெய்ன் போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் அதன் பிரசன்னம்

வெவ்வேறு படையணிகளை ஒன்றுபடுத்தி போரிடமுடியுமான மத்திய கட்டளையிடும் பிரிவை இப்பிராந்தியத்தில் அமெரிக்கா நிறுவி இருக்கிறது. 30000 ஆயிரம் துருப்புக்களைக் கொண்ட ஒரு 'களஞ்சியம்' கட்டாரிலிருக்கிறது. விமானப்படைத் தலைமையகம் சவுதியில், தரைப்படை தலைமையகம் குவைத், கடற்படை பஹ்ரெய்னில் எல்லாம் நிறுவி தன் "இலட்சியத்துக்காக" வெறிபிடித்து அலைந்துகொண்டிருக்கிறது.

உலகம் சர்வதேச சட்டங்களுக்கு கட்டுப்படுவதா அல்லது ஒரு நாட்டின் மேலாதிக்கத்திற்குத் துணைபோவதா என்று குழம்பிப்போயிருக்கிறது. நீதிக்கும், ஆதிக்க சக்திகளின் பக்கச்சார்புக்குள்ளும் சிக்கித்திணறிக் கொண்டிருக்கிறது. ஆக்கிரமிப்புக்கும் நாடுகளின் சுயாதிபத்தியத்திற்கும் இடையில், எதைத் தேர்ந்துகொள்வதென திணறிக்கொண்டிருக்கிறது. மொத்தத்தில் இது உலகத்தின் பெரும்பகுதியை அமெரிக்கா நம்பவைத்தது போன்ற பேரழிவு ஆயுதங்களை களைவதற்கான யுத்தமல்ல. எண்ணெய்க்கும், அதனால் கிடைக்கும் அதிகாரத்துக்குமான யுத்தம். அது, இஸ்ரேலுக்காக அமெரிக்காவின் "பாதுகாப்பில் இடம் பெறுகிற யுத்தமும்கூட"

சயீத் முஹம்மதின் ஆய்வைத்தழுவி
அபூ ஸஹ்ரான்

---

முஸ்லிம் குரல் சுவடு - 06
Muslim Kural
28 மார்ச் 2003 24 - முஹர்ரம் - 1424
Chief Editor, 143, Muhandhiram Road, Colombo - 03.
Tel: 0777-389127, Fax: 01-667963, E-mail: mm-s@eol.lk

## அன்டன் பாலசிங்கம் சொன்னதும்... புஷ் செய்து கொண்டிருப்பதும்...

நமது மக்களே!

எதிர்வரும் 7ஆம் கட்ட பேச்சுவார்த்தையானது, முஸ்லிம்களின் அரசியலில் முக்கியமான அரசியல் அனுபவத்திற்கான காலமாகும். நமது மக்கள் அனைவரும் அரசியல் விழிப்புணர்ச்சியுடன் இக்காலம் குறித்து இருக்க வேண்டியுள்ளது. நமது அரசியல் தலைமைகளோ இப்பேச்சுவார்த்தை அரங்கை சொந்த மக்களிடம் தம்மை நிரூபிப்பதற்கான மீண்டுமொரு சந்தர்ப்பமாகவும் அமைய உள்ளது.

ஆறாம் கட்ட பேச்சுவார்த்தை முடிந்தவுடன் அன்டன் பாலசிங்கம் தெரிவித்துள்ள கருத்துக்கள் முஸ்லிம் மக்கள் மீதான ஆதிக்க உணர்வினை வெளிப்படுத்தி நிற்கிறது. இவ்வாதிக்க கருத்தினை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம். அதன் முக்கிய சில அம்சங்களை நமது மக்களுக்கு கோடிட்டுக்காட்ட விரும்புகிறோம்.

+ எமது இருபத்தைந்து ஆண்டு காலப் போரின் விளைவாக இரண்டு பெரிய சக்திகளான - அரசாங்கமும் விடுதலைப் புலிகள் இயக்கமும் நடத்தும் பேச்சு இதுவென்பதை முஸ்லிம் தரப்பு புரிந்து கொள்ள வேண்டும். மூன்று தரப்பு பேச்சு நடத்துவதற்காக இந்தப் போரை நாங்கள் 25 வருடங்களாக நடத்தவில்லை.

+ நானும், தமிழ்ச் செல்வனும், கருணாவும் அமைச்சர் ஹக்கீமுடன் நீண்ட நேரம் மனம் திறந்து பேசினோம். நாங்கள் ஒருபோதும் முஸ்லிம் தலைமைத்துவத்தை ஒதுக்கப் போவதில்லை. வீணாகச் சந்தேகப்பட்டு கண்டபடி அறிக்கை விடாதீர்கள். எங்களுடன் சேர்ந்து வேலை செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறோம்..

+ முஸ்லிம்களும் தனிக் குழுவாக பேச்சு மேசைக்கு வருவதாயின் அதற்கு எமது அனுமதி தேவை. முஸ்லிம்கள் தொடர்பாக பேச்சு நடத்தும் போதுதான் நீங்கள் வரலாம்.

+ ஐமிச்சம் கொள்ளாமல், சந்தேகப்படாமல் எங்களுடன் இணைந்து செயற்படுங்கள். ஹக்கீம் குழுவினரும் எங்களுடன் பேசிய பின், சந்தோஷமாகத்தான் போகிறார்கள். தங்களை புலிகள் அங்கீகரித்து விரைவாக கூப்பிடுவார்கள் என்று.

+ தமிழ் மக்களின் உரிமைக்காக நாங்கள் போராடினாலும் முஸ்லிம் மக்களையும் எமது மக்களாகவே கருதுகிறோம்.

இவைகளே நமது மக்களுக்கு விடுதலைப்புலிகள் தெரிவித்திருக்கும் சமகால, எதிர்காலம் குறித்த அரசியல் செய்தியாகும்.

இலங்கை முஸ்லிம்களின் அவலமிக்க இவ் அரசியல் சூழலுக்கு மத்தியில் அமெரிக்க ஆக்கிரமிப்பு அரசு, ஈராக் மக்கள் மீது தனது கொலைக்கரத்தை விரித்திருக்கிறது. ஆதிக்க சக்திகள் சுதந்திர தேச மக்கள் மீது விரித்திருக்கும் அடக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழுவதும் குரல் எழுப்புவதும் அனைத்து முஸ்லிம்களினதும் கடமையாகும்.

அடக்கு முறையும் கொடும் வஞ்சகமும் ஒரு போதும் நிலைத்து நிற்கப் போவதில்லை. அதனை தகர்ப்பதற்கான சுதந்திரப் போராளிகள் உலகின் நாலாபக்கமும் தோன்றிக் கொண்டே இருப்பார்கள். இதுவே நமது நம்பிக்கையுமாகும்.

அன்புடன்
பிரதம ஆசிரியர்

---

## இலவச கண் வைத்திய முகாம்

ஐம்இய்யதுஷ்ஷபாப் நிறுவனம் நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 2003 ஏப்பிரல் மாதம் 10,11,12,13,14 ஆம் திகதிகளில் இலவச கண் வைத்திய முகாம் ஒன்றை நடாத்த திட்டமிட்டுள்ளது. கண்களில் விழி வெண்திரை (Cataract) நோய் வந்தவர்களுக்கு மட்டும் முற்றிலும் இலவசமாக சத்திர சிகிச்சை செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கொழும்பு நகரம் தவிர வெளி மாவட்டத்திலுள்ளோர் கண் வைத்தியரிடம் தமது நோயை விழி வெண்திரை (Cataract) உறுதிப்படுத்தியபின் கீழ்காணும் தொலைபேசி இலக்கத்துடன் (சனி ஞாயிறு தவிர்ந்த நாட்களில் மட்டும்) தொடர்பு கொண்டு உங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம். தகுந்த கண் வைத்தியரிடம் பரிசோதித்து அத்தாட்சிப்படுத்தியவர்களுக்கு மட்டுமே மேற்படி சத்திர சிகிச்சை நடைபெறும் என்பதை கவனத்திற் கொள்ளுமாறு அன்பாய் வேண்டிக் கொள்கின்றோம்.

இன மத, பேதமின்றி இந்நோய் உள்ள அனைவரும் விண்ணப்பித்து பயன்பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு :

(கொழும்பு, கொழும்பை அண்டிய பகுதியில் உள்ளவாகளுக்கு ஏப்ரல் 10,11,12,13,14 திகதிகளில் வெள்ளவத்தை ரோயல் வைத்தியசாலையில் கண் பரிசோதனை நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.)

தொடர்புகளுக்கு
Association of Muslim Youth of sailan
18, Grenier Road, Colombo 08.
T.P. 074-401950, 074-615469



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org